பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 26 சனிக்கிழமை (12-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:319

# தமிழ் மக்கள் மீது பரவலாகத் தாக்குதல்கள்:
# திருமலையில் ஹர்த்தாலின்போது
# கிரனேட் வீச்சு! துப்பாக்கிச் சூடு!!

## மூவர் பலி; 38 பேர் காயம்
## நகரில் ஊரடங்கு அமுலில்

திருகோணமலை,ஒக்ரோபர்12

**திருக்கோவில், காஞ்சிரங்குடாப் பகுதியில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற மனிதப் படுகொலைகளைக் கண்டித்து திருகோணமலை நகரில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்க முற்பட்ட தமிழர்கள் தாக்கப்பட்டனர். கிரனேட் வீசப்பட்டது; துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களில் மூன்று தமிழர்கள் உயிரிழந்தனர்; 38 தமிழ் மக்கள் காயமடைந்தனர். இச்சம்பவங்களை அடுத்து நகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.**

திருக்கோவில், காஞ்சிரங்குடா மனிதப் படுகொலைகளைக் கண்டித்து திருகோணமலையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி திருகோணமலை பொதுமக்கள் ஒன்றியம் நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தது.

இதற்கு அமைய திருகோணமலை நகரம் நேற்றுக் காலையிலேயே செயலிழந்தது. வீதிகள் வெறிச்சோடின. போக்குவரத்துச் சேவைகள் நடைபெறவில்லை. நகரிலிருந்து வெளியூர்களுக்கான சேவைகளில் ஈடுபட்ட பஸ்கள், லொறிகள் முடங்கின. கடைகள், அலுவலகங்கள், பாடசாலைகள் திறக்கப்படவில்லை. பொதுச் சந்தை, மீன் சந்தை போன்றவை ஆளரவமற்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### தளபதிகள் பொலீஸ்மா அதிபர் திருமலைக்கு

திருகோணமலை,ஒக்.12

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை அடுத்து நிலைமையை நேரில் ஆராய முப்படைத் தளபதிகளும் பொலீஸ் மா அதிபரும் இன்று அங்கு விரைகின்றார்கள்.

அங்கு புலிகளின் தலைவர்களைச் சந்தித்து அவர்கள் விரிவாகக் கலந்துரையாடுவார்கள்.

இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா அரசின் பணிப்பின் பேரில் நேற்று அங்கு சென்றுள்ளார்.

## அமுக்க வெடி வெடித்ததில் ஒருவர் உடல் சிதறிப் பலி!
### மட்டுவிலில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு சமீபமாக வயல்வெளியில் புதைந்து கிடந்த அமுக்க வெடி ஒன்று நேற்று மாலை 4.00 மணியளவில் வெடித்ததில் ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

அந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த விஸ்வலிங்கம் சிவபாலன் (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தமது வயலைப் பண்படுத்தும் வேலையில் அவர் வழமைபோன்று நேற்றும் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மண்வெட்டியால் கொத்திய சமயம் அது புதைந்து கிடந்த அமுக்க வெடியில் பட்டு இந்த அனர்த்தம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

### யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் நேற்றிரவு 8.30 மணியளவில் அடையாளந்தெரியாத குழு ஒன்றினால் அவரது வீட்டுக்கு அருகில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளார்.

யாழ்.இராசாவின் தோட்டம் பகுதியில் வசிக்கும் அதிபரின் வீட்டுக்குச் சமீபமாகவுள்ள இரு மதுபான விற்பனை நிலையத்தைச் சேர்ந்தவர்கள் சில தினங்களுக்கு முன்னர் அவரின் வீட்டுக்குச் செல்லும் ஒழுங்கையில் கைகலப்பில் ஈடுபட்டனர் என்றும் -

"இந்த ஒழுங்கையில் நின்று கைகலப்பில் ஈடுபடாதீர்கள்" - என்று அதிபர் அவர்களிடம் சத்தமிட்டார் என்றும் -

அதன் எதிரொலியாகவே அதிபர்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் படுகொலையை கண்டித்து இன்று ஹர்த்தால்
### குடாநாட்டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.12

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் காஞ்சிரங்குடாவில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் -

அங்கு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் -

யாழ்.குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க பொது அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

இன்றைய ஹர்த்தாலால் பார்மஸிகள், தேநீர்க் கடைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய - சேவைகள் யாவும் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும் எனத் தெரிகிறது.

கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை மூடியும் -

போக்குவரத்து மற்றும் சேவைகளை நிறுத்தியும் - பூரண ஆதரவு தருமாறு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் இன்று துக்கதினம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

திருக்கோயில், காஞ்சிரங்குடாவில் பொதுமக்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து வடக்கு - கிழக்கில் இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை விடுத்த வேண்டுகோளின் பேரில் மக்கள் இன்றைய துக்கதினத்தை உணர்வுபூர்வமாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வன்னி, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் விரிவான ஏற்பாடுகளைப் பொது அமைப்புக்கள் மேற்கொண்டுள்ளன.

கறுப்புக் கொடிகளை வணங்களிலும் சகல இடங்களிலும் கட்டியும் - ஒலி பெருக்கி மூலம் சோக கீதங்களை இசைத்தும் - துக்கதினத்தைக் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

கறுப்புப்பட்டிகளை அணிந்து அன்றாடப் பணிகளில் ஈடுபடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சில மாவட்டங்களில் பூரண ஹர்த்தாலுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. (ம-3)

## ஒத்தாச்சிமடம் அருகே மக்கள் மீது தாக்குதல்

கிழக்கில் பொலீஸாரின் அட்டகாசம் தொடர்கிறது. நேற்று வீதியில் சென்ற பொதுமக்கள் மீது மிருகத்தனமாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோட்டைக் கல்லாறுக்கும் ஒத்தாச்சிமடத்திற்கும் இடையில் உள்ள பாலத்தருகில் நேற்றிரவு ஏழு மணியளவில் 'ட்ரக்'கில் வந்திறங்கிய பொலீஸார், பொல்லுகளாலும், கம்பிகளாலும் வீதியில் சென்ற பொதுமக்கள்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## உறவினர்கள் தரையில் விழுந்து புலம்ப ஒரே இடத்தில் 7 சடலங்களும் அடக்கம்

காரைதீவு,ஒக்.12

திருக்கோவில், காஞ்சிரங்குடாவில் படுகொலை செய்யப்பட்ட ஏழு பேரின் சடலங்களும் உறவினர்கள் தரையில் விழுந்து அழுது புலம்ப நேற்று ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன. இறுதி அஞ்சலிக்கூட்டம் திருக்கோவில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயமருகில் நடைபெற்றது.

மலர்மாலைகளால் மூடப்பட்டிருந்த ஏழு சடலப் பெட்டிகளும் அருகருகே வைக்கப்பட்டிருந்தன. ஆசிரியர் எஸ். விவேகானந்தன்(வேலூரான்) தலைமையில் இறுதி அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட எம்.பி. அரியநாயகம் சந்திரநேரு உட்படப் பல முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தி உரையாற்றினர். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் உரையாற்றினர். 2000இற்கு மேற்பட்ட மக்கள் அந்த இடத்தில் கூடியிருந்தனர்.

பலியான ஏழு பேரின் சடலங்களும்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைப் பட்டமளிப்பு நாளையே இடம்பெறும்

யாழ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு வைபவம் இன்று இடம்பெறமாட்டாது. அது நாளையே இடம்பெறும் என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தால் காரணமாக ஏற்பட்டுள்ள சூழலில் பட்டமளிப்பு விழாவை நடத்துவதா இல்லையா என்பது பற்றி பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும்

(18 ஆம் பக்கம் பார்க்க)



திருமலை நகரத்தில் ஹர்த்தாலால் நேற்று கடைகள் மூடப்பட்டு கிடப்பதையும் வீதியின் குறுக்கே டயர்கள் போட்டு எரிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

## காஞ்சிரங்குடா படுகொலைகளுக்கு கடும் கண்டனம்

# குடாநாட்டின் பல அமைப்புகளும் இன்றைய ஹர்த்தாலுக்கு ஆதரவு

யாழ்ப்பாணம்,ஒக்.12

திருக்கோவில் காஞ்சிரங்குடா அதிரடிப்படையினரால் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து குடாநாடு தழுவிய ஹர்த்தாலுக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்புக்கு பல்துறை சார்ந்த அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறும் அவை வேண்டுகோள் விடுத்துள்ளன.

### இலங்கை மெதடிஸ்த திரு அவை

அம்பாறை காஞ்சிரங்குடாப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவமானது மக்கள் மத்தியில் மிகுந்த துயரத்தையும், எதிர்காலம் பற்றிய ஐயப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது.

புரிந்துணர்வு அடிப்படையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு சமாதானத்திற்கான சூழல் கனிந்து வரும் இக்காலத்தில், அதற்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் பலரும் எச்சரிக்கையாக இருக்கின்ற போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை பகுத்தறிவற்ற ஒரு தன்மையையே காண்பிக்கின்றது.

விடுதலைப் புலி உறுப்பினர்களாய் இருப்பினும் கூட அவர்கள் மீது எவ்வித தாக்குதல்களும் நடத்தமுடியாது என்னும் நிலைமை நாட்டில் நடைமுறையில் உள்ளபோது, பொது மக்கள்மீது இப்படிப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை வேதனைதருவதாய் அமைவதுடன் அது மிகுந்த கண்டனத்திற்கு உரியதாகும்.

இப்படியானதொரு சம்பவம் இனி ஒருபோதும் நிகழாதபடி அரசு தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக செயற்படுத்துவதுடன், அவை கட்டாயமாக மக்களுக்குத் தெரிவிக்கப்படவும் வேண்டும். அவை சமாதானம் பற்றிய நம்பிக்கை தருவனவாகவும், சமாதானத்திற்கெதிராகச் செயற்படுவதை வெளிமையாக அச்சுறுத்துவனவாகவும் அமையவேண்டும். இதற்கு ஒருமித்துக்குரல் கொடுப்பது அனைத்து சமூகத்தினதும் கடமையாகும்.

### தமிழர் விடுதலைக் கூட்டணி

அம்பாறை திருக்கோயில் காஞ்சிரங்குடாவில் விசேட அதிரடிப்படையினரால் அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவத்தையும் திருமலையில் 11-10-2002 இல் நடைபெற்ற கைக்குண்டுவீச்சுச் சம்பவத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் இயல்பு வாழ்க்கை மீண்டும் திரும்பிக்கொண்டுள்ள இவ்வேளையில், மக்கள் தமது அன்றாடப்பிரச்சினைகளுக்காக தமிழர் பிரதேசத்தில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் இலங்கை அரச படையினர் இவ்வாறான கொடூரத் தாக்குதல்களை நடத்தியதைக் கண்டித்தும் இறந்த எம் உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தும் முகமாகவும் பூரண துக்கத்தை அனுஷ்டித்தும் இன்று சனிக்கிழமை யாழ்குடாநாட்டில் பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு யாழ். குடாநாட்டு மக்களை அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். சகல இடங்களிலும் கறுத்தக் கொடிகள் கட்டி சோக கீதங்களை இசைக்கவிட்டு ஒத்துழைக்குமாறு எம் இனிய உறவுகளை தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுக்கொள்கின்றது.

### சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

விசேட அதிரடிப்படையினிற்கு எதிராக அப்பகுதி மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயகரீதியான வெகுஜனப்போராட்டத்தின் போது அப்பாவிப் பொதுமக்கள் ஏழு பேர் கோரத்தனமாக சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டதுடன் 30 இற்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். இச்செயலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் சமாதான முயற்சிகள் அமைதியாகவும் வேகமாகவும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், ஸ்ரீலங்கா அதிரடிப் படையினரின் காடைத்தனமாக இத்தாக்குதல் சமாதானத்தைக் குழப்புவதற்காகவென திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகவே கருதவேண்டியுள்ளது.

இதன்மூலம் வடக்கு - கிழக்கில் ஸ்ரீலங்கா இனவாத இராணுவம் குடிகொண்டிருக்கும் வரை சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத நிலையே தொடரும். இக்கொலை தொடர்பான கண்டன ஊர்வலத்தில் ஈடுபட்ட திருமலை மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தாக்குதல மேற்கொண்டதில் சிலர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறையில் படுகொலைசெய்யப்பட்டவர்களில் ஐந்திற்கும் மேற்பட்டோர் பாடசாலை மாணவர்களாவர். இவ்வாறு மாணவர்களை படுகொலை செய்வதனை நாம் மிகவன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கொலை வெறிகொண்டு மக்களை கொலை செய்த படையினரை அரசு தண்டிக்க வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல்கள் அப்பாவித் தமிழ்மக்கள் மீது நடைபெறாதிருப்பதனை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேறும் வரை இராணுவத்தினருக்கு எதிராக சாத்வீகமான போராட்டங்களை அமைதியானமுறையில் ஆரம்பிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை உருவாகும்.

### யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய அப்பாவிப் பொதுமக்கள் மீது அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தி ஏழு பேரை கொன்றதையும் இருபதுக்கும் மேற்பட்டோரை காயமடையச் செய்தமையையும் கண்டித்து வடக்கு - கிழக்கில் இன்று அனுட்டிக்கப்படும் துக்கதினத்திற்கு கூட்டுறவுத்துறை சார்ந்த சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

சகல கூட்டுறவு நிறுவனங்களையும் பூட்டி, பூரண கடையடைப்பு நடத்த வேண்டும் எனவும் - ஹர்த்தாலை அனுஷ்டிக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கிறோம்.

இந்த அராஜகத் தாக்குதலை தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்கம் கொண்டதாகவே பார்க்கத் தோன்றுகிறது. எனவே, அதிரடிப்படையினரின் நடவடிக்கையை நாம கண்டிக்கிறோம் என்பதை இந்தத் துக்கதினம் உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் முகாம்களை அமைத்துக்கொண்டு, இயல்பு வாழ்க்கை திரும்ப வேண்டும் என்ற மக்களின் ஏகோபித்த குரலுக்கு இடைஞ்சலாக இருந்து கொண்டு அவர்களது நியாயமான உணர்வு வெளிகாட்டல்களை அடக்கி ஒடுக்கி அடாவடித்தனமாக தாக்குதல நடத்திக்கொலை செய்வதும், காயப்படுத்துவதும் மிக அநாகரிகமான செயல் என்பதையும் இந்தத் துக்கதினம் மூலம் நாம் ஒருமித்த குரலில வெளிக்காட்ட வேண்டும்.

### யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

விசேட அதிரடிப்படையினர் மக்கள மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான மனிதப் படுகொலையை நாம மிகவும வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஒருகொடூர யுத்தத்திற்கு முகங்கொடுத்த மக்கள் மத்தியில் ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நிம்மதியையும் நீதியையும் வழங்குமென்று எதிர்பார்த்த எம்மத்தியில் அரச படைகள், குறிப்பாகச் ஸ்ரீலங்கா அதிரடிப்படைகள் இழைத்து வரும் மனிதாபிமானமற்ற கொலைகளையும் கொடுமைகளையும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறோம்.

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை உருவாக்கும் நோக்குடன் செய்துகொள்ளப்பட்ட சில ஒப்பந்த வசதிகளும் நல்லெண்ண நடவடிக்கைகளும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணான வகையில் சனநெருக்கடி நிறைந்த தமிழரின் நகரங்கள், பட்டினங்களில் உள்ள சோதனைச் சாவடிகளையும் தடைகளையும் அகற்றுவதற்கு சிங்கள ஆயுதப் படையினர் மறுத்து வருவதுடன் பொதுமக்களை மிரட்டியும் துன்புறுத்தியும் வருகின்றனர். இறுதியில் கொலை செய்யும் அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது. இதனால் சமாதானத்தின்பால் எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் நிம்மதியும் இடிந்து வருகிறது.

மக்கள் தமது ஜனநாயக உரிமைக்காக, வாழும் உரிமைக்காக அஹிம்சை வழியில் போராட முற்பட்ட போது சிங்கள தேசம் தனது ஆயுத பலத்தினாலும் படை பலத்தினாலும் அடக்க முற்படுவதும் அழிக்கப் புறப்படுவதும் எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாதது; ஜீரணிக்க முடியாதது. இதனை சிங்கள தேசத்திற்கும் அதன் ஆயுத படைகளும் ஏன் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக் காட்டும் வகையில் இன்று சனிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் யாழ்மாவட்டம் முழுவதும் துக்கதினம் ஹர்த்தால், கதவடைப்பு போராட்டம் எம்மக்கள் சார்பில் நடத்தப்படவிருக்கின்றது. இப்போராட்ட முஸ்தீபுக்கு அனைத்து மக்களும், அரச, அரசசார்பற்ற கூட்டுறவு, கல்வி, வர்த்தக, போக்குவரத்து, பொது நிறுவனங்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி எமது உணர்வை சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் எடுத்துக்காட்டுவோம் என்று அறைகூவல் விடுகின்றோம்.

### முச்சக்கரவண்டி சேவை சங்கம்

காஞ்சிரங்குடாவில் பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் உயிரிழந்தவர்களின் துயரிலும் நாம் பங்குகொள்கிறோம்.

இன்றைய சமாதான சூழ்நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பும் செயல்கள் இடம்பெற அனுமதிக்கக் கூடாது. சமாதானத்தில் அவாவுள்ள சகலரும் இன்றைய போராட்டத்தில் இணைய வேண்டும். சகல ஓட்டோ சாரதிகளும் இந்தப் போராட்டத்தில் இணைய வேண்டும்.

### யாழ்.நல்லூர் பொது அமைப்புக்களின் ஒன்றியம்

சமாதான சூழ்நிலையைக் குழப்பும் நடவடிக்கைகள் மட்டக்களப்பில் ஆரம்பித்து நேற்றுத் திருகோணமலைக்குப் பரவிவிட்டன. இந்த நடவடிக்கைகளை சமாதானத்தில் நாட்டம் உள்ள சகலரும் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும்.

சகல சேவைகளையும் ஸ்தம்பிதம் அடையச் செய்து சகலரும் இன்றைய ஹர்த்தாலில் தங்கள் பங்களிப்பை உணர்வுபூர்வமாக அளிக்க வேண்டும். உயிரிழந்த எமது உடன்பிறப்புகளுக்காக அஞ்சலியையும் வெளிப்படுத்த வேண்டும். (ம)

# கோழைகளுக்கு வறட்டுத்தனமான உற்சாகம் யுத்தநிறுத்தம் காரணமாக கிடைத்திருக்கிறது

## திருமலைச் சம்பவம் குறித்து சம்பந்தன் அறிக்கை

கொழும்பு,ஒக்.12

யுத்தநிறுத்தம் காரணமாக கோழைகளுக்கு வறட்டுத்தனமான உற்சாகம் கிடைத்திருக்கின்றது. அதனையே திருகோணமலையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் காட்டுகின்றன.

- இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார் திருகோணமலை மாவட்ட எம்.பியும், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

திருகோணமலையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருக்கோவில் காஞ்சிரங்குடா என்ற கிராமத்தில் பலியான தமிழ மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக, ஒரு சமாதான ஹர்த்தால் திருமலையில் நேற்று இடம்பெற்றது.

அவ்வேளையில், 'சிறிமாபுர' என்னும் இடத்தில் இருந்து சட்டவிரோதமான சக்திகள் சில ஒன்றுகூடி அருகில் திருக்கடலூர் என்னும் கிராமத்தில் வாழுகின்ற தமிழ் மக்கள் மீது 'கிரனேட்' தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தினர்.

சற்று நேரத்துக்குப் பின் இன்னும் ஒரு சட்டவிரோதமான குழு 'அபையபுர' என்னும் இடத்தில் கூடி அநுராதபுரச் சந்திக்கும் அபையபுரவுக்கும் இடையிலுள்ள 'அன்புவெளிபுரம்' பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் மீது 'கிரனேட்' தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலும் நடத்தினர்.

இத்தாக்குதல்கள் காரணமாக இதுவரையில் மூன்று தமிழர்கள் உயிரிழந்திருப்பதுடன் மேலும் 36 தமிழர்கள் காயமடைந்துள்ளார்கள். இவர்களில் 9 பேரின் நிலைமை கவலைக்கிடமளிப்பதாக இருக்கின்றது. இத்தாக்குதல்களின் காரணமாக இரண்டு 'பொலீஸ் உத்தியோகத்தர்கள் சிறு காயமுற்றுள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.

39 தமிழர்கள் இறந்தும், காயமடைந்தும் உள்ளார்கள் என்பது பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த சட்டவிரோதச் சக்திகள் எந்தளவிற்கு தமிழ மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து இருக்கின்றன என்பதை மிகவும் உரமாகவும், தெளிவாகவும் எடுத்துக்காட்டுகின்றது.

பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் கூட எவ்வித காயத்திற்கும் உட்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கும் நாம் எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம.

அப்பாவித் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதல்களை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தாக்குதல்கள் சமாதான முயற்சியை குழப்புவதற்கு எடுக்கப்பட்ட திட்டமிட்ட - இன்னுமொரு நடவடிக்கை என நாங்கள் கருதுகின்றோம்.

இத்தகைய கோழைத்தனமான தாக்குதல் இடம்பெற்றபொழுது பதில் தாக்குதலில் ஈடுபடாமல் அமைதியைப் பாதுகாத்த எமது தமிழ் மக்களுக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் அதேவேளையில், சமாதன முயற்சியைக் குழப்புவதற்கு திட்டமிட்டு செயற்படுபவர்களுக்கு துணைபோகாமல், எவ்வளவு ஆத்திரமூட்டப்பட்டாலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமிழ்மக்கள் அமைதியைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

மேலும், ஏறத்தாழ 99 வீதம் பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கும் ஆயுதப்படையினரும் ஏறத்தாழ 95 வீதம் பெரும்பான்மைச் சமூகத்தைக் கொண்ட பொலீஸ் துறையும்- அதிலும் விசேடமாக கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் - தமிழ் மக்களுக்கு தேவையான பாதுகாப்பை அளிப்பதற்கு மன உறுதியோ, ஆற்றலோ உள்ளவர்களாகத் தென்படவில்லை. இதனை அரசுக்கு சுட்டிக்காண்பிப்பது எமது கடமையென நாம் கருதுகின்றோம.

இந்தப் பாரதூரமான குறை மிக விரைவில் நீக்கப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

கோழைத்தனமான தாக்குதல்களுக்கு தமிழ் மக்கள் பலியாகாமல், அவர்களைப் பாதுகாப்பது அரசின் கடமைஎன்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் தனது நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமாயின், யுத்தநிறுத்தத்தின் காரணமாக வறட்டுத்தனமான உற்சாகத்தைப் பெற்றிருக்கும் கோழைகளை சட்டம் தனது கரங்களுக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என நாம் கருதுகின்றோம்.

பாரபட்சம் அற்ற விசாரணையை நடத்தி, பாரதூரமான குற்றங்களை இளைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நாம் அரசிடம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம். இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் குடும்பங்களுக்கு போதிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கின்றோம் - என்று உள்ளது.

## பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.12

இன்று இடம்பெறவிருந்த ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க கிளைக் குழுத் தேர்தல் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செகனகசபாபதி அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

# தாயகம், தேசியம், தன்னாட்சி மூன்றையும் அடைவதே எம் இலக்கு

## மகளிர் தினத்தில் கேணல் சூசை உரை

யாழ்ப்பாணம்,ஒக்.12

தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகிய மூன்றையும் அடைவதே எமது நோக்கு. அந்த நோக்கை அடையும்வரை நாம் எமது படையணிகளை மேலும் சிறப்பாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டியது அவசியம்.

- இவ்வாறு தெரிவித்தார் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை.

நேற்று முன்தினம் கிளிநொச்சி நகரில் இடம்பெற்ற தமிழீழ மகளிர் எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய நாங்கள், எமது படையணிகளைக் கொண்டு இவ்வாறான அணிவகுப்புகளை நடத்துவது எமது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே அன்றி வேறு எவரையும் பயமுறுத்தவோ அல்லது மற்றவர்களின் மண்ணை ஆக்கிரமிப்பதற்காகவோ அல்ல. இதனை சிங்கள மக்களுக்கும் உலகுக்கும் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.


இன்று நிலவும் சமாதான சூழலை ஏற்படுத்துவதற்கு நாம 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களையும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களையும் ஏராளமான சொத்துக்களையும் விலையாகக்கொடுத்துள்ளோம். இதனை எமது மக்கள் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும். எமது தேசியத் தலைவர் ஆரம்ப காலத்தில் ஆண் போராளிகளை மட்டுமே கொண்டு எமது போராட்டத்தை வழிநடத்தி வந்தார். 1984 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பெண்களும் எமது போராட்டத்தில் இணைந்து கொண்டு தலைவருக்கு பின்பலமாகச் செயற்பட்டார்கள்.

அந்த வரிசையில் இணைந்து (16ஆம் பக்கம் பார்க்க)


# மகளிர் தின எழுச்சியின் மற்றும் சில பார்வைகள்







## மன்னங்குளம் சமர்



மகளிர் தின எழுச்சி நிகழ்வின் போது பெண்புலிகள் சேனையால் நிகழ்த்திக் காட்டப்பட்ட மன்னங்குளம் சமரின் தாக்குதல் மாதிரியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பெண் புலி ஒருவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதை முதலாவது படத்திலும் தங்கள் நிலைகளில் இருந்தவாறு தாக்குதல்நடத்தும் வீரமங்கைகளை இரண்டாவது படத்திலும் உயிரிழந்த இராணுவச் சிப்பாய்களையும் உயிரிழந்த பெண்புலிகளையும் அடுத்துள்ள படங்களிலும்காணலாம். *(படங்கள்:அற்புதன், தேவராஜன்)*



அணிவகுப்பின் சிலகாட்சிகளையும் வீதியோரத்தில் நின்றவாறு அணிவகுப்பை ஆவலுடன் பார்த்து நிற்கும் மக்களையும் படங்களில் காணலாம்.



கலந்துகொண்ட சனசமுத்திரத்தின் ஒரு பகுதி....



## புலமைப் பரிசில் புகழோடு இன்றைய பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள்



யா/புனித ஜோன்பொஸ்கோ மாணவன்

செல்வன்

### செ.சிந்துகன்

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை - 2002இல 134 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த செல்வன் செல்வரஞ்சன் சிந்துகன அவர்களை இன்று (12.10.2002) சனிக்கிழமை அவரது 10ஆவது பிறந்த நாளில் பல்கலையும் கற்று மேலும் பல பரீட்சைகளில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்று நன்றாகக் கல்வி கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

*கண்டி வீதி,*
*எழுதுமட்டுவாழ்* (9371)

அன்புடன் அம்மப்பா,
அம்மம்மா, பெரியமாமா,
குட்டிமாமா, சித்தா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முன்னாள் மன்றத் தலைவரும், எமது நண்பனுமான

### பெ.லியோஜினஸ் அவர்கள்

இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் "வணிக மாணி" (B.Com.Acc.Spl.) பட்டத்தைப் பெறுவதையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் சிறக்கவும் வாழ்த்துகிறோம்.

- பாவைபூர் நண்பர்கள்.

(9373)

**COMPUTER HARD WARE ENGINEERING**

அடுத்த பிரிவு ஆரம்பம்: **12.10.2002** முதல்
காலம் 2மாதம்: வார இறுதிநாள் வகுப்புக்கள்
ASSEMBLING, TROUBLE SHOOTING, NETWORKING
செய்முறைகளுடன் கற்பிக்கப்படும்.
தொழில் செய்பவர்கட்கு ஏற்றவகையில்
நேர அட்டவணையில் மாற்றம் செய்யலாம்.

S.P.I 3200/=

**SIVAKI PROFESSIONAL INSTITUTION**
CAMPUS JUNCTION PALALY ROAD
THIRUNELVELY. T.P.: 0777 722861
(9356)

## அகமிக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை முன்னாள் அதிபரும் சிறந்த சமூகசேவையாளருமான

### உயர்திரு.ஆ.சபாரெத்தினம்

அவர்கள் 12.10.2002இல் நடைபெறும் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்

"கலாநிதிப் பட்டம்"

பெறுவதையிட்டு அவரை அகமிக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயம், ஊர்காவற்றுறை. (9369)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர் சங்கம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 07 - 04 - 1932



உதிர்வு 14 - 09 - 2002

### திருமதி கமலாதேவி கணேஷ்

*(கணேஷ் ரீச்சர்)*

நாளை (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மருதடி,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (9367)

*உங்கள் நினைவில்:*
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 'குமுதினி' சேவையில் ஈடுபடாவிட்டால் போராட்டம்

நெடுந்தீவு,ஒக்.12

நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்துச் சேவையில் உள்ள அரச படகான 'குமுதினி' மோட்டார் படகு அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக சேவைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படாது விடின் யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தின் முன்பாக மறியல் போராட்டம் செய்ய நெடுந்தீவு சனசமூக நிலையங்களின் சமாஜம் தீர்மானித்துள்ளதாக சமாசத் தலைவர் அருந்தவசீலன் தெரிவித்தார். (ஒ-111)

## பெற்றோர்தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.கார்மேல் பாலர் பாடசாலையின் பெற்றோர்தின விழா இன்று காலை 9.30மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அருட் திரு.ஜே.பி.ஈ.செல்வராஜா அடிகளார் இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

## 25ஆண்டுகளாக புனரமைக்காத வீதிகள்

மானிப்பாய்,ஒக்.12

மானிப்பாய் வடக்கிலுள்ள உச்சியோடைக்கிராமத்தின் ஐந்து வீதிகளில் இராஜகாரியர் வீதி, உச்சியோடை வீதி, செக்காலை வீதி ஆகியன கடந்த இருபத்தைந்து வருடகாலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்து வருகின்றன.

இவ்வீதிகளிலுள்ள குப்பை கூழுங்களை மானிப்பாய் வலி.தென் மேற்கு பிரதேச சபை அகற்றிவந்த போதும் இவை தற்போது கைவிடப்பட்ட நிலையிலுள்ளன. இவ்வீதிகள் மழைகாலம் ஆதலால் சேறும் சகதிகளாகி போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளன.

இராஜகாரியர் வீதியை இராணுவம் மூடி வைத்துள்ளதால், இவ்வீதியாலும் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அவலம் உள்ளது.

மழைகாலம் ஆகையால் இவ்வீதிகள் அவசியம் புனரமைக்கப்பட வேண்டும் எனப் பொது மக்கள் கோருகின்றனர். (ஒ-90)

## பதிவுகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.தொழிற்றுறைத் திணைக்களத்தில் நடைபெற்று வந்த வேலையற்ற இளைஞர், யுவதிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் -

ஏற்கனவே பதிவுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டவர்கள் மட்டும் தமக்குரிய தினங்களில் சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் -

தொழிற்றுறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.12

நல்லூர் வித்து மாணவர் சஞ்சிகை நிறுவனத்தினர் நடத்தும் கராத்தே சுற்றுப்போட்டி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு சஞ்சிகை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## சூரிய சக்தியில் இயங்கும் கணனி நிலையம்

பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அந்நாட்டில் வதியும் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் ஊடாக வன்னியில் சூரிய சக்தியில் இயங்கும் கணனிப் பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கு திட்டமிட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக பிரான்ஸ் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு இதற்கான நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.(ஒ)

## ஒலிநாடா வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.12

கோண்டாவில் கிழக்கு வல்லிபுரநாதர் ஆலயத்தின் ஏற்பாட்டில் இறை கீர்த்தனைகள் அடங்கிய ஒலிநாடா நாளை மறுதினம் நண்பகல் 12 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இந்த ஒலிநாடாவில் உள்ள கீர்த்தனைகளை பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் இயற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆற்றுகவே நல்ல அறம்



வித்துவான் கணேசரின் மேன்மை மிகுசீடனே!
தத்துவ கலாநிதியே சான்றோனே - இத்தரை
போற்றும் வைத்தீசப் புகழ்மணியே எஞ்ஞான்றும்
ஆற்றுகவே நல்ல அறம்.

*430, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-24188)

- பாரதி பதிப்பகம்.

## வதிரி தோற்பொருட் தொழிற்சாலையில் 1998,1999ஆம் ஆண்டுகளில் தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்

1998,1999ஆம் ஆண்டுகளில் இரு பிரிவுகளாக வதிரி தோற் பொருள்கள் பயிற்சித் தொழிற்சாலையில் பயிற்சிபெற்ற அனைத்து பயிலுநர், பயிற்றுநர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் 2002.10.16 ஆம் திகதி புதன்கிழமை பி.பகல் 1.00 மணிக்கு *78, கண்டி வீதியிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை அலுவலகத்தில்* நடைபெறவுள்ளது. வதிரி தொழிற்சாலை பற்றி முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதினால் அனைத்துப் பயிலுநர்களையும், பயிற்றுநர்களையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

(C/24184)

- கௌரவ செயலாளர் -
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை

## இளங்கலைஞர் மன்றம் வாணி விழாவும் கலை நிகழ்ச்சிகளும்

நாளை (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கும் விஜயதசமி நாள் வகுப்புகள் (15.10.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.00மணிக்கும் நடைபெறும்.

| வகுப்புகள் | ஆசிரியர்கள் |
|---|---|
| வாய்ப்பாட்டு: | திரு.விஸ்வநாதன் சிவஞானசேகரம் |
| | செல்வி சுகன்யா சிவானந்தம் |
| நடனம்: | செல்வி ரோகினி மருகவானர் |
| மிருதங்கம்: | திரு.சின்னையா துரைராசா |
| வயலின்: | செல்வி வனஜா கணேஸவாமி |
| வீணை: | திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக்குமரன் |

(9340)

மேற்படி நிகழ்வுகள் யாவும் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறும். வகுப்புகளில் சேரவிரும்புவோர் சமுகந்தரவும்.

நாளை (13.10.2002) ஞாயிறு நடைபெறும் நிகழ்ச்சிகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சட்டநாதர் வீதி, நல்லூர்.* இளங்கலைஞர் மன்றத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர் திருமதி எஸ்.சிதம்பரநாதன் (தேர்தல் அலுவலகம்) அவர்களின் ஏக புதல்வி

### செல்வி சுரேகா சிதம்பரநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.* (C/24183)

யாழ்.மாவட்டச் செயலக அலுவலர்களும், நலன்புரிக் கழக உறுப்பினர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலமுரளி ராசலட்சுமி

தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலமுரளி ராசலட்சுமி அவர்கள் 10.10.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாலமுரளியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற இராசையா - அல்லிராணி (ஜேர்மனி) தம்பதிகளின் அன்பு மருமகளும் சீதாலட்சுமி, ஸ்ரீரங்கநாதன், பத்மநாதன், நாகம்மா, ராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலகிருஷ்ணன், பாலகௌரி, நடராஜா, இந்திராதேவி, கமலாதேவி, மாணிக்கவாசகர், லீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிறோஜினி, பிரசாந், ஐஸ்வினி, பிரசாந்தினி, நிசாந்தினி, நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானவேல்க்குமரன், மாலதி, வசுமதி, கேதீஸ்வரன் ஆகியோரின் அருமைச் சிறிய தாயாரும் றஜனி, சாமினி, சர்மிளா, நிரஜா, மயூரன், காலஞ்சென்ற கிரிஜா ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாத்தனை கிழக்கு,*
*தெல்லிப்பழை.* (9370)

தகவல்:
நடராஜா
(மைத்துனர்)

### அந்தோனிப்பிள்ளை விக்ரோறியா

சுருவிலைப் பிறப்பிடமாகவும், அக்கராயன் குளத்தை வசிப்பிடமாகவும், தற்போது வேலணை மேற்கு, வேலணையில் வசித்தவருமான அந்தோனிப்பிள்ளை விக்ரோறியா 10.10.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மேரியோசெப்பின் (வேவி), காலஞ்சென்ற அலெக்ஸ்சாண்டர் மற்றும் யோசேவ், சுவக்கீன், மேரியசிந்தா, அலோசியஸ், லூசியாபத்மினி (மெனிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(13.10.2002) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சுருவில் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வேலணை மேற்கு,*
*வேலணை.* (9374)

தகவல்:
அ.சுவக்கீன (மகன்)

உதயன்

## நியாயம் வழங்குக!

பசித்தவனுக்கு உணவா? புசித்து ஏப்பம் விட்டுக் கொண்டிருப்பவனுக்கு உணவா?

இலங்கை அரசின் போக்கைப் பார்க்கும்போது இந்தக் கேள்விதான் எழுகின்றது.

கடந்த இரு தசாப்தகாலப் போரினால் பெரிதும் சீரழிந்து போயிருப்பது வடக்கு - கிழக்குப் பிரதேசம்தான்.

அவசர நிவாரணப் பணிகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் எதிர்நோக்கிக் காத்திருப்பது வடக்கு - கிழக்குத்தான். யுத்தத்தின் கோரப்பிடியில் இருந்து மீண்டு, இயல்பு வாழ்க்கைக்கு - மற்றைய இடங்களின் சராசரி நிலைக்கு - திரும்பத் துடித்துக்கொண்டிருப்பது தமிழர் தாயகம் தான்.

ஆனால், அரசு தமிழர் தாயகத்தைப் புறக்கணிக்கின்றது.

தமிழரோடு செய்துகொண்ட யுத்தநிறுத்தத்தால் நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் வாய்ப்பு அரசுக்குக் கிடைத்துள்ளது.

அந்த வாய்ப்பின் பலனை நாட்டு மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் அரசு ஓரவஞ்சனை காட்டுகின்றது. பசித்தவனைப் பட்டினி கிடக்க விட்டு, வயிறு நிறையப் புசித்து அதனால் ஏப்பம் விடுபவனுக்கு மேலும் மேலும் உணவு படைக்கின்றது அரசு.

இதற்கு, கடந்த புதன், வியாழக்கிழமைகளில் நாடாளுமன்றில் அரசு சமர்ப்பித்த மின்சாரசபை சீர்திருத்தச் சட்டம் நல்ல உதாரணம்.

யுத்தத்தால் தமிழர் தாயகத்தில் சீரழிந்துபோன சேவைகளில் முக்கியமானது மின்சார விநியோகம்.

முக்கியமாக வன்னியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அப்பகுதிகளிலுள்ள இளைய தலைமுறையைச் சேர்ந்த சாதாரண பொதுமகன் 'மின்சாரம் கிலோ என்ன விலை?' என்று கேட்கும் நிலைதான் உள்ளது. அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு மின்சார சேவை கிட்டியிருக்கின்றது.

ஆனால், மின்சார விநியோகத்தை மக்களுக்குப் பரவலாக - சமச்சீராக - தடையின்றி - வழங்குவதற்கும் மின்சார விநியோக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குமான திட்டம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட மின்சாரசபைச் சீர்திருத்தச் சட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் முற்றாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு வழங்கப்படும் மொத்தத் தொகைக்கு சமனான நிதி அம்பாறை மாவட்டத்துக்கு மட்டும் வழங்கப்படுகின்றது. தருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தொகுதிக்கு ஒரு கோடி 20 லட்சம் ரூபா, திருகோணமலைத் தொகுதிக்கு 2 கோடி ரூபா. ஆனால், இவ்விரு மாவட்டங்களையும் விட இரண்டு மடங்கு அதிகமாக சேருவில தொகுதிக்கு ஆறுகோடி 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் சேருவில தொகுதிதான் அதிகமாக சிங்கள மக்களைக் கொண்ட பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னிப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு எந்தவித ஒதுக்கீடும் இல்லை.

தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு மட்டும் ஏன் இந்தப் பாகுபாடு? - இப்படி நாடாளுமன்றில் கேள்வி எழுப்புகின்றார் தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன்.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் சுயநிர்வாக அலகு ஒன்றை ஏற்படுத்துவதன்மூலம் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில், மின்விநியோக விவகாரத்துக்கு திருகோணமலை மாவட்டத்தை வட மத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்துடன் இணைத்து புதிய வலய நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தவும் இந்தப் புதிய சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் அரசு முழு மனதுடன் - நியாய மனப்பாங்குடன் - நடந்து கொள்கின்றதா என்ற சந்தேகத்தை அரசின் இந்தச் செயற்பாடுகள் ஏற்படுத்துகின்றன.

அரசு எல்லோருக்கும் பொதுவானது. அதனால் நதி - நியாயம் வழங்குவதில் ஆளுக்கு ஆள், இனத்துக்கு இனம், பிரதேசத்துக்குப் பிரதேசம் பாகுபாடு காட்டக்கூடாது.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி

## சம்மேளனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.12

இலங்கை சிறுகைத்தொழில் சம்மேளனத்தைச் சேர்ந்த 16 வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கக்கூடிய சிறுகைத்தொழில்கள் குறித்து ஆராய இங்கு வருகை தந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சிறுகைத்தொழில்கள், அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான வழிகள், தேவையான உதவிகள் ஆகியன தொடர்பாக இவர்கள் ஆராய்வார்கள்.

இன்று காலை யாழ். ப.நோ.கூ.சங்க கேட்போர்கூடத்தில் வர்த்தகப்பிரமுகர்களையும் சிறுகைத்தொழிலாளர்களையும் இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர்.

மேற்படி சம்மேளனம் தங்களது செயற்பாடு குறித்து விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

இலங்கை சிறுகைத்தொழிற்சம்மேளனம் 1963ஆம் ஆண்டில் ஒரு சிறுகைத்தொழில் சங்கமாகவே 27 ஆரம்ப உறுப்பினர்களுடன் ஆரம்பித்தது. 40 வருட வளர்ச்சியில் இன்று 360 உறுப்பினர்களுடன் சம்மேளனமாகப் பரிணமித்துள்ளது. 1976 இல் சங்கத்தின் 18 உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, குறிப்பிட்ட எண்ணிக்கையினரான கைத்தொழில் அதிபர்களைச் சந்தித்து கூட்டமொன்றையும் நடத்தியிருந்தனர். அக்காலத்தில் ஒருசில கைத்தொழில் அதிபர்களே உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தனர்.

இன்று நட்புக் கரங்களை நீட்டியபடி சம்மேளனத்தினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இது பிரதமரும், விடுதலைப் புலிகளின் தலைவரும் நோர்வேயின் அனுசரணையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டதால் சாத்தியமாகியிருக்கிறது.

சிறுகைத்தொழிற்சங்கம் என்ற நிலையிலிருந்து சம்மேளனம் என்ற அந்தஸ்திற்கு இதனை கிரம முறையாக வளர்த்தவர்கள் பலர். அவர்களால் தொடக்கப்பட்ட கைத்தொழில் நிறுவனங்கள் இன்றும் புகழுடன் திகழ்கின்றன. இன்று நாட்டின் முன்னணி கைத்தொழில் நிறுவனங்களுடன் நிகராக இலங்கைக் கைத்தொழிற்சம்மேளனம் திகழ்வதற்கு இந்த முன்னோடிகளின் அர்ப்பணிப்பே காரணமாகும்.

வடபிராந்தியத்தின் சிறிய, நடுத்தர கைத்தொழில் நிறுவனங்களை இணைத்து ஒரு சங்கத்தை நிறுவுவதே சம்மேளனத்தினரின் நோக்கமாக இருக்கிறது. இச்சங்கம் தனக்கென ஒரு நிறைவேற்றுக் குழுவை அமைப்பதுடன், அதன் தலைவர் இலங்கை சிறுகைத்தொழிற் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவில் பதவி வகிக்கும் ஒருவராக இருப்பார். வடபிராந்திய சங்கம் தனக்கென ஒரு யாப்பை இயற்றிக்கொள்ளும் அதே வேளை, தனது தாய்ச்சங்கமான சிறுகைத்தொழிற் சம்மேளனத்திற்கு ஆண்டுக்கொரு தடவை பத்தாயிரம் ரூபாவை தனது அங்கத்துவப் பங்களிப்பாக வழங்கும். அத்துடன், சிறுகைத்தொழிற் சம்மேளனத்துடன் மட்டுமே உறவுகொண்டதாயுமிருக்கும்.

இவற்றினடிப்படையில், கொழும்பிலிருக்கும் தாய்ச்சங்கம் வடபிராந்திய சங்க உறுப்பினர்களுக்கு வேண்டி ஒத்துழைப்பையும், நல்லாதரவுகளையும் வழங்கிவரும். சம்மேளனம் வெளிநாடுகளுக்கான வர்த்தகச் சுற்றுலாக்களையும், கொழும்பில் வர்த்தகக் காண்காட்சிகளையும் ஏற்பாடுசெய்யும். இவற்றில் வடபிராந்திய சங்க அங்கத்தவர்கள் பங்கேற்க அழைக்கப்படுவர். இதனால், சிறுகைத்தொழிற்றுறை மேலோங்கும் வாய்ப்புகள் அதிகரிக்கும் - என்றுள்ளது. (ஒ-3)

# எமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குக

## கொழும்புத்துறை மக்கள் கோரிக்கை

அரியாலை,ஒக்.12

அமைதிநிலை தோன்றியுள்ளபோதிலும் கொழும்புத்துறை மக்கள் தமது சொந்தவீடுகளில் மீளக்குடிமயரமுடியாத நிலையில் வாழ்ந்துவருகின்றனர். இந்த மக்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி நிவாரண உதவிகளைப்பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து சம்பந்தப்பட்ட மக்களின் கையொப்பங்களுடன் இக்கோரிக்கை அடங்கிய மகஜரை அகதிகளுக்கான ஐ.நா.தூதரக யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் அடங்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் மாணவர்களின் நலன்கருதியும் விநாயகர் ஆலயம் செல்லும் அடியார்களின் நலன் கருதியும் இராணுவத்தினரால் மூடப்பட்டுள்ள விபுலானந்தர் வீதியை போக்குவரத்திற்காக உடன் திறந்துவிடவேண்டும்.

★ விபுலானந்தர் வீதி, சுவாமியார் வீதி ஆகிய இடங்களில் மக்களின் வீடுகளில் தங்கியிருக்கும் இராணுவத்தினரை இடம்நகர்த்தி வீடுகளில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கவேண்டும்.

★ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், விநாயகர் ஆலயம், சனசமூக நிலையம் போன்ற பகுதிகளைச் சூழவுள்ள வீடுகளில் தங்கியிருக்கும் இராணுவத்தினரை வேறு இடத்திற்கு மாற்றி உதவவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-17)

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்கும் நோக்கம் இல்லை

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.12

"பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆனால், அச்சட்டத்தை ஆராய்ந்துபார்த்து சில சரத்துக்களைத் திருத்தும் முயற்சியிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம்" என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த பத்திரிகையாளர் மாநாடு நேற்றுமுன்தினம் முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அப்போது பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் விளக்கமளிக்கையில் கூறியதாவது:-

"இலங்கையில் இருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ஒத்த சட்டங்கள் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ளன. இச்சட்டங்கள் எப்போதும் மாறாமல் இருக்கவேண்டும் என்பதில்லை. நாட்டில் இப்போது சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, இச்சட்டத்தை மறுபரிசீலனை செய்ய உத்தேசித்துள்ளோம். இதற்காக அமைச்சரவைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

"பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் சில சரத்துக்கள் அவசியமானவைதானா என்பது ஆராயப்படும். அதன் பின்பு அவை நீக்கப்படலாம். பொருத்தமான இடங்களில் சட்டம் நெகிழ்வுபடுத்தப்படும்."

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் கூறினார்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை நீக்குமாறு புலிகள் இயக்கம் அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளதா என்று வினவப்பட்டபொழுது பதிலளித்த அமைச்சர் பீரிஸ் -

"புலிகள் இயக்கம் அவ்வாறான எந்த ஒரு கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி இதுபற்றி சில சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறது. உண்ணாவிரதத்தைக் கைவிட்டிருக்கும் களுத்துறை மற்றும் மட்டக்களப்பு சிறைக் கைதிகளும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை நீக்குமாறு அரசிடம் கோரவில்லை" - என்று தெரிவித்தார். (ஒ-10-12-ரி)

### நாளை

புரட்டாதி 27
ஞாயிற்றுக்கிழமை
(13.10.2002)
திதி : அட்டமி
பின்னிரவு 4.19 வரை.
நட்சத்திரம்: பூராடம்
மாலை 6.23 வரை.
சுபநேரம் : 9.02 - 10.32
ராகுகாலம் : 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

### கச்சாய் கடல் நீரேரியில்

# மீன்பிடிப்பதற்கு அனுமதி; ஆனால், வள்ளம் இல்லையே!

## மீனவர் சங்கத் தலைவர் கவலை

கொடிகாமம்,ஒக்.12

கடந்த ஏழு வருடங்களாக கடற்றொழிலுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த கச்சாய் கடல்நீரேரியில் வள்ளத்தைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கச்சாய் மீனவர் சங்கம் தென்மராட்சி பிரதேச செயலர், வடபகுதி இராணுவத்தளபதி மற்றும் பொது அமைப்புகளுடன் தொடர்புகொண்டு இந்த அனுமதியைப் பெற்றுள்ளது.

மேற்படி கடல்நீரேரியில் கடந்த 3 வருடங்களாக கரையில் இருந்து 2 கிலோமீற்றர் தூரத்துக்கு நடந்துசென்று மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி மீன்பிடி அனுமதி குறித்து கருத்துத் தெரிவித்த மீனவர் சங்கத் தலைவர் பி.சித்திரவேலாயுதம் -

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வள்ளத்தைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், தொழிலில் ஈடுபடுவதற்கு வள்ளங்கள் எவையும் இல்லை.

காரணம் தென்மராட்சி இடப்பெயர்வின்போது மேற்படி பகுதி மீனவர்கள் அனைவரும் தமது வள்ளங்களை கடற்கரையில் விட்டுவிட்டு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

பின்னர், மீளக்குடியமர்ந்தபோது இந்த வள்ளங்களில் பல முற்றாக அழிவடைந்தும், இன்னும் பல காணாமற்போயும் உள்ளன.

எனவே, மீன்பிடி உபகரணங்கள் கிடைக்கும்பட்சத்திலேயே கச்சாய் கடல்நீரேரிப்பகுதியில் மீன்பிடி சாத்தியமாகும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-ரி)

### யாழ்.பஸ்நிலைய மோதல் சம்பவம்:

# கைதான நான்கு பேரில் மூவருக்கு பிணை அனுமதி

## ஒருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கடந்த புதன்கிழமை யாழ்.பஸ்நிலையப் பகுதியில் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட நான்கு பேர் நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தனியார் மினிபஸ் சாரதி ஒருவருக்கும் போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தைதத் தொடர்ந்து மினிபஸ் சாரதிகளுடன் இணைந்து தாகுதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஓட்டோ சாரதிகள் மூவர் உட்பட நால்வரை யாழ்.பொலீஸார் கைதுசெய்தனர்.

இதுதொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்றது. தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 4 நபர்களின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டன. இதன் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா, ஓட்டோச் சாரதிகள் மூவரையும் தலா 25ஆயிரம் ஆள் பிணையில் செல்ல அனுமதித்ததோடு, 4ஆவது சந்தேகநபரான மினிபஸ் சாரதியின் வாக்குமூலத்தில் முரண்பாடு காணப்பட்டதை அடுத்து அவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன் மேற்படி சம்பவத்தில் காயப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பஸ் ஊழியர்களின் வாக்குமூலங்ளைப் பெற்று அது தொடர்பான அறிக்கைகளை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன் மன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ். பொலீஸாருக்கும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இச்சம்பவத்துடன் தொடர்புடையதென்ற சந்தேகத்தின் பெயரில் பொலீஸாரால் எடுத்துச் செல்லப்பட்ட மூன்று ஓட்டோக்களும் தலா ஒரு லட்சம் ரூபா பிணை முறையில் கொண்டு செல்ல நீதிவான் இ.த.விக்னரஜா அனுமதி அளித்தார். (ஒ-5)

# சடலங்களை நாங்களே தோளில் சுமந்துசென்று திருக்கோவில் வைத்தியசாலையில் சேர்த்தோம்!

## காஞ்சிரங்குடா சம்பவம் பற்றி திருகோவில் வாசிகள் தெரிவிப்பு!

காரைதீவு,ஒக்.12

"காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினர் சரமாரியாகச் சுட்டதில் இறந்த இருவரது சடலங்களையும் காயப்பட்டவர்களையும் நாமே எமது தோளில் சுமந்து நான்கு மைல் தூரம் நடந்து வந்து திருக்கோவில் வைத்தியசாலையில் சேர்த்தோம்".

- இவ்வாறு காஞ்சிரங்குடா சம்பவத்தை நேரில் கண்ட திருக்கோவில் மக்கள் சம்பவம்பற்றி விவரிக்கையில் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

"புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் விடுதலைப் புலிகள் ஆயுதமின்றி மக்களுடன் சேர்ந்து இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதிவதில் முன்நின்று செயற்பட்டு வருகிறார்கள்.

"அப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த புலிகளின் பொறுப்பாளர் விஸ்வநாதன் மற்றும் இருவரும் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினரால் அன்று காலை மண்வெட்டிப்பிடியால் தாக்கப்பட்டதாக அறிந்தோம்.

"அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக மாவட்டத்தின் சகல தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களிலும் ரயர் எரிப்பு ஹர்த்தால், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அன்று மாலை 5.45 மணியளவில் நூற்றுக்கணக்கான மக்கள் சேர்ந்து திருக்கோவிலிலிருந்து காஞ்சிரங்குடா வரை ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்தோம். சிலர் சைக்கிளிலும் வந்தார்கள். பேரணி காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமை அண்மித்ததும் அங்கிருந்த படையினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். மக்கள் சிதறுண்டு ஓடினார்கள்.

"பலர் குண்டடிபட்டு வீழ்ந்தார்கள். அவர்களுக்குள் இருவரது சடலங்களையும் படுகாயமுற்று வீழ்ந்து கிடந்த 13 பேரையும் நாமே தோளில் சுமந்துகொண்டு திருக்கோவில் வைத்தியசாலையில் சேர்த்தோம்.

"வயலுக்கு சென்றுவந்தோரும் படையினரின் தாக்குதலில் அகப்பட்டுள்ளனர். 13இற்கு மேற்பட்ட சைக்கிள்கள் அவ்விடத்தில் கிடந்தன.

"நாம் வந்தபின்னர் கண்காணிப்புக் குழுவினரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரும் வந்து சேர்ந்தனர். திருக்கோவில் பகுதியில் எங்குபார்த்தாலும் பயம் பீதி, பதற்றம்" - என்று கூறினர்.

(ஒ)

# வயலுக்கு சென்று வந்தவர்கள் அதிரடிப் படையினரால் [illegible]து?

அம்பாறை,ஒக்.12

வயல் வேலைக்குச் சென்று திரும்பியவர்கள் சிலரை இன்னமும் காணவில்லை என்று திருக்கோவில் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

வயலுக்குச் செல்பவர்கள் நாள் தோறும் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமைத்தாண்டித்தான் சென்று வர வேண்டும். அந்த வகையில் கடந்த புதன்கிழமை வயலுக்குச் சென்று திரும்பியவர்கள் சிலர் இன்னமும் வீடு திரும்பவில்லை.

வயல் வேலைக்குச் சென்று திரும்பியவர்கள் சிலர் அதிரடிப் படையினர் முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் -

அவர்களின் நிலை என்னவென்று இன்னமும் தெரியாது என்றும் -அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் கண்காணிப்புக் குழுவினருடன் தொடர்புகொண்டு இதுபற்றி முறையிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் குழு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. (ஒ)

# பிரதமர் டிசெம்பரில் ஜப்பான் விஜயம்!

கொழும்பு,ஒக்.12

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் டிசெம்பர் மாத ஆரம்பத்தில் ஜப்பானுக்கு விஜயம் செய்வார். டிசெம்பர் 4ஆம் திகதி முதல் எட்டாம் திகதிவரை அங்கு தங்கியிருக்கும் பிரதமர், இலங்கைக்கு உதவிபெறுவது தொடர்பாகப் பேச்சு நடத்துவார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்குப் பகுதிகளின் புனரமைப்புத் தொடர்பாக ஜப்பான் அதிக ஆர்வம் காட்டி வருகிறது. இது சொல் அளவில் மட்டுமல்லாமல் செயலளவிலும் காட்டப்படுகிறது. வடக்கு - கிழக்குப் பகுதிகளின் நிலைமைகளை நேரில் கண்டறிய 10 பேர் அடங்கிய ஜப்பான் அதிகாரிகள் குழு ஒன்று அப்பிரதேசங்களுக்குச் சென்றுள்ளது. அக்குழு கொழும்புக்குத் திரும்பியதும் அரசாங்கத்துடன் கலந்தாலோசனை நடத்தும்.

அதேபோல, ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி, நவம்பரில் இலங்கை வருவார். இவர் நீண்டகாலமாக ஐநாவிலும் கம்போடியா மற்றும் யூகோஸ்லாவியாவிலும் பணியாற்றி அனுபவம் பெற்றவர்.

இவரின் வருகைக்குப் பின்பு பிரதமர் ஜப்பான் செல்ல இருப்பதால் நல்ல பலன் கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

- இவ்வாறு அவர் கூறினார். (ஒ)

# விசாரணைக்குழு நியமிக்க பாதுகாப்பு அமைச்சர் முடிவு

காஞ்சிரங்குடாவில் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரிக்க மூவர் கொண்ட விசாரணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரும், ஸ்ரீலங்கா கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவரும், தேவைபேர்படின் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவரும் இக்குழுவில் அங்கம் வகிப்பார்கள்.

இதேவேளை-

விசேட அதிரடிப் படைக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் நிமால் குணதிலக, துணைப் பொறுப்பாளர் நிமால் லியூக்கே ஆகியோர் நேற்றுமுன்தினம் அம்பாறைக்குச் சென்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின்பேரில் இராணுவத் தளபதி இரு சிரேஷ்ட அதிகாரிகளை இப்பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இவர்கள், யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுடன் இணைந்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

அக்கரைபற்று நீதிவான் இஸ்ஸதீன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

வழிபாட்டுத்தலம் முகாம் பாசறை என்பன தாக்கப்பட்டுள்ளதாக அதிரடிப்படையின் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சரத் பெரேரா கூறியிருக்கின்றார். (ஒ-10-12-ரி)

## வலய மட்டத்தில் இறுதிப் பரீட்சை

அச்சுவேலி,ஒக்.12

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் ஆண்டு இறுதிப் பரீட்சை வலய மட்டத்தில் பொதுப் பரீட்சையாக நடைபெறவுள்ளது.

நவம்பர்மாதம் பிற்பகுதியில் ஆண்டிறுதிப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை வலய மட்டப் பரீட்சைக் குழு செய்துவருகின்றது. (எ-11)

### சமாதானம் என்ற போர்வையில்

# அமெரிக்க முதலாளித்துவத்துக்கு நாட்டில் இடமளிக்கின்றார் ரணில்!

## டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.12

சமாதானம் என்ற போர்வையில் அமெரிக்க முதலாளித்துவத்துக்கு இடமளிக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இதனை நாட்டு மக்கள் அனைவரும் இணைந்து தடுக்கவேண்டும்

- இவ்வாறு தெரிவித்தார் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதால் நாட்டில் ஒற்றுமை ஓரளவுக்கு ஏற்படும் அனுகூலங்கள் தென்படுகின்றன. அதற்காக நாங்களும் முயற்சித்துள்ளோம். ஆனாலும், ரணில் விக்கிமசிங்க சமாதானம் என்ற போர்வையில் நாட்டினுள் அமெரிக்க முதலாளித்துவத்திற்கு இடமளிக்கின்றார். இதனால் ஏற்படும் விளைவுகளால் நாட்டு மக்களே பாதிப்படைவார்கள். ஏனெனில், இவரது திட்டங்களால் பொதுமக்கள் தற்போது அனுபவிக்கும் ஓய்வூதியத் திட்டம், இலவச மருத்துவ வசதி, இலவச கல்வி வசதி, ஊழியர் சேமலாப நிதி வசதிகள் போன்றவற்றுக்கு பாதிப்புக்கள் ஏற்படப்போகின்றன. எனவே, இவரது இவ்வாறான நடவடிக்கைகளுக்கு மக்கள் தமது எதிர்ப்புக்களைத் தெரிவிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உலக முதலாளித்துவத்திற்கு நாட்டில் இடமளிக்க இந்த அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தெற்கு, வடக்கு மக்கள் அனைவருமே ஒன்றிணைந்து தொடர்ந்து தங்கள் எதிர்ப்பினைத் தெரிவிக்கவேண்டும்.

பொதுமக்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை பொ.ஐ.மு. மற்றும் ஜே. வி.பி. ஆகிய கட்சிகள் தங்கள் குறுகியகால அரசியல லாபங்களுக்காகப் பயன்படுத்த முயல்கின்றன.

முன்னைய பொ.ஐ.மு. அரசும் உலக வங்கியின் தனியார்மயமாக்கல் போன்ற முன்மொழிவுகளுக்கு இணக்கம் தெரிவித்தது. மறுபுறம் ஜே.வி.பியினர் தற்போது தமது கட்சியின் குறுகிய மனப்பான்மைகளுக்குத் தூபம் போட்டுக்கொண்டிருக்கின்றனர்.

எனவே, எமது நாட்டுச் சொத்துக்கள் அன்னிய முதலாளித்துவ வர்க்கத்தினரின் ஆதிக்கத்துக்கு உட்படாமல் பாதுகாப்பதற்காக பொதுமக்கள் ஒன்றிணைந்து போராடவேண்டும். என்றுள்ளது.

(ஒ)

# அஞ்சல் அடையாள அட்டைக்கு உறை இட்டுத்தரக் கோரிக்கை

## மாணவர் அமைப்பு விடுத்தது

அச்சுவேலி,ஒக்.12

அஞ்சல் திணைக்களத்தினால் வழங்கப்படும் "அஞ்சல் திணைக்கள அறிமுக அட்டை"யின் வெளிப்புறத்தைப் பாதுகாப்பான பொலித்தீன் உறை அமைப்புச் செய்யுமாறு மாணவர் அமைப்பு வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அச்சுவேலி மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றம் விடுத்துள்ள இக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அஞ்சல் திணைக்களத்தினால் வழங்கப்படும் அறிமுக அட்டை பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களின் ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்கு முக்கிய ஆவணமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

40 ரூபா கட்டணம் செலுத்தி மாணவர்கள் உட்பட சம்பந்தப்பட்டோர் அறிமுக அட்டையைப் பெற்றுக் கொள்கின்றனர். வழங்கப்பட்ட திகதியில் இருந்து 5 வருடங்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் வழங்கப்படும் அறிமுக அட்டை சாதாரணமான கடதாசி மட்டையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களுக்கு செல்லுபடியாகக்கூடிய ஆவணம் மிகக் குறுகிய காலத்தில் பயன்பாட்டில் சிதைவடைந்து உருக்குலைந்து விடுவதால் பொலித்தீன் பாதுகாப்பு உறையுடன் கூடியதாக அஞ்சல் அடையாள அட்டைகளை வழங்குமாறு கோருகிறோம் - என்றுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் மற்றும் பொதுப் போட்டிகளில் பங்குகொள்ளும் 17 வயதுக்குக் குறைவானவர்கள் ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்கு அஞ்சல் திணைக்கள அறிமுக அட்டையைப் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (ஒ-11)

# பாதீனியத்தை அழிப்பதில் ஒத்துழைக்கக் கோரிக்கை

வலிகாமம் தெற்கு,ஒக்.12

வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் பாதீனியம் செடியின் தாக்கம் அதிகம் உண்டு. சென்ற வருடம் இப்பகுதியில் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது விவசாய சம்மேளனங்களின் ஒத்துழைப்பு போதியளவு கிடைக்கவில்லை. பாதீனிய ஒழிப்பில் நாம் வெற்றி காணவில்லை என்பதை மழை பெய்ததுடன் பரவும் பாதீனியத்தைக் கொண்டு அறியமுடியும். எனவே, இம்முறை பாதீனிய ஒழிப்பில் விவசாய சம்மேளனங்கள் கூடிய பங்களிப்புச் செய்து இப்பகுதியில் இருந்து பாதீனியத்தை முற்றாக ஒழிக்கவேண்டும்.

- இவ்வாறு உடுவில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் விவசாய சம்மேளனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உடுவில் கமநல கேந்திர நிலைய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விவசாய உத்தியோகத்தர்கள் விவசாயிகளைத் தூண்டும் நிலை மாறி விவசாயிகளே எம்மைத் தூண்டுதல் செய்யவேண்டும். உத்தியோகத்துடன் மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பாங்குடன் நலிவுற்ற நிலையில் விளங்கிய விவசாயிகளின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தவர் திருமதி ஜெ.சிவசுப்பிரமணியம் என பிரதேச செயலர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஒ-152)

## கல்நார் படகுகளை மீட்டுச் செல்லலாம்

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க வளவில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள கல் இழைநார் படகுகளை உரிமையாளர்கள் உடன்வந்து எடுத்துச்செல்லுமாறு குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது.(ஒ-51)

# திருத்தப் பணிகளுக்காக மின்வெட்டு அமுலாகும்

மின்சாரசபையினர் பின்வரும் பகுதிகளில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளவுள்ளதால் அப்பகுதிகளில் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் முற்பகல் 9மணிமுதல் பிற்பகல் 4மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ள தினங்களும் இடங்களும் வருமாறு:-

★ இன்று 12ஆம் திகதி மல்லாகம் பிரதேசம் மட்டும் -

★ எதிர்வரும் 19ஆம் திகதி ஊரெழு, நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், செம்மணி, திருநெல்வேலி -

★ எதிர்வரும் 26ஆம் திகதி - மருதனார்மடம், இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, கோம்பையன்மணல், ஆனைக்கோட்டை, நவாலி -

★ எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி - புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, வடமராட்சி, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நவாலி -

★ எதிர்வரும் நவம்பர் மாதம் 9ஆம் திகதி - உரும்பிராய், கோண்டாவில், பெற்பதி வீதி, மருத்துவபீட சுற்றாடல், யாழ்.மாநகர சபைப் பகுதிகள் -

★ எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி - கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய்-

மேலே குறிப்பிட்ட பகுதிகளில் குறித்த நேரத்திற்கு முன் திருத்த வேலைகள் முடிவுற்றால் உடனடியாக மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார சபையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ஒ-5)

# கசிப்பு வைத்திருந்த வழக்கில் ஆறு பேரிடம் அபராதம்

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் 6பேருக்கு யாழ்நீதிமன்றத்தினால் ஒரு லட்சத்து 8ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானசீலன் என்பவருக்கு 30ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

அபூபக்கர் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த சத்தியசீலன் ஜெயசிறி என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பூதர் தவராசா என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

யாழ்.நாவலர் வீதியைச் சேர்ந்த அன்ரன் ஞானச்செல்வம் என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

நாவாந்துறை சென்.மரியா வீதியைச் சேர்ந்த அன்ரனி டயஸ் கிறைசினி என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

நாவாந்துறை அபூபக்கர் வீதியைச் சேர்ந்த ஜெயகௌரி பாஸ்கரன் என்பவருக்கு 20ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 4ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

செலுத்துமாறு யாழ்நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (எ-5)

## மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்

இன்று(12.10.2002) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும் எமது நிறுவன ஆசிரிய உறவுகளான,

- செல்வி.வ.சிவலட்சுமி B.A.(HONS)
- திரு.இ.கேசவன் B.Sc.
- திரு.வே. உதயமோகன் B.B.A.DiP.in.Ed.

ஆகியோரையும்

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர்

- உயர்திரு. வே. பாலசுப்பிரமணியம் B.A.(HONS),M.Ed.

அவர்களையும்

மனம்மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆவரங்கால். (9311) குகன் கல்வி நிறுவனம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**N.E.I. நல்லூர்**

எமது நிறுவனத்தின் விழுதுகளான -

திரு. இராமலிங்கம் பாலசந்திரன் B.A.(Hons) Dip.in.Ed.

திரு. சண்முகநாதன் தயானந்தன் H.N.Dip.in.Acc B.Com(Hons), (M.M.Spl.)

திரு. கந்தசாமி சதீஸ்குமார் B.B.A.(Hons), (F.M.Spl.)

திரு. இராமலிங்கம் கேசவன் B.Sc.

செல்வி சுந்தரலிங்கம் பிரபாஷினி B.A.

ஆகியோர் இன்று யாழ்.பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவதையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

N.E.I. நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(9322)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுழிபுரம் மேற்கு
கலைமகள் சனசமூக நிலையம், சுழிபுரம்

எமது கிராமத்தைச் சேர்ந்த

செல்வி
**திருச்செல்வி திருச்செல்வம்**



அவர்கள்
இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் B.Sc. பட்டம் பெறுவதையிட்டு அவரை பாராட்டுகின்றோம்.
அவர் மேலும் சிறப்புக்களை பெற்று மேன்மைபெற மனமார வாழ்த்துகின்றோம்.

சுழிபுரம் மேற்கு,சுழிபுரம். (9321) சுழிபுரம் மேற்கு கலைமகள் ச.ச.நிலையம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூகநிலையம், சுழிபுரம்



எமது சனசமூக நிலையத்தின் முன்னாள் பொருளாளரும்,உபசெயலாளரும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினரும் நிலைய வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பவருமாகிய

**திரு.சிவநேசன் சிவச்செல்வன்**

அவர்கள் இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் B.Sc.(Hons) பட்டம் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அவர் சிறப்புறவிளங்க வாழ்த்துகின்றோம்.

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (9243) - நிர்வாகம்.



## வாழ்த்துகின்றோம்



யா/மகாஜனக் கல்லூரியில் நீண்டகாலமாக, சிறந்த சேவையாற்றிய எமது சிரேஷ்ட ஆசிரியை

திருமதி
**சௌபாக்கியகௌரி பத்மநாதன்**
*M.Phil(Phylosophy)*

அவர்கள் இன்று (12.10.2002) சனிக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் முதுதத்துவமாணி (மெய்யியல்) பட்டம் பெறுவதையிட்டு பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

ஆசிரியர் கழகம்.

யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை. (9320)


## சமாதானம்வேண்டி பிரார்த்தனை

யாழ்ப்பாணம் ஒக். 12

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சு வெற்றியடையவும், நாட்டில் சமாதானம் வேண்டியும் வடபிராந்திய இந்துப் பேரவையால் நடத்தப்படும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள வடபிராந்திய இந்துப் பேரவையின் உபபணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்துசமய அபிவிருத்திச் சபைத் தலைவர் ந.சிவசண்முகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ் வில் பிற்பகல் 3 மணிக்கு திருவாசகத்தின் பெருமை என்ற தலைப்பில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் செற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ-5)

## சர்ப்பவியூகம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.12

செம்பியன் செல்வன் எழுதிய சர்ப்பவியூகம் எனும் நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

செங்கை ஆழியன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையை ஐயா.சச்சிதானந்தம் நிகழ்த்துவார். ஆசி உரைகளை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன ஆகியோர் நிகழ்த்துவர்.

ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் இ.சிவஞானசுந்தரம், தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-12)

## காலநிலை குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.12

காலநிலை மாற்றம் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் பிற்பகல் 5மணிவரை யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்கள யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

இக்கருத்தரங்கில் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொண்டு பயனடையும் படி கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## பிரார்த்தனை மண்டபம் விரைவில் அமைக்கப்படும்

அச்சுவேலி,ஒக்.12

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் இந்து மாணவர்களுக்கான பிரார்த்தனை மண்டபத்தை இந்து கலாசார அமைச்சின் நிதிமூலம் அமைத்துத் தருவதாக அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கல்லூரியில் கல்வி கற்கும் இந்து மாணவர்கள் தாம் பிரார்த்தனை செய்வதற்கு மண்டப வசதி செய்து தரப்படவில்லை என்றும் - பிரார்த்தனையை விளையாட்டு மைதானத்தில் நின்றே செய்வதாகவும் - இந்து கலாசார அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதனை அடுத்து இந்தப் பிரார்த்தனை மண்டபத்தை அமைச்சின் நிதியைப் பயன்படுத்தி கட்டித்தருவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.பாலசந்திரன் செந்தில்குமரன்**

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று (12.10.2002) சனிக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் B.A.Hons பட்டம் பெறுவதையிட்டு அவரை மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பொருளியற் கல்லூரி,
புவியியல் மாணவர்கள் 2003,
யாழ்ப்பாணம்.

(9261)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எங்கள் கல்லூரி விரிவுரையாளர் திரு.ந.நடராசா அவர்களின் மைந்தர்கள்

ந.முகுந்தன் B.Sc. (Hons) Spl.in Phy.

ந.வைகுந்தன் B.B.A. (Hons) spl.in F.M.

இன்று (12.10.2002) சனிக்கிழமை பட்டம் பெறுவதையிட்டு பாராட்டுவதோடு, மேலும் கல்வியில் பல பட்டங்கள் பெறவேண்டுமென விநாயகப் பெருமானை வேண்டி மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

முதலாம் வருடம் (9313) யா/தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள்.



## வாழ்த்துகின்றோம்



இன்று கௌரவ கலாநிதிப் பட்டம்பெறும் எமது நிறுவன முகாமைத்துவ இயக்குநர்

**திரு. அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை**

*பட்டயக் கணக்காளர்*

அவர்களை மேலும் பல சேவைகள் செய்து பல்லாண்டு காலம் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

NO.555,
NAVALAR ROAD,
JAFFNA.

STAFF
MERCHANT FINANCE LTD.

(9293)



## உளமார வாழ்த்துகின்றோம்



**திரு.அ.கயிலாயபிள்ளை**

(கோட்டக்கல்வி அலுவலர், பளை கொடிகாமம் - B.A., Dip.in Edu., S.L.P.S.I, M.Ed.)

ஆசானாக, ஆசான்களுக்கு ஆசானாக,
அதிபராக, கொத்தணி அதிபராக,
கோட்டக்கல்வி அதிகாரியாக,

அவனியில் சேவை புரியும் திரு. அ. கயிலாயபிள்ளை அவர்கள் இன்று (12-10-2002) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணிப்பட்டம் பெறுவதையிட்டும், கல்விப் பணியில் மேன்மேலும் பதவியுயர்வுகள் பெற்று அவரது எதிர்காலம் வளம்பெறவும் உளமார வாழ்த்துகின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்,
பளை கல்விக்கோட்டம், பளை.

(9288)



## இதய பூர்வமான வாழ்த்துக்கள்

யாழ்.பல்கலைக்கழக 22ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று (12.10.2002) சனிக்கிழமை கலைமாணிப் பட்டத்தினைப் பெறுகின்றவர்களான,



K.செந்தில்நேசன் B.A.



P.மணிவண்ணன் B.A.(HONS)



K.யோகநாதன் B.A.

ஆகிய இவர்களை வாழ்த்துவதில் உள்ளம் பூரிப்படைகின்றோம்.

"SMVNT" Room Friends,
*106, Palaly Road,Thirunelvely.*

(9301)

## "மணி" மலர் தூவி வாழ்த்துகிறான்

எமது நிறுவனத்தின்

கணித ஆசான்
உயர்திரு.ஜெ.கோகுலவாசன்
B.A.(Cey.), Spl. Trd. Maths

அளவையியல் ஆசான்
உயர்திரு.ப.கமலதாசன்
B.A.(Cey.), Spl. Trd. Com.
Dip.in Mgt. (O.U.S.L.)

ஆகியோர் இன்று யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் "கலைமாணி" பட்டத்தினைப் பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, இவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

உங்கள் மாணவச் செல்வங்கள்
(9316) மணி கல்வி நிறுவனம் - வேலணை.


## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க
## விசேட பொதுக்கூட்டம்

*காலம்:* நாளை (13.10.2002) ஞாயிறு காலை 10.00 மணி.
*இடம்:* கொக்குவில் இந்துக் கல்லூரி
ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த சிறுவர் நூல்நிலையம்
*விடயம்:* நிர்வாக சபையினரால் உருவாக்கப்பட்ட "நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கான" பொதுச்சபையின் அங்கீகாரம் பெறுதல்.
*குறிப்பு:* *முகவரி மாற்றம் காரணமாக தனிப்பட்ட அழைப்பிதழ்கள் கிடைக்காதவர்கள் உட்பட பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.*

இ.செல்வநாதன்
*கௌரவ செயலாளர்*
(C/24058)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 12 - 07 - 1946



உதிர்வு 13 - 09 - 2002

### அமரர் இராமசாமி வயிரவசுந்தரம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
திங்களொன்று சென்றதையா நீ மறைந்து
உங்கள் நினைவுகள் என்றும் எம் - நெஞ்சில்!
மங்காமல் மலர்ந்திருக்கும்! மறையாது ஒருநாளும்!

அமரரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.10.2002) சனிக்கிழமை முகத்துவாரம் சங்குமுகத்திலும், வீட்டுக்கிரியைகள் நாளை (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் இல.9, சென். லூசியஸ் சதுக்கம், கொட்டாஞ்சேனை இல்லத்திலும் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்று அமரரின் நினைவு நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இல.9, சென். லூசியஸ் சதுக்கம்,*
*கொட்டாஞ்சேனை,*
*கொழும்பு - 13.* (9306)

இங்ஙனம்:
மனைவி, சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.


இறக்குமதி செய்யப்பட்ட, உயர்ரக
## டச்சு விதை உருளைக்கிழங்கு வகைகள்
ஒக்ரோபர் மாத நடுப்பகுதியிலிருந்து
எம்மிடம் கிடைக்கும்.
எதிர்பார்க்கமுடியாத குறைந்த விலை.
அத்துடன்
யாழ்ப்பாண மண்ணுக்கு வாய்ப்பான
குறுகியகால இனவகைகளான
வெள்ளை நிற ஸீரா, செந்நிற ராஜா,
செந்நிற லௌரா, செந்நிற ஹெரசன்னா,
வெள்ளைநிற எரின்டி, வெள்ளை நிற பிறைமியர்
என்பனவும் எம்மிடம் கிடைக்கும்.

தொடர்பு: செல்வா - 077-482559
அக்ரோபா பொட்டற்றோ (தனி)
நிறுவனம்
இல.100, கென்ற் றோட்,
கொழும்பு-09. (C/23987)


## இடம்பெயர்ந்தோருக்கு ஜப்பானிய அரசு மீன்பிடி வழங்கியது

கொழும்பு,ஒக்.12

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்களுக்கு வழங்க வென ஜப்பானிய அரசு 2 கோடி 81 லட்சம் தொன் மீன்பிடிகளை வடக்குக் கிழக்கு அபிவிருத்தி, மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் வழங்கியுள்ளது.

இதனை கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தில் வைத்து இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சேச்சினோ ஹொற்றிக்கோ அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் வழங்கினார்.

அங்கு உரையாற்றிய ஜப்பானியத் தூதுவர் இலங்கையில் சமாதானம் மலரும் சூழல் உருவாகி உள்ளதாகவும் -

அவ்வாறு நிரந்தர சமாதானம் ஏற்படும் பட்சத்தில் ஜப்பானிய அரசு மேலும் பல உதவிகளை வழங்குமெனவும் - தெரிவித்தார். (ஒ-12)

## அடிக்கடி மின்தடை

யாழ்ப்பாணம்,ஒக்.12

தொண்டமானாறுப் பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டுவருகிறது. சிலநாள்கள் தொடக்கம் மின்சாரம் கிடைப்பதில்லை என்றும் -

மின்தடை காரணமாக இப்பகுதியில் உள்ள மாணவர்கள் இரவில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாதுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-51)

## தண்டப்பணம் செலுத்தத் தவறியோருக்கு சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம்,ஒக்.12

நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தைக் கட்டத் தவறிய இருவருக்கு 6மாதச் சிறைத்தண்டனை யாழ்நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜாவினால் விதிக்கப்பட்டது.

கொக்குவில் பிறவுண் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி புஸ்பராசா என்பவருக்கு கடந்த 7ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட கசிப்பு வழக்குத் தொடர்பாக 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு விதிக்கப்பட்டது. இதன் பிரகாரம் நேற்றுமுன்தினம் நீதிமன்றிற்குச் சமுகமளித்த மேற்படி நபர் இப்பணத்தைச் செலுத்த முடியாது என்று மன்றிற்குத் தெரிவித்ததை அடுத்து அவருக்கு 6 மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் -

அதேபோல் தாவரிப்புப் பணமாகிய 4ஆயிரத்து 200 ரூபாவை செலுத்துமாறு குருநகர் இராசசிங்கம் தோட்டத்தைச் சேர்ந்த அன்ரனி பாலன் என்பவருக்கும் மன்று உத்தரவு பிறப்பித்திருந்தது. இவரும் நேற்றுமுன்தினம் மன்றில் ஆஜராகி பணத்தைச் செலுத்தமுடியாது என்றும் -

நீதிமன்றினால் விதிக்கப்படும் தண்டனையைத்தான் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இதனை அடுத்து அவருக்கு 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (எ-5)

## மனமுவந்த பாராட்டுக்கள்



யாழ்.பல்கலைக்கழகத்தில்
இன்று (12.10.2002) சனிக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில்
"தத்துவ கலாநிதி" என்ற கௌரவப் பட்டம் பெறும்
காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தைச் சார்ந்த
*முதல்வர் சிவஸ்ரீ* **கணபதீஸ்வரக் குருக்கள்**
**வைத்தீஸ்வரக் குருக்கள்**

அவர்களை மேலும் பல ஆண்டுகள் சிறப்புடன் வாழ்ந்து தொண்டுகள் பல ஆற்ற வேண்டுமென்று கூத்தபிரான் தாள்கள் பணிந்து மனமுவந்து பாராட்டுகின்றோம்.

கா.ஸ்ரீனிவாசன் தே.சுரேந்திரன்
ஸ்ரீ.பத்மாவதி சு.சாந்தினி
(சி-24149) ஸ்ரீ.ஸ்ரீகாந்தன் சு.ஸ்ரீகுருப்பிரசாத்

## பல்லாயிரம் மக்கள் பயன்பெற வாழ்த்துகின்றோம்

இவ்வருடம் மாசி மாத முற்பகுதியில் எமது மகனுக்கு ஏற்பட்ட வலிப்பு வியாதியை (கை, கால் உதறல், தலை நடுக்கம்) குணப்படுத்துவதற்காக யாழ்.மாவட்டத்திலும், கொழும்பிலும் பல குழந்தை வைத்திய நிபுணர்கள், சிறப்பு நரம்பியல் நிபுணர்களுடன் தொடர்புகொண்டு சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் பல மாதங்கள் கடந்தும் நோய் சிறிதளவேனும் குணமடையாத நிலையில் இனி வாழ்நாள் முழுமையும் வலிப்பு மாத்திரைகளுடனேயே காலம் கழிக்கவேண்டும் என்ற நிலையில் செய்வதறியாது இருந்தவேளையில் டாக்டர் கதிரவேலு ரகுராம் அவர்களின் அக்குபங்சர் சிகிச்சை பற்றி கேள்வியுற்று சிகிச்சைக்காக அவரை அணுகியபோது சிகிச்சை தொடர்பான முறைமைகளை எமக்கு சிறப்பாக விளக்கமளித்து, சிகிச்சை வழங்கி சரியாக இரண்டரை மாதங்களில் நோய் முற்றாகக் குணமடைந்து எந்தவிதமான மருந்து மாத்திரைகளுமின்றி உற்சாகமாகப் பாடசாலைக்குச் சென்று கல்வியைத் தொடர வாய்ப்பளித்துள்ளார். எமது மகன் முழுமையாகக் குணம் பெற வழிகாட்டியவர்களுக்கும், டாக்டர் கதிரவேலு ரகுராம் அவர்களுக்கும் இவர்களுக்கூடாக இதை நிறைவேற்றிய எல்லாம்வல்ல அன்புத் தெய்வத்தின் பாதக்கமலங்களில் நன்றிப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

டாக்டர் கதிரவேலு ரகுராம் அவர்களால் உரும்பிராயில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அக்குபங்சர் வைத்திய நிலையத்தினூடாக பல்லாயிரம் மக்கள் பயன்பெறவும் அவரது சிகிச்சை இறைவனின் கருணையினால் சிறப்பாக நடைபெறவும் மனமார வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி செல்வரத்தினம்
(9272) அத்தியடி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி விஜிதா



செல்வி பபிதா

கடந்த 16.03.2002இல் பட்டம்பெற்றவரான
**செல்வி நவரத்தினம் விஜிதா** *B.A.(Hons), Saiva Chithantha Pandit* அவர்களையும்
இன்று (12.10.2002) சனிக்கிழமை பட்டம் பெறுகின்றவரான
**செல்வி நவரத்தினம் பபிதா** *B.A.(Hons)* ஆகியோரை அவர்களையும்
அன்புடன் பாராட்டி மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்ந்து சிறப்புற வேண்டுமென உளமார வாழ்த்துகின்றோம்.
அத்துடன் இவர்களுக்கு ஆரம்பக் கல்வியூட்டிய
வவுனியா சனசமூக நிலைய முன்பள்ளி ஆசிரியர்களையும் நன்றி கூறிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*திரு.திருமதி நவரத்தினம் இராசமணி,*
*வீ.சீ.சீ. மாவிட்டபுரம், தெல்லிப்பழை.* (9259)

- அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, அத்தான், பெறாமக்கள்,
டென்மார்க் ரவீந்திரராஜ் தயா அண்ணா குடும்பத்தினர்,
லண்டன் பிருதிவிராஜ் சுதா அண்ணா மற்றும் உறவினர்கள்.

# லஞ்சமும் ஊழலும் அற்ற சமூகமே நாட்டின் அவசியத் தேவையாகும்

**தற்போது நாட்டில் ஒழுக்கம் சீர்குலைந்துவிட்டது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் ஒழுக்கம் பேணப்படுகிறது. அவர்கள் வழங்கும் தண்டனை சரியானதா? தவறானதா என்பதை நான் அறியாவிடினும், அப்பிரதேசங்களில் சட்டமும் ஒழுங்கும் உரிய முறையில் பேணப்படுகிறது என்கிறார் சிலின்கோ கூட்டு வர்த்தக நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய லலித் கொத்தலாவல. அவர் மனந்திறந்து கூறும் கருத்துக்கள் 'லங்காதீப' நாளிதழில் வெளியானது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

ஸ்ரீலங்காவில் பாரதூரமான சமூக, அரசியல் பிரச்சினையான வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு சமாதானத் தீர்வு காண்பதற்குத் தேவையான- அடிப்படையான- பின்னணிகள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன. சமாதானம் பற்றிய நல்ல அறிகுறிகள் எமது எல்லோரதும் மகிழ்ச்சிக்கான காரணமாகின்றன. 20 வருடகாலமாக யுத்தத்தினால் சலிப்படைந்த வடக்கு-கிழக்கு மக்களைப் போன்றே தெற்கில் வாழும் பொதுமக்களும் சமாதானம் பற்றிய எதிர்பார்ப்புடன் இருப்பதாகவே நான் எண்ணுகிறேன். ஸ்ரீலங்காவின் பெரும்பான்மைச் சிங்கள பௌத்த மக்கள் முற்காலத்தில் கொண்டிருந்த சிந்தனைகளிலிருந்து மீண்டு மிகவும் நியாயமான- முற்போக்கான- இலக்கை நோக்கிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

இதனாலேயே, 1958இல் இருந்த நிலைமை இன்று நாட்டில் இல்லை. எல்லோரும் இக்குரூர யுத்தத்தின் மூலம் பாடம் கற்றுக்கொண்டார்கள் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. 1993ஆம் ஆண்டில் யுத்தம் தொடர்பாக விசேட செய்தி வெளியிட்ட அப்போதைய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க, "பௌத்த சிங்களவர்கள் இந்நாட்டில் வளர்ந்துள்ள பெருவிருட்சம். ஏனைய இனத்தவர் யாவரும் அம்மரத்தைச் சுற்றிப் படர்ந்துள்ள கொடிகள்" எனக் குறிப்பிட்டிருந்தார். அக்கொடிகளைப் பாதுகாப்பது பெரும்பான்மை மக்களின் கடமையாகுமென அவர் நினைவூட்டியிருந்தார்.

எனது சிந்தனைக்கு எட்டியவரையில் நாட்டின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்படுவது அவசியமாயின் தமிழ், முஸ்லிம் இனத்தவர்களைத் தொடர்ந்தும் சிறுபான்மையினத்தவர்களாகக் கருதுதல் கூடாது. அவர்களும் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு இணையான நிலையில் கணிக்கப்பட வேண்டுமென்பதே எனது கருத்தாகும்.

அம்மக்களும் எமது சகோதரர்களே. எமது சிங்கள பெரும்பான்மை மக்கள்கூட இவ்வாறே கருதுவதாக நான் எண்ணுகிறேன். பௌத்த சிங்கள மக்கள் மிகுந்த கருணை உள்ளம் கொண்டவர்கள். இவர்களது மனதில் எப்போதும் மற்றவர்கள்மீது சகோதரத்துவ உணர்வு நிறைந்துள்ளது. இது புதியதொன்றல்ல. ஆயினும், துரதிர்ஷ்டவசமாக எமது மக்கள் உணர்ந்துகொள்ளாமலேயே அவர்களது மனங்களில் விஷமத்தனமான கருத்துக்களை ஊட்டியவர்கள் எங்கள் நாட்டு அரசியலை நடத்தும் அரசியல் தலைவர்களே. இன்று கொடிய யுத்தமாக மாறியுள்ள இந்தப் பிரச்சினையை ஆரம்பித்து வைத்தவர்கள் அவர்களே. இன்று இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நாட்டின் சாதாரண குடிமக்களினால் மட்டுமே இயலும் என்பது எனது கருத்து.

இவை விவாதத்துக்குரிய கருத்துக்கள். பொதுமக்களின் ஆணையைப் பெற்று அரசமைக்கும் அரசியல்வாதிகள் பதவிக்கு வந்தபின் இவ்இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பொதுமக்களின் ஆணை எமக்குக் கிடைத்துள்ளது என அனைவருமே சிந்திக்க மறந்துவிடுகிறார்கள். இது நியாயமான சிந்தனை. ஆனால், இதை நல்ல குறிக்கோளாக எடுப்போமாயின் அரசியல்வாதிகள் கூறுபவற்றை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கு இன்று சமூகம் தயாராக இல்லை என்பதே எனது நம்பிக்கை. இன்று தென்பகுதி அரசியல்வாதிகள் 'நாம் இச்சமாதான முயற்சிகளைக் கைவிடுவோம். மீண்டும் யுத்தம் புரிவோம்' என தமது சமூகத்திடம் கூறினால், அவர்கள் அக்கருத்தை ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிடுவர் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். அதேபோன்று தமிழ் மக்கள்கூட யுத்தத்தை விரும்பமாட்டார்கள் என்பது எனது திடமான நம்பிக்கையாகும். நான் ஒரு வர்த்தகன் என்ற வகையில் மற்றோருக்கு முன்பாக யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் எனது வர்த்தக நிறுவனங்களையும், வங்கிக் கிளைகளையும் ஆரம்பிப்பதற்காக அப்பிரதேசங்களுக்குச் சென்றேன். அங்கு எதிர் நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் பற்றியும் மக்களுடன் கருத்துப் பரிமாறிக் கொண்டேன். அங்கு எவரும் யுத்தம் மீண்டும் ஆரம்பிப்பதை விரும்பவில்லை. எல்லோரும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். ஆகவே, சமூகத்திடையே சமாதானத்துக்கான நல்ல வரவேற்பு கட்டியெழுப் பப்பட்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

அரசியல்வாதிகளால் மட்டும் தனித்து இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணமுடியாதகையால் இதற்கு இறு

**தமிழில்: வீயெஸ்ரீ**

தித் தீர்வுகாண்பதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பும் பெறப்படவேண்டுமென நான் எண்ணுகிறேன். இன்னும் சிறிது காலத்தில் இந்நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் ஒன்றிணைந்து யுத்தத்தை நிறுத்துமாறு அரசியல்வாதிகளைக் கேட்டுக்கொள்ளும் நிலை ஏற்பட இடமுண்டு. யுத்தத்தினால் இலாபமீட்டுவோர் யார்?, பாதிக்கப்படுபவர் யார்? என்பதுபற்றி பொதுமக்களுக்கு போதிய அறிவு உண்டு. சமீபத்தில் கிடைத்த தகவல்களின்படி இவ்யுத்தத்தின்மூலம் 10 கோடி ரூபாவரை லாபம் தேடிக்கொண்ட அரசியல்வாதிகள் பற்றி, பாதுகாப்பு அதிகாரிகள்பற்றி எங்களில் பலர் அறிந்துள்ளோம். இவர்கள் யுத்தத்தை முன்னெடுப்பது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கல்ல, தமக்கு லாபம் பெறும் நோக்கத்திலேயே என்பது தெளிவான உண்மையாகும். யுத்தத்தின்மூலம் பணம் சேர்த்துக்கொண்ட முன்னால் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோர் தமக்கு இவ்வகைப் பெருந்தொகைப் பணத்தை எவ்வாறு சேர்க்கமுடிந்தது என்பதை பொதுமக்களுக்கு தெரிவிக்கவேண்டும். இதுபற்றித் தெரிந்துகொள்ளும் உரிமை வரிசெலுத்தும் பொதுமக்களுக்கு உண்டு. இந்தவகையில், தவறான வழிகளில் பணந்தேடிக் கொண்ட அரசியல்வாதிகளுக்கு பொதுமக்கள் எவ்வாறு மதிப்பளிக்க முடியும்? இப்படிப்பட்டவர்களைத் தமது தலைவர்களாக எவ்வாறு கருதமுடியும்? என்பவை என்னுள் எழும்வினாக்களாகும்.

தற்போது அரசுக்கும், எதிரணியினருக்கும் இடையேயான முறுகல் நிலையைப் பாருங்கள். ஜனாதிபதி இந்நாட்டின் தலைவி. அவர் பிரதமரையும், அமைச்சர்களையும் பற்றி மேடைகளில் பேசும் பேச்சுக்களை எம்மால் சகித்துக்கொள்ள இயலவில்லை. இவைபற்றி யாரும் விமர்சிப்பதில்லை. ஆயினும், யாராவது ஜனாதிபதிக்கு இப்பிழைகளைச் சுட்டிக்காட்டியாக வேண்டும். நாம் அத்தவறைச் சுட்டிக்காட்டுவது தனிப்பட்ட கோபம் காரணமாகவல்ல. அது எமது சமூகத்தின் பொறுப்பு என்ற வகையிலேயே ஆகும். தனிப்பட்ட வகையில் எவிடமும் எங்களுக்கு பிரச்சினை கிடையாது. ஆயினும், நாட்டுமக்கள், அரசு மற்றும் நிர்வாகம் ஆகியன குறித்து நாமெல்லோரும் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். அரசியல்வாதிகள் இவ்வித சீர்கேடுகளில் ஈடுபடுவது எம போன்ற சாதாரண பிரஜைகளுக்கு அரசமைப்பு நடைமுறைகளில் அவநம்பிக்கை ஏற்படுவதற்கு வழிவகுக்கும். இன்று நாட்டின் ஒழுக்கம் சீர்குலைந்துள்ளது. இதற்கு அரசியல்வாதிகளே பொறுப்பேற்கவேண்டும். லஞ்சமும் ஊழலுமற்ற நேர்மையான- ஒழுக்கமான- சமூகமே இந்நாட்டுக்கு அவசியத் தேவையாகிறது. கௌரவமிக்க அரசியல்வாதிகளாக, அமைச்சர்களாக, பிரதமராக, ஜனாதிபதியாக விளங்கும் வகையில அரசியல்வாதிகள் தம்மை மாற்றிக் கொள்ளவேண்டும். அரசியல்வாதிகள் ஒரு புறம் தம்மிடையே இவ்வாறு மோதிக் கொள்வது பற்றி எமக்கு அக்கறையில்லை. ஆனால், நாட்டில் இனியும் யுத்தம் தொடரவேண்டியதில்லை. தாய்மார்களை விதவைகளாக்குகின்ற- இளைஞர்களை ஊனமுற்றவர்களாக்குகின்ற- குழந்தை குட்டிகளுக்கு தந்தைமார்களை இழக்கச் செய்கின்ற- இந்த யுத்தம் நாட்டைச் சீர்குலைக்கிறது. அதற்கு முடிவு காண்பது நாட்டை நேசிக்கும் அனைவரதும் கடமையாகும்.

ஜனாதிபதி அண்மைக்காலத்தில் கடும்போக்குடைய தன்பேச்சுகள்மூலம் விடுதலைப் புலிகள்மீதான தடைநீக்கம் பற்றி விமர்சித்தார். அத்துடன் நிறுத்தாது, தன் நிறைவேற்று அதிகாரத்தை எதிர்காலத்தில் பாவித்து நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகவும் அறிவித்தார்.

இவை பாரதூரமான கருத்து வெளியீடாகும். அவர் குறிப்பிட்ட பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வாராயின் எம் அரசியல்வாதிகளிடையே- குறிப்பாக அரசுக்கும், எதிரணி அரசியல்வாதிகளிடையேயும்- மோதல்களும் ஏற்பட இடமுண்டு. இப்போது நாட்டுக்குத் தேவைப்படுவது இவ்வாறான மோதல்களோ? பொதுமக்களுக்குத் தேவைப்படுவது இவ்வாறான பிரச்சினைகளோ? அல்ல.

ஜனாதிபதியும் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களும் அவா ஏக கட்சியைச் சேர்ந்தவராயிருப்பினும் மக்களின் வாக்கின்மூலமே அதிகாரத்துக்கு வந்தவர்கள். ஆகவே, மக்களின் ஆணைபெற்ற இவ் அரசியல்வாதிகளுக்கு நாட்டு மக்களின் துயரத்தைப் போக்கவும், சமாதானத்தை அடையும் முயற்சியில் இடையிடையே எதிர்ப்படும் இடையூறுகளைக் களையவும் இரவு பகலாக உழைக்கவும் வேண்டிய கடப்பாடு உண்டு.

சமாதானச் சூழலுடன் நாட்டின் பொருளாதார நிலையிலும் முன்னேற்றம் தென்படுவதை புள்ளிவிவரங்கள் எடுத்து காட்டுகின்றன. பங்குச்சந்தை வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது. எல்லா வர்த்தக முயற்சிகளும் வளர்ச்சியைக் காட்டுகின்றன. வடக்கு - கிழக்கில் வர்த்தக முயற்சிகள் முன்னேற்றம் அடைகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில் பாதைகள மின்விநியோகம், நீர்விநியோகம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் ஆகியன இல்லை. பதினெட்டு ஆண்டுகளிற்கு முன்னர் யுத்தம் காரணமாக இவை யாவும் பாதிப்புற்றன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் மட்டும் தானா? இல்லையே. வடக்கின் பெரும்பான்மைத் தமிழரும் கிழக்கின் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களும் ஒரே விதத்தில் பாதிக்கப்பட்டனர். எனவே, யுத்தத்தில் இனபேதம், கட்சிபேதம், நிறபேதம் எதுவும் கிடையாது. யுத்தம் எல்லோருக்கும் அழிவையே ஏற்படுத்தும். இந்த நிலையை மாற்றியமைக்க அரசியல்வாதிகள் ஒன்றிணைதல் அவசியம். பொது மக்கள் ஒன்று திரளவேண்டும். இல்லையேல் நாட்டுக்கும் சமூகத்திற்கும் ஏன உங்களிற்கும் எங்களிற்கும் எதிர்காலம் இல்லை.

யுத்தம் ஆரம்பித்த பின்னர் இதுவரையில் நான்கு சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை நாம் அறிந்ததே. 1985 திம்பு பேச்சுக்களிலிருந்து தற்போதைய சமாதான முயற்சிவரை இந்நான்கு சமாதான முயல்வுகளும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட எல்லா சமாதான முயற்சிகளைவிட தற்போதைய முயற்சி பெருவெற்றியடைந்துள்ளதாக நான் கருதுகின்றேன். விடுதலைப் புலிகள் அமைப்பு தமது ஈழக்கோரிக்கையைக் கைவிட இணங்கியிருப்பதே அப்பெரும் வெற்றியாகும். உத்தியோகபூர்வமாக இதனை அவர்கள் தெரிவித்திருப்பது இதுவே முதற்றடவையாகும். அதே போன்று மீண்டும் ஒருபோதும் தாம்



யுத்தத்துக்குச் செல்லமாட்டோமெனவும் விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர். இவ்விரு பிரகடனங்களும் சமாதான முயற்சிகளினால் ஈட்டப்பட்ட வெற்றியாகும். சமாதானத்தின் பயன்பாட்டை எமக்கு வழங்க இருப்பவையாகும்.

எதிர்க்கட்சியினர் இதுபற்றியும் பலவகைத் தர்க்கங்களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பு ஈழக்கோரிக்கையைக் கைவிடுவதாகக் கூறினாலும் தமக்கு சுயநிர்ணய உரிமை அவசியமானதென அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். இதுபடிப்படியாக ஈழத்தைப் பெறுவதே என அர்த்தம் புரிவோரும் உள்ளனர். தனிப்பட்ட வகையில் சிந்தித்துப் பார்ப்பின் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சமமான, நியாயமான உரிமைகள் வழங்கப்படவேண்டும் எனக்கொள்ளலாம். என்னுடன் சரிசமமாக தமிழரொருவர் சேர்ந்து கடமையாற்ற முடியுமாயின் நான் மேலும் விரும்பமுறுவேன்.

## பிரபாவின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதியில் சட்டம், ஒழுங்கு பேணப்படுகிறது

அந்த விதத்தில் மற்றவர்களின் தேவைகளையும், விருப்புக்களையும், முடியுமானவரை அவர்களின் ஆத்ம கௌரவத்துக்கு மதிப்பளித்து நடக்கும் சமூகம் நாட்டுக்கு அவசியம் தேவை. இல்லையேல் சமாதானத்தை அடைந்ததாகக் கொள்ளமுடியாது. முதலில் தமது மனதில் சமாதான எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுதல் அவசியம். மற்ற இனத்தவர் எம்மைவிட தரம் குறைந்த மனிதர்கள் என எண்ணுபவர்கள் சிறுபான்மையினத்தவருக்கு எதனையும் கொடுக்க விரும்பமாட்டார்கள். சிறுபான்மை இனத்தவரை அதிகாரத்தால் அடக்கி கத்தியும் பொல்லும் போல செயற்பட்டு எமது உரிமைகளை அதிகாரத்தின்மூலம் நிலைநாட்ட வேண்டுமென அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், இப்போது அவ்வாறு செயற்பட ஏற்ற சூழ்நிலை இல்லை. நாகரிகமுடைய ஒரு சமூகத்தில் அவ்வகையான ஏகாதிபத்தியத்துக்கு இடங்கிடையாது. அப்படிச் செய்ய ஆரம்பித்தால் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதே அதன் பலாபலனாக அமையும்.

பல ஆண்டு காலமாக அப்பிரதேசங்களில் வாழ்க்கை நடத்தும் மக்களுக்கு தமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் விடயம் பற்றி முடிவெடுக்கும் உரிமை வழங்கப்படல் அவசியம். அவர்கள் தமது மொழியிலே தமது நிர்வாகத்தை மேற்கொள்ள, தமது கலாசாரத்துக்கமைய வாழ, அப்பகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தாம் விரும்பிய வகையில் மேற்கொள்ள மற்றும் தமது பலதரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படவேண்டும். சரி, தமிழர்களை ஒருபுறம் வைப்போம். முஸ்லிம் மக்களுக்கென தனியான பொருளாதார நடைமுறைகள் உண்டு. இஸ்லாம் வங்கி நடைமுறை விசேடமானதொரு வங்கி நடைமுறையாகும். அதன்படி கடன் வழங்குவதற்காக வட்டி அறவிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இது மிகச் சிறந்த பொருளாதார நடவடிக்கையென நான் கருதுகிறேன். அது ஆண்டவனுக்குச் சமீபமாகச் செல்வது போன்றது. நான் எனது வங்கிகளில் முஸ்லிம் இனத்தவருக்காக வங்கியொன்று நிறுவியுள்ளேன். அதனைச் சிங்கள மற்றும் தமிழ் மக்களும் பயன்படுத்த முடியும். இந்தவகையில் வேறொரு இனத்தவரால் நடத்தப்படும் தர்ம நடவடிக்கைகளில் எம்மை இணைத்துக்கொள்ளமுடியும். அது தவறல்ல. தமது பிரதேசத்தில் தமக்கென வங்கிகள் நிறுவிப் பேணுவதற்கு அம்மக்களை அனுமதிப்பது தனியான இராச்சியமோ, தனியான நிர்வாகமோ அமைக்க வழிசமைப்பதாகாது.

நாம் வெளிப்படையாக மனம் திறந்து பேசுவோம். தற்போது இந்நாட்டில் நிலவும் விதிமுறையற்ற நடவடிக்கைகளைக் களையவேண்டுமானால், பிரபாகரனின் நீதி, நிர்வாக முறை அவசியம் தேவையெனக் கூறுவோரும் எம்மிடையே உள்ளனர். பாணந்துறையிலிருந்து வடபகுதிக்குச் சென்ற பஸ் வண்டியொன்று விபத்தில் சிக்கி பாதசாரி இறந்தமையால் அதன் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டோம். அதற்கு எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது. ஆயினும், அப்பிரதேசத்துக்குரிய நீதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை தவறானதா? நான் கேள்விப்பட்டபடி, 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்டதொகையை ஒருவர் திருடினால் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது விடுதலைப் புலிகள் அமைப்பின் நீதிமுறைமை. தற்போது இந்த நீதிமுறை நீக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு பிரபாகரன் அளிக்கும் தண்டனை மரணம். இந்த நீதிமுறை சரியானதா, பிழையானதா என்பது எமக்குத் தெரியாது. ஆனால், பிரபாகரனின் நிர்வாகத்துக்குட்பட்டுள்ள பிரதேசத்தில் சட்டமும் ஒழுங்கும் சரியானமுறையில பேணப்படுவதாகச் சுட்டிக்காட்டமுடியும். அரேபிய நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சட்டங்களின்படி திருட்டுக்கு, திருடனின் கையை வெட்டிவிடுவது தண்டனையாகும். ஆதலால், அரேபிய நாட்டைப் போன்றே, புலிகளின் பகுதியில் இரவு 12.00 மணிக்குக்கூட பெணணொருவர் தனியே பயமின்றி தெருவில் பயணம் செய்யக்கூடிய நிலைமை உள்ளது. இவற்றை நாம் பின்பற்ற வேண்டும்.

சாதாரணமாக வர்த்தக சமூகத்தில் இருப்போர் இவ்வகையான சமாதான முயற்சிகளில் பங்கேற்பது மிக அரிது. ஆனால், நான் பல குற்றச் சாட்டுக்களுக்கு மத்தியிலும் சமாதான முயற்சிகளில் ஆர்வம் காட்டுவது ஏன் என்பதற்கு விளக்கமளிக்க வேண்டும். சமாதான முயற்சிக்காக வால் பிடிக்கப்போய் எதிராளிகளின் தாக்குதலுக்கு இலக்காவது போன்ற சம்பவங்களை முதலில் நினைவுபடுத்தவேண்டும். 1996இல் மத்திய வங்கிக் குண்டுவெடிப்பில் நானும் காயமடைந்தேன். அதன் காரணமாக யுத்தத்துக்கு யுத்தத்தின் மூலமே பதிலளிக்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தேன். பின்னர் எனது கடும்போக்கை மாற்றிக்கொண்டேன். அதன் பலனாக- இந்த யுத்தத்தின் பலனாக- நான் பாதிக்கப்பட்டமை போன்று பொதுமக்கள் பாதிப்படையக்கூடாது என்பதற்காக ஏதாவது செய்தாக வேண்டுமென நான் உறுதியாகச் சிந்தித்தேன். அதற்காகச் செய்யவேண்டியது இந்த யுத்தத்துக்கான அடிப்படைக் காரணங்களைக்கண்டு நிவர்த்தி செய்தலாகுமென எண்ணினேன். குரோதத்தைக் குரோதத்தால் போக்க முடியாது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். கருணையான சகோதரத்துடன் பிரச்சினையை அணுகினால் தீர்வுகாணமுடியுமென உணர்ந்து கொண்டேன். எனவே, சமாதானத்தை அடையும் நோக்கத்தில் 'நேசமும் புரிந்துணர்வும்' என்ற பெயரில் அமைப்பொன்றை ஏற்படுத்தினேன். அதன் மூலம் வடக்கு - கிழக்கில் விடுதலைப

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புற்றளை மகாவித்தியாலய மாணவன்
செல்வன்
**தர்மகுலசிங்கம் கோகுலதாசன்**



அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2002இல் 132 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதோடு அவருக்கு அறிவூட்டி வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி அவர் மேலும் கல்வியில் பல சிறப்புக்களைப் பெற வேண்டுமென எல்லாம் வல்ல பெரியம்பன் வரசித்தி விநாயகப் பெருமானைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
*"சிவமஹால்",*
*அம்பன், குடத்தனை.* மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்.
(9328)

## நெஞ்சகலா நினைவலைகள்

31ஆம் நாள் | 19ஆம் நாள்



அமரர்
**பவுலிஸ் அப்புகாமி மகிபாலா**
(புத்தா, சாரதி)



அமரர்
**யுவன் பவுலிஸ் அப்புகாமி**
(சாரதி)

| | | |
|---|---|---|
| 31.08.1953 | மண்மகிழ | 22.08.1927 |
| 12.09.2002 | விண்மகிழ | 24.09.2002 |

*அன்புப் பரிவுடனே அகமகிழ்ந்து எம்முடனே*
*இன்ப வாழ்வோடு இப்புவியில் இருக்கையிலே*
*கொடிய நோய் கொண்டுபோனதே உங்கள் உயிரை*
*நீங்கள் சென்ற இடம் ஏது சொல்ல மாட்டீர்களோ?*
"ஆதரிக்க ஆயிரம் உறவுகளுண்டு இவ்வையகத்தில் - எனினும்
'அப்பா'. 'தாத்தா' என்று அழைக்க யாரும் இல்லையே"
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
*இல.3, புதிய வீடமைப்புத் திட்டம்,* மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
*குருநகர், யாழ்ப்பாணம்.* சகோதரர்கள், உற்றார், உறவினர்.
(சி-24167)

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கந்தையா தர்மரத்தினம்**
(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம் : 02.05.1927
மறைவு : 12.10.1995

"கர்த்தருக்குள் எப்பொழுதும்
சந்தோசமாயிருங்கள்"
*பிலிப்பியர் 4:4*

என்றும் நினைவு கூரும்:
மனைவி, பிள்ளைகள்,
*தொல்புரம் மத்தி, சுழிபுரம்.* மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(9155)

## உடுவிலில் மூவருக்கு நல்லாசிரியர் விருது

சுன்னாகம்,ஒக்.12

உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மூன்று ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டுள்ளது.ஆசிரியர்தினத்தை முன்னிட்டு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகன், சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை ஆசிரியர் த.வாமதேவன், ஏழாலை சைவமகாஜன வித்தியாலய ஆசிரியை திருமதி சத்தியா சிவஞானம் ஆகியோரே இவ்வாறு நல்லாசிரியர் விருது பெற்றுள்ளனர்.

(எ-றி)

## லஞ்சமும் ....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் நிர்வாகத்தின்கீழ் வாழ்ந்து வந்த கிராமமக்களுக்கு நாம் பல தரப்பட்ட சேவைகளை வழங்கினோம். அதனிடையே சமாதானத்தை விரும்பும் பொதுமக்களை இனங்காணும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம். இந்த நடவடிக்கைகள் காரணமாக நான் பிரயோசனமான முயற்சிகள் மேற்கொள்வதாக சமூகம் கருதியதன் காரணமாகவே மேற்கொண்டு நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களில் வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதி என்ற வகையில் என்னையும் கலந்துகொள்ளச் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் அநாதைகளுக்குதவும் சங்கம் முன்நின்றது.

ஆனால், இந்த நாட்டுக்கு சமாதானத்தோடு பொருளாதார அபிவிருத்தியையும் மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். அந்தவகையில் சில அமைச்சுக்களுக்கு ஆலோசகர் என்ற வகையில் சேவையாற்றுகிறேன். எனக்கு எப்போதாவது பொறுப்பு அளிக்கப்பட்டால் நாட்டின் பொருளாதாரச் சுபீட்சத்துக்கு மிகப் பெறுமதியுள்ள - செயல்திறனுள்ள - திட்டங்களைத் தயாரித்து வைத்துள்ளேன். இதன்மூலம் நான் அரசியலில் காலடி எடுத்துவைக்கமுயல்வதாக குறுகிய நோக்கில் நோக்கவேண்டாம். மக்கள் தமக்குச் சேவையாற்றுமாறு எனக்கு அழைப்பு விடுத்தால் அவ்வேண்டுகோள் குறித்துச் சிந்திக்கும் கடமை உண்டு. இருப்பினும், அந்த அர்ப்பணிப்பை நான் மேற்கொள்வது குறுகிய அரசியல் எதிர்பார்ப்புக்களை அடையவோ அல்லது வேறு பிரதிபலன்களைப் பெறவோ அல்ல.

மக்களால் நடத்தப்படும் நிர்வாகதத்துக்காக மக்களின் சுபீட்ச வாழ்க்கையை முன்னிலைப்படுத்தும் நாட்டுக்கான சேவையாற்றும் நோக்குடனேயே தீர்மானிப்பேன். இவையாவற்றையும் நிறைவேற்றுவதற்கு நாட்டில் சமாதானம் நிலவுதல் அவசியமாகும். ஆகவே, எவராயினும் எந்த வித அர்த்தத்தில் கருத்துக் கூறினாலும், சமாதானம் அடைவதற்காக அச்சமின்றியும் நேரடியாகவும் நாம் முன்செல்லவேண்டும். சமாதானம் இன்றி முன்னேற்றம் இல்லை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்களான அ.கமலரெத்தினம், க.பிரியவதனி, கு.இராசேந்திரம்,
இ.நிருபா, இ.தெய்வநாயகி, க.பிரதா

**திதி: 12-10-2002**

வளமான எதிர்காலம் வரும் எங்கள் வாழ்க்கையிலே - நாம்
வளமோடு வாழலாமென எதிர்பார்த்தவேளையிலே
களமான இடம் பார்த்துக் காலனும் தன் கைவரிசையைக்
காட்டியே விட்டான்; உடன் சரிந்தது கோபுரம்!
குளமாகக் கண்களிலே கண்ணீர்தான் கொட்டுகிறதே
ஓராண்டும் வந்ததோ? உள்ளத்தில் ரணமாக வலிக்கிறதே!
இளவானில் உம்முகங்கள் இளநகையுடன் தெரிகின்றதே!
இதயத்தில் உமை நினைந்து பிரார்த்திக்கின்றோம் இறைவனை!

*24.09.2001இல் இருபாலை, கட்டப்பிராயில் அழுக்கவெடியில் பலியான குடும்பத்தினர்.*

*கட்டப்பிராய், இருபாலை.* (9289) - பிள்ளைகள்.

## வாழ்த்துகின்றோம்



எமது கல்வி நிலையத்தின்
விஞ்ஞான ஆசிரியர்
**திரு.குணரத்தினம் சரவணேஸ்வரன்**
(ஈசன்) *B.Sc.*

அவர்கள் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் *விஞ்ஞான மாணிப் பட்டம்* பெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அவர் மேலும் பல துறைகளிலும் வளர எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (C/24157)
இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அறிவகம் கல்வி நிலையம்

## வாழ்த்தி மகிழ்கின்றோம்



இன்று யாழ்.பல்கலைக்கழகத்தின்
22ஆவது பட்டமளிப்பு விழாவில்
**'கௌரவ கலாநிதி'** பட்டம் பெறும் எமது அன்பிற்கும்,
மதிப்பிற்கும் உரியவரும், மறைந்த எமது தந்தையாரின்
பேரன்புக்குமுரிய பட்டயக் கணக்காளர்
**திருவாளர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை** அவர்கள்
தீர்காயுளுடனும் தேக ஆரோக்கியத்துடனும் மேலும்
பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல சிதம்பர நடராஜப்
பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

*33, கடையிற் சுவாமி வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* சுப்பிரம்மண்ய சாஸ்திரிகள் குடும்பம்.
(9294)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆசிரியர்களில் இன்று முகாமைத்துவப் பட்டம் பெறுகின்ற செல்வி பிரதா நவரத்தினம் அவர்களையும், கலைமாணிப் பட்டம் பெறுகின்ற திருமதி க.உதயகலா, திருமதி குமாரி மனோரதன், செல்வி வசந்தினி பாலசிங்கம் ஆகியோரையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை,
சுன்னாகம். (9303)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அளவையியல் ஆசிரியர்
**E.சந்தானபவன்** அவர்கள்
இன்று *கலைமாணி பட்டத்தை* (*B.A.Hons*)
பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

2003 கலைப்பிரிவு மாணவர்கள்
**SUBRA(14)**
(9277)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி நடராஜா பொன்னம்மா**

அவர்கள் 10.10.2002இல் காலமாகியதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.*

மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
*காலையடி, பண்டத்தரிப்பு.* பூட்டப்பிள்ளைகள்.
(9331)

# நாடாளுமன்றத்தில் தகாத வார்த்தைகள் பேசுவோரை அங்கொடை ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும்!

## எம்.பிக்களுக்கு 'சூடு' போடுகின்றார் சபாநாயகர்

"இந்தச் சபையில் கழுதைகளும் இல்லை; மிருகங்களும் இல்லை. அப்படியான வார்த்தைகளைப் பிரயோகிப்பவர்களை அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும்."

- இப்படி நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அமர்வில் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறினார். சபையில் தகாத வார்த்தைகள் எழுப்பப்பட்டதற்குப் பதிலடியாகவே அவர் மேற்கண்டவாறு 'சூடு' போட்டார்.

ஆனால், அதற்கு கம்பஹா மாவட்ட எம்.பியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, "அப்படியானால் நாம் எல்லோரும் அங்கொடைக்கு போகவேண்டியவர்களா?" என்று கேள்வி எழுப்பினார்.

'எல்லோரும்' என்பதால் சபாநாயகரையும் சேர்த்துத்தானே ஜெயராஜ் எம்.பி. அவ்வாறு கூறினார் என்று உருவான சர்ச்சையையடுத்து, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தான் கூறியதை வாபஸ் பெற்றுக்கொண்டு வருத்தம் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியது. முதற்கட்டமாக சபை உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் வாய்மூல விடைகளைச் சமர்ப்பித்தனர்.

ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன்னெத்தி தனது கட்சி அமைப்பாளர்களுள் ஒருவரான சரித்த கெலும் என்பவர் காரணமின்றி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார் என்றும், இதில் சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - கோரினார்.

இக்கேள்விக்குப் பதிலளித்த உள்துறை அமைச்சர் கூறியதாவது:-

'மேற்படி நபர் பொலஸ் ஜீப்பைக் கண்டவுடன் ஓடி மறைந்துள்ளார். இதனால், சந்தேகப்பட்ட பொலீஸார் அவரை விரட்டிச்சென்று கைதுசெய்துள்ளனர். குற்றஞ்செய்யாதவர் ஏன் ஓடி ஒளியவேண்டும்? இவர் தொடர்பாக விசாரணை செய்தபின் பொலீஸார் அவரை விடுதலை செய்துள்ளனர் சந்தேகம் ஏற்படும்போது விசாரணை செய்து அதனைத் தெளிவுபடுத்தும் அதிகாரம் பொலீஸாருக்கு உண்டு என அமைச்சர் ஜோன் அரதுங்க திட்டவட்டமாகக் கூறினார். அமைச்சரின் பதிலைத் தொடர்ந்து ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி விளக்கம் அளித்து உரையாற்ற ஆரம்பித்தார்.

ஜே.வி.பி. உறுப்பினரின் செயலுக்கு நிலையியல் கட்டளையை ஆதாரங்காட்டி நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் ஆட்சேபித்தார். நிலையியல் கட்டளையின்படி அமைச்சர் ஒருவரின் பதில் தொடர்பாக மூன்று உபகேள்விகளை மட்டும் கேட்கமுடியும். இங்கு உரை நிகழ்த்தமுடியாது என்றார் அவர். இவ்வேளையில், ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கும் அமைச்சர் அஸ்வருக்கும் இடையில் பலத்த வாக்குவாதம். இடையில் பொ.ஐ.முவின் உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் சேர்ந்துகொண்டார். அப்போது இருதரப்பினரும் மாறிமாறி ஒருவர்மீது ஒருவர் கட்டளைகளைப் பிறப்பிக்கத் தொடங்கினர். சபையில் குழப்பநிலைமை ஏற்பட்டது. இதனால், சீற்றம் அடைந்த சபாநாயகர் -

"நாடாளுமன்றத்தில் ஒரேசமயத்தில் பல சபாநாயகர்கள் இருக்கின்றார்கள். இப்படியான நிலையில், நான் எப்படி எனது கடமையைச் செய்ய முடியும்? சபை உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கட்டளை பிறப்பித்துக் கொண்டால் நான் சபையை எப்படிக் கட்டுப்படுத்தமுடியும்? உறுப்பினர்கள் நாடாளுமன்ற நிலையியல் கட்டளையைக் கடைப்பிடிக்கத் தவறினால் நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டேன்" என எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சரே தனது நேரத்தைப் பெரிதும் வீணடிக்கின்றார் எனவும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அப்போது எதிர்த்தரப்பில் இருந்து "கழுதை" என்று ஒரு குரல் ஒலித்தது. இதனை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும், அஸ்வரும் வன்மையாகக் கண்டித்தனர்.

இதனை அவதானித்த சபாநாயகர், "இந்த சபையில் கழுதைகளும் இல்லை; மிருகங்களும் இல்லை.




அப்படியான வார்த்தைகளைப் பிரயோகிப்பவர்களை அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பவேண்டும்" என்றார்.

"அப்படியானால் நாம் எல்லோரும் அங்கொடைக்குப் போகவேண்டியவர்கள்தான்" என கம்பஹா எம்.பியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டார்.

இவரது கூற்றை ஆளும்தரப்பு உறுப்பினர்கள் வன்மையாக ஆட்சேபித்தனர்.

'நாம் எல்லோரும்' என்று கௌரவ சபாநாயகரையும் சேர்த்துக் கூறுவது தவறு என்றார் அமைச்சர் அஸ்வர்.

இந்தச் சபையின் அதியுயர்பீடத்தில் கௌரவமான ஒரு பதவியை வகிப்பவர் சபாநாயகர். அவ்வளவு கௌரவத்திற்கு உரிய ஒரு பிரமுகரை அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும் என்று கூறுவது மனிதாபிமானமற்ற ஒரு செயல். சிரேஷ்ட உறுப்பினரான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இப்படி நடந்துகொள்வது கவலைக்குரியது. எனவே, அவர் தனது கூற்றை வாபஸ் பெறவேண்டும் என அமைச்சர் லொக்கு பண்டார சபையில் கோரிக்கை விடுத்தார். இதனைத் தொடர்ந்து ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தனது நடத்தைக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டதோடு தான் கூறியதையும் வாபஸ் பெற்றுக்கொண்டார். (ஒ)

# அமெரிக்க - ஈராக் யுத்த முஸ்தீபின் எதிரொலி நாடாளுமன்றத்தில்

அமெரிக்கா - ஈராக் யுத்த முஸ்தீபு கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. இன்று ஈராக்மீது ஆக்கிரமிப்பை ஏற்படுத்தும் அமெரிக்கா, நாளை இலங்கைமீதும் தனது சர்வாதிகாரத்தை நீட்டலாம் என்ற அச்சமும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம், சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடிய வேளையில் குவைத் நாடாளுமன்ற தூதுக்குழுவினரும் சிறப்புவிருந்தினர்களாக சபாநாயகர் களரியில் அமர்ந்திருந்தனர்.

குவைத் நாடாளுமன்றக் குழுவினரை வரவேற்றுக் கௌரவிப்பதாக சபாநாயகர் விசேட அறிவித்தலை வெளிப்படுத்தினார். இருபக்க உறுப்பினர்களும் மேசைகளைத் தட்டி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். குவைத் குழுவினரும் எழுந்துநின்று கை உயர்த்தி தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர்.

இவ்வேளையில், ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீரவன்ச ஈராக்மீது அமெரிக்கா மேற்கொண்டுவரும் போர் அச்சுறுத்தலைக் கண்டித்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசினார்.

'உலக வல்லரசான அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ஈராக் மீது நேரடித் தாக்குதல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதற்கு ஐரோப்பிய நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன' - என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட சபாநாயகர், 'பிறிதொரு நாட்டின் தலைவரின் பெயரை உச்சரிக்காமல் பேசுவது நல்லது. இதனை நீங்கள் என்னிடம் அனுமதி கேட்கும்போதே ஒப்புக்கொண்டீர்கள். ஆனால், சபைக்குள் வந்து அமெரிக்க ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிடுவது தவறு' என்று சுட்டிக்காட்டினார்.

இதனை ஏற்றுக்கொண்ட விமல் வீரன்ச அமெரிக்க ஜனாதிபதியின் பெயரைக் கூறுவதைத் தவிர்த்துக் கொண்டு தனது உரையைத் தொடர்ந்தார்.

'ஈராக்மீது தாக்குதல் நடத்தும் உரிமையை அமெரிக்காவுக்குக் கொடுத்தது யார்? இஸ்ரேல் மேற்கொண்டுள்ள அராஜகத் தாக்குதலில் பலஸ்தீன மக்கள் தமது நாட்டிலேயே அகதிகளாக இருக்கின்றனர். இதைப்பற்றிச் சிந்திக்காத அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் அமைப்பின் தீர்மானத்தை ஈராக்மீது பலவந்தமாகத் திணிக்க முயல்கின்றது. ஈராக் மக்களின் அடிப்படை உரிமைகளும் தனிமனித சுதந்திரமும் பாதுகாக்கப்படவேண்டும்.

'அமெரிக்கா ஈராக்மீது தாக்குதல நடத்துவதன்மூலம் அரபுநாடு களின் எண்ணெய்வள பொருளாதாரத்தைத் தன்வசப்படுத்திக்கொள்ளவே முயல்கின்றது.

'ஈராக்மீது போர் தொடுக்கப்பட்டால் அதனால் முழு உலகுமே பாதிக்கப்படலாம். உலக யுத்தகமாகக்கூட மாற இடமுண்டு.

'தனி ஒரு நாட்டிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையினால் உலகநாடுகள் நஷ்டஈடு செலுத்த வேண்டுமா?

'இந்தநிலை ஏற்பட்டால் உலக சந்தையில் எண்ணெய் விலை பல மடங்கு அதிகரிக்கும். எமது நாடு போன்ற சிறிய நாடுகள் அதற்கு முகங்கொடுக்கமுடியாது. நாட்டின் உற்பத்தி, கைத்தொழில் என்பன பெரிதும் பாதிக்கப்படும்.

'இன்று ஈராக்மீது ஆக்கிரமிப்பு நடத்தும் அமெரிக்கா நாளை இலங்கையையும் விட்டுவைக்காது. எனவே, ஈராக்மீது அமெரிக்கா மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பைக் கண்டித்து இந்த நாடாளுமன்றம் அமெரிக்காவுக்கு எதிராக அறிக்கையொன்றை வெளியிடவேண்டும்' என விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து ஹம்பகா மாவட்ட எம்பி.ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார். 'அமெரிக்கா என்று கூறும்போது அந்த நாட்டின் தலைவரின் பெயரை குறிப்பிடக்கூடாது என்று தடைவிதிக்க முடியாது' என்றார் அவர்.

"நீங்கள் சொல்வது தவறு. நான் எதற்கும் தடைவிதிக்கவில்லை. என்னிடம் வந்து விமல் அனுமதி கேட்கும்போது அமெரிக்க ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிடாமல் தவிர்த்துக்கொள்வதாக அவர் ஒப்புக்கொண்டார். அதன்படி அவர் நடக்கவேண்டும்" - என சபாநாயகர் பதிலளித்தார்.

'எமது நாடாளுமன்றத்தின் நிலையியல் கட்டளையின்படி நமது நாட்டின் ஜனாதிபதி, பதில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பெயர்களைத் தான் குறிப்பிடக்கூடாது. ஆனால், வெளிநாட்டுத் தலைவர்களின் பெயரைக் குறிப்பிடலாம். ஆனால், அணுகுண்டு அச்சுறுத்தல்போல் இங்கேயும் புஷ் பீதி ஏற்பட்டுள்ளது' என்றும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறினார்.

இவருடைய கூற்றை ஆதரிக்கும் வகையில், எதிர்க்கட்சி உறுப்பினர்களான ரொனி டி மெல்லும், அனுரா பண்டாரநாயக்கவும் சில தகவல்களை முன்வைத்தனர். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பெயரைக் குறிப்பிடமுடியாது என்றால், சதாம் ஹுசைனின் பெயரையும் குறிப்பிட முடியாது என்று அனுரா பண்டாரநாயக்க சுட்டிக்காட்டினார்.

'இங்கு ஒரு விடயம் பற்றிப் பேசும்போது அவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட நாட்டின் தலைவரின் பெயரைக் குறிப்பிடுவதில் தவறில்லை. கடந்த காலங்களில் இதே நாடாளுமன்றத்தில் எலிசபெத் மகாராணியாரின் பெயரை நூறு தடவைகளுக்குமேல் கூறியிருக்கிறோம்.

'இந்தியப் பிரதமர்களான இந்திரா காந்தி, நேரு, ராஜீவ்காந்தி ஆகியோரின் பெயர்களை பலமுறை உச்சரித்துள்ளோம். குறிப்பாக ராஜீவ்காந்தியின் பெயர் இங்கு ஏலம் போடப்பட்டது. இதையெல்லாம் மறந்துவிடக்கூடாது' - என்று ரொனி டி மெல் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து நிதியமைச்சர் லொக்குபண்டார -

'ஒரு விவாதம் என்று வரும்போது வெளிநாட்டுத் தலைவர்களின் பெயரைப் பிரயோகிக்கலாம். ஆனால், சபாநாயகரிடம் பெயர் குறிப்பிடமாட்டோம் என்று உறுதியளித்துவிட்டு அதற்கு மாறாக இங்கு நடந்து கொண்ட ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்' - எனக் கூறினார். எனினும், சபாநாயகர் தலையிட்டு ஈராக் - அமெரிக்க யுத்தம் இங்கு வேண்டாம் என முற்றுப்புள்ளி வைத்தார். (ஒ)

# வடக்கு-கிழக்கு மாகாண சுயநிர்வாகத்துக்கு மறைமுகமாக முட்டுக்கட்டை போடும் அரசு!

## தமிழ்க் கூட்டமைப்பு சம்பந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் சுயநிர்ணய நிர்வாக முறைக்கு அரசு மறைமுகமாக முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி வருகின்றது. இதன் ஒரு கட்டமாகவே மின்சார அபிவிருத்தி நடவடிக்கைகளில் திருகோணமலை மாவட்டத்தை அநுராதபுர மாவட்டத்துடன் அரசு இணைத்துள்ளது. இதனை நாம் வன்மையாக எதிர்கின்றோம். இத்திட்டத்தை அரசு மளாய்வு செய்யவேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயலாளரும் திருகோணமலை மாவட்ட எம்.பியுமான இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

மின்சார சீர்திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் பேசிய இரா.சம்பந்தன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கு சுயநிர்ணய நிர்வாக முறையை வழங்குவது தொடர்பாக பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நாட்டை ஐந்து பொருளாதார வலயங்களாகப் பிரித்து அபிவிருத்தி செய்யும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் ஒரே வலயத்தில் அடக்கப்படவேண்டும்.

ஆனால், மின்சார மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு திருகோணமலை மாவட்டம் வட மத்திய மாகாணத்தின அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது வடக்கு - கிழக்கு நிர்வாக வலயத்தில் இருந்து திருகோணமலை மாவட்டத்தைப் பிரிக்கும் ஒரு மறைமுக திட்டம் என்றே கருதுகின்றோம். இதனை நாம் நேரடியாகவே எதிர்க்கின்றோம்.

இது மட்டுமல்ல மின் விநியோக மறுசீரமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டிலும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழ்ப் பிரதேசங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பரபட்சம் காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 7கோடி 40லட்சம் ரூபா, திருகோணமலை மாவட்டத்திற்கு 9 கோடி 90லட்சம் ரூபா. ஆனால், அம்பாறை மாவட்டத்திற்கு 19கோடி 10லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் மூதூர்த் தொகுதிக்கு ஒரு கோடி 20லட்சம் ரூபா, திருகோணமலைக்கு 2கோடி ரூபா அதேவேளை, இவ்விரு மாவட்டங்களையும்விட இரண்டு மடங்கு அதிகமாக சேருவில தொகுதிக்கு 6கோடி 80லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு மட்டும் ஏன் இந்தப் பாகுபாடு? வடபகுதியை எடுத்துக்கொண்டால் மன்னார் மாவட்டத்திற்கு நாலரைக் கோடி ரூபா, வவுனியாவுக்கு 7கோடி 20லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் இன்று வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கு மின்சாரத் தேவை அதிகரித்துள்ளது. எனவே, எமது பிரதேச அபிவிருத்தியில் அரசு கூடிய கவனம் செலுத்தவேண்டும். ஆனால், அரசு ஒரு பக்கம் பேச்சு என்று கூறிக்கொண்டு மறைமுகமாக சுயநிர்ணய முறைக்கு மாறான போக்கைக் கடைப்பிடிப்பதாகக் கருதுகின்றோம். அரசு இதனை மீளாய்வு செய்யவேண்டும் என சம்பந்தன் எம்.பி கூறினார்.

(ஒ)

# பொருளியற் பேராசானுக்கு வாழ்த்துக்கள்

## பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன்



பொருளியற் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் பொருளியற் கல்வி மேம்பாட்டிற்கு அரும் பணியாற்றியவர். இன்றைய பொருளியற் கல்வி ஆசிரியர்களின் மூத்த ஆசான் பொருளியல் கல்வியில் மேற்பட்டப்படிப்பை வளம்படுத்திய பெருமையும் அவரைச் சாரும்.

இப்பல்கலைக்கழக முன்னோடிகளில் ஒருவரும், புலமைசார்ந்த பொருளியலாளரும், தராதர ஆற்றல் மிக்க ஆய்வாளரும் திறமைமிக்க கல்வி நிர்வாகியும் ஆகிய பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் இந்நாள் நன்நாளாகும்.

பல்கலைக்கழக முறைமையிலிருந்து ஓய்வு பெறும்போது (2001) பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன் தொடர்ச்சியாகவும் பாராட்டத்தக்க வகையிலும் நான்கு தசாப்தங்களாக ஒரு பிரபல்யமான பல்கலைக்கழகப் புலமையாளராகவும் கல்விசார் நிர்வாகியாகவும், பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களிலே சிறப்பாகப் பணியாற்றி வந்துள்ளார்.

இவர் புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலையிலே ஆரம்பக் கல்வியைக் கற்று, இடைநிலைக் கல்வியினைப் பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரியிலேயே முடித்துக்கொண்டார். இங்கிருந்து பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்திலே சேர்ந்தார். அங்கு காலஞ்சென்ற பொருளியற் பேராசிரியர் எச்.ஏ.டி.எஸ்.குணசேகர போன்றவர்களிடம் பொருளியலைச் சிறப்புப் பாடமாகக் கற்று நன்கு சித்தியடைந்தார். பின்னர் 1960இலே பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பொருளியல்துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். பல்கலைக்கழக முறைமையிலே பயன்மிக்கதும் செயற்றிறனுள்ளதுமான புலமையாளனாக மலர்ச்சியடைவதற்கான ஆரம்பக் கட்டம் இத்துடன் இவரின் வாழ்விலேற்பட்டது. இவர் இங்கிலாந்திலுள்ள லீட்ஸ் பல்கலைக்கழகத்திலே தனது பட்டப்பின் மேற்படிப்புக்களை மேற்கொண்டார். அங்கே அக்காலகட்டத்திலே பல்கலைக்கழகப் பொருளியற் கல்வி உலகில் பெரிதும் முக்கியத்துவம் பெற்றிருந்த "அபிவிருத்திப் பொருளியலை" இவர் சிறப்பாக ஆராய்ந்து முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பின்னர் புலமைசார் கருத்தரங்குகளிற்காக பலமுறை வெளிநாடு சென்றுள்ளார். அதில் ஒன்றுதான் லிபியப் பல்கலைக்கழகத்தில் லிபியத் தலைவர் எழுதிய கிறீன் புத்தகம் பற்றிய விமர்சன விரிவுரையாகும்.

1960களிலே உயர்கல்விக்கான போதனாமொழி ஆங்கிலத்திலிருந்து சிங்களம்/தமிழுக்கு மாற்றமடையத் தொடங்கிற்று. இது உயர்கல்வியிலேற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும். பிற்பட்ட தசாப்தங்களில் இதன் தாக்கம் மிகப் பெரிதாக ஏற்பட்டது. ஆரம்பக்கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் உயர்கல்வியையும் ஆங்கிலத்தில் கற்றுக்கொண்ட பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்மொழிமூலம் பொருளியலைப் பயின்ற மாணவர்களுக்கு இதனைக் கற்பித்தலிலே முன்னோடி வழிகாட்டியாகவிருந்து முக்கியமான பங்களிப்பினைச் செய்துவந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே 18 ஆண்டுகளாகச் சிறப்பாகப் பணியாற்றி ஒரு குறிப்பிடத்தக்க பல்கலைக்கழகப் புலமையாளனாகப் புகழ்பெற்ற பின்னரே, இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே பணிபுரிவதற்குத் தீர்மானித்தார். 1970களிலும், 1980களிலும் தென்னிலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே சேர்ந்த தமிழ் முதுநிலைப் பல்கலைக்கழகப் புலமையாளர்களில் இவரும் நன்கு குறிப்பிடத்தக்கவர். ஒப்பீட்டு ரீதியில் வடக்கிலே புதிதாக உருவாக்கப்பட்ட புதிய உயர்கல்வி நிறுவனமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மேற்குறிப்பிட்டோரின் வருகையால் உயர்கல்வி ரீதியிலே நன்மையும், வளமும் பெற்று விளங்கி வந்துள்ளது.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் 1980களிலிருந்து இரு தசாப்தங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தொடர்ந்து பணியாற்றியுள்ளார். இங்கே இவர் இளம் பட்டதாரி மாணவர்களுக்குக் கற்பித்தல், ஆராய்ச்சியை முன்னெடுத்தல், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியவற்றிற்குக் குறிப்பிடத்தக்க பெரும் பங்களிப்புகளைச் செய்துள்ளார். பொருளியல்துறை, வர்த்தகம், முகாமைத்துவத்துறை ஆகியனவற்றின் தலைவராக விளங்கினார். 1984 - 1991வரையுள்ள காலப்பகுதியில் இவர் கலைப்பீடாதிபதியாகவும், பலதடவைகள் பதில் துணைவேந்தராகவும் சிறப்பாகப் பணியாற்றி உள்ளார். அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன், அமரர் பேராசிரியர் அ.துரைராஜா ஆகியோர் துணைவேந்தர்களாக விளங்கிய காலப் பகுதியில் இவர் கலைப்பீடாதிபதியாகக் கடமையாற்றினார். இப்பல்கலைக்கழக மூதவை, பேரவை உறுப்பினராக செயற்றிறனும், பயன்மிக்கதுமான சாதனைகளைச் செய்வதிலும் சிறப்பான ஓர் இடத்தை வகித்துவந்தார். இந்நிலையிலே உத்தியோகபூர்வமான பல குழுக்களில் ஒரு முக்கியமான உறுப்பினராகவும் செயற்பட்டு வந்தார். பல்கலைக்கழகத்தின் ஒரு நிர்வாகியாக கலைப் பீடத்தினைக் கட்டியெழுப்புவதிலும் அதனைப் பலப்படுத்துவதிலும் இவர் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தினை வகித்துள்ளார். பேராசிரியர் பாலகிருஷ்ணன் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பிரபல சஞ்சிகைகளிலும் ஆய்வேடுகளிலும் தரம்மிக்க பல ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். சமகால இலங்கையில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார, சமூக அரசியல் வளர்ச்சியை மையமாகக் கொண்டுள்ளனவாக இக்கட்டுரைகள் பெரும்பாலும் அமைந்துள்ளன. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அறிஞர்களில் ஒருசாரார் இவரது கட்டுரைகளை தரமுள்ளதாகக் கணித்துள்ளனர். சிலவற்றிலிருந்து மேற்கோள்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழிலும் இவர் பெருந்தொகையான தரமுள்ள ஆய்வுக்கட்டுரைகளையும் பிற கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பல கருத்தரங்குகளிலும் குறிப்பிட்ட வகையிலே அறிவியற் பங்களிப்புகள் பல செய்துள்ளார். இவையாவும் சமூக விஞ்ஞான விடயங்கள் பற்றிய அறிவியற் பரம்பலுக்கு பெரிதும் உதவியுள்ளன. 1987இல் இவர் பொருளியல் இணைப் பேராசிரியராக நியமனம் பெற்றார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் 1997இலே வவுனியாவிலே புதிதாக நிறுவப்பட்ட வளாகத்தில் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார். இவ்வகையிலே வன்னியிலே புதிதாக உருவாக்கப்பட்ட இந்த உயர்கல்வி நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்திக்கான அடித்தளத்தினை நன்கு அமைப்பதில் இவர் முழுமூச்சாக பணிபுரிந்து பெரும் பங்களிப்புகள் செய்துள்ளார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஓர் உறுப்பினராகச் சுமார் மூன்று ஆண்டுகளாகக் கடமையாற்றினார். பல்கலைக்கழகப் புலமையாளன் என்ற வகையிலும் தனிப்பட்ட புலமையாளன் என்ற வகையிலும் ஏற்பட்டுள்ள இவருடைய சிறப்பு நிலையில் மேற்குறிப்பிட்ட கௌரவத்தினைப் பெறுவதற்கு நன்கு அருகதையுடையவர்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் சர்வதேச வருகையாளர் நிகழ்ச்சிநிரல் திட்டத்தின்கீழ் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றைத் தரிசித்து பல்கலைக்கழக கல்வித் திட்டங்கள், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியவற்றை மேலும் அறிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டார். 1987இல் இவர் பொதுநலவாய நாடுகளில் பிரயாணம் செய்வதற்கான குறுகிய கால புலமைப்பரிசில் பெற்று ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்றார். இதன் விளைவாக அங்கு சமூக, விஞ்ஞான கற்கைநெறிகளின் பாடத்திட்ட வளர்ச்சி பற்றி அறியும் வாய்ப்பினைப் பெற்றார். இலங்கையில் ஐக்கிய நாடுகளில் சில செயற்றிட்டங்களையும் அதன் தொடர்புள்ள ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளார். யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவராகவும் ஆயுள்கால உறுப்பினராகவும் விளங்குகின்றார். தலைமைத்துவம் வாய்ந்த ஒரு பல்கலைக்கழக புலமையாளனாகவும் வெற்றிகரமான பல்கலைக்கழக நிர்வாகியாகவும் பேராசிரியர் பாலகிருஷ்ணன் பல்கலைக்கழக சமூகத்தின் புலமைசார் திறனுக்கும் நலனுக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்கள் செய்துள்ளார். இவர் மாணவ சமூகத்துடனும் ஆசிரியர்களுடனும் மிகச் சிறந்த நல்லுறவைப் பேணி வந்துள்ளார் என்பது யாவருக்கும் நன்கு தெரியும். இவர் புலமைசார் கல்விக்கே தம்மை அர்ப்பணித்தவர். தென்னிலங்கையிலுள்ள தம்மைப் போன்ற பல்கலைக்கழகப் புலமையாளருடன் நெருங்கிய நல்லுறவுகளைக் கொண்டுள்ளார். கல்வியில் ஈடுபாடுள்ள அறிவுத்திறனுடையவராகவும் வலுவான தாராண்மை, வாய்ந்த முற்போக்கு நோக்குக் கருத்துடையவராகவும் இவர் விளங்குகின்றார். பல்கலைக்கழக சமூகத்திலே தெட்டத்தெளிவான மிகவும் அருகதையுள்ள ஓரிடத்திலே இவர் வகித்துவருகிறார் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**வி.பி.சிவநாதன்,**
*தலைவர், பொருளியற்றுறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

---

பொருளியற் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் தமிழ் மக்களின் பொருளியற் கல்விக்கு 1959ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அரும்பணியாற்றியுள்ளார். தமிழ்மொழிக் கல்விக்கு விரிவுரையாற்ற அஞ்சிய அக்காலத்தில் தானே முன்வந்து தமிழில் பொருளியற் கற்கைநெறியைக் கற்பித்த பெரியவர். இவரது மாணவர்கள்தான் இன்று நிர்வாக சேவையில் முதற்தர உத்தியோகத்தராக உள்ளனர். அரச அதிபர் மார்க்கண்டு, வடகிழக்கு மாகாண பிரதம செயலர் ரங்கராஜா, யாழ்.அரச அதிபர் பத்மநாதன், முன்னைய கல்வி விளையாட்டுத்துறைச்செயலர் சுந்தரம் டிவகலாலா போன்றோரை இன்றும் நாம் காணலாம். இவரது மாணவர்கள்தான் இன்றைய பல்கலைக்கழகங்களில் பொருளியல் பேராசிரியர்களும், துறைத் தலைவர்களும் சிரேஷ்ட விரிவுரையாளர்களும் மற்றும் பேராசிரியர் ம.சின்னத்தம்பி, பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா, கலாநிதி வித்தியானந்தன், பொருளியற்றுறைத் தலைவர் திரு.ப.சிவநாதன் முகாமைக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி திரு.மா.நடராசசுந்தரம் போன்றோர் சில உதாரணங்களாகும்.

இவரது மேற்பார்வையின்கீழேயே வணிகத்துறை விரிவுரையாளர்கள் தமது பட்டப்பின் படிப்பை முடித்துக் கொண்டனர். இவர் அபிவிருத்தி பொருளியல், நாணயப் பொருளியல் என்பவற்றில் சிறந்த விற்பன்னர். சர்வதேச பத்திரிகைகளில் மட்டுமன்றி பல்கலைக்கழக சஞ்சிகைகளிலும் தரமான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஒருநாட்டில் அபிவிருத்திக்கான அடித்தளத்தை இடுவதற்கு இவர் ஆலோசனை மிக அவசியமாகும். இத்தகைய பேராசான் பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிறந்த கௌரவ விருதான (D. Lit.) இலக்கியக் கலாநிதிப் பட்டத்தினை வழங்குவதனூடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது தரத்தினை உயர்த்திக்கொள்கிறது.

**வி.தவசீலன், சி.சிவமைந்தன்**
*மாணவர்கள் சார்பாக, பொருளியற்றுறை.*

(C/9361)

---

# கிளைக்குழுத் தெரிவுக்கான அறிவித்தல்

## நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

### (யா.1662 - 1979.12.05) நெடுந்தீவு

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17ஆம் திகதி 963/1இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இன் ஏற்பாட்டின்படி வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1020/6 இலக்கம்கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்"இன் ஏற்பாடுகளுக்கமைய நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களை நடத்துவதற்கான மேற்படி விதிகளின் பிரிவு 6இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணை பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி விதிகளின் பிரிவு 7இன்படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும் அதன் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரம் அளித்து நியமித்துள்ளேன் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

தவிசாளராக என்னால் பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலரினால் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகம் அளித்து, வாக்களிக்கும் உரிமை பெற்று முழு உறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறிவித்தல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்வு காரணமாக அறிவித்தல்கள் கிடையாது போகும் உறுப்பினர்கள் இந்த அறிவித்தலை தங்களுக்கு தனித்தனி வழங்கப்பட்ட அறிவித்தல்களாகக் கொண்டு குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளிக்கும் படியும் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினராகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தைக் கடந்துவரும் ஒரு பங்கின் முழுப்பெறுமதியான ரூபா 100/-ஐச் செலுத்தி முடித்தவருமான உறுப்பினர் ஒருவரே கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கிளைப்பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கும் உரிமையைப் பெற்று முழு உறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினராகக் கருதப்படுவார்.

ஒவ்வொரு கிளைகளினதும் முழு உறுப்பினர், தகைமை பெற்ற உறுப்பினர் (வாக்காளர்) அட்டவணைகளை சங்கத் தலைமை அலுவலகத்திலும் பார்வையிடமுடியும்.

*857, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**செ.கனகசபாபதி**
*கூ.அ.உ.ஆணையாளர்*

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01. | கோட்டை | க. குகதாசன் | 2002.10.20 | 11.00 | கோட்டைக்கிளை |
| 02. | சாராப்பிட்டி | சீ. புவன்ராஜ் | " | 11.00 | சாராப்பிட்டிக்கிளை |
| 03. | நெடுமத்தி | ஆ. நாகலிங்கம் | | 11.00 | நெடு. மத்திக் கிளை |
| 04. | நெடு. கிழக்கு | செ. திருச்செல்வம் | | 11.00 | நெடு. கிழக்குக் கிளை |
| 05. | மகாவித்தியாலயம் | ஐ. ஜ. நாகேஸ்வரன் | | 11.00 | மகாவித்தியாலயக் கிளை |
| 06. | நெழுவினி | எஸ். கணேசு | | 11.00 | நெழுவினிக்கிளை |
| 07. | தீர்த்தக்கரை | ரி. என். ராஜா | | 11.00 | தீர்த்தக்கரைக் கிளை |

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கத்தால் தயாரித்தனுப்பப்பட்ட வாக்காளர் இடாப்புக்கு அமைவாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் மேற்படி கூட்டம் அழைக்கப்படுகின்றது.

**சு.கணேசலிங்கம்,**
*தலைவர்,*
*நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு*
*2002.10.12*

**இரா.தர்மலிங்கம்,**
*செயலாளர்.*

(சி-24174)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குமாரசாமி சிவபாக்கியம்

காரைநகர், வலந்தலை நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் வசித்தவரும் தற்போது பொஸ்வல் பிளேஸ், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவபாக்கியம் அவர்கள் 09.10.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - நாகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தம்பையா - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகளும் குமாரசாமியின் (குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் - யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் சிவகுமார் (எஸ்.எஸ்.என்ரபிறைசஸ்), சிவமலர் (அமெரிக்கா), திருவரன் (புள்ளிவிவரத் திணைக்களம் - கொழும்பு), சுரேஸ்குமார் (கனடா), விமலகுமார் (குமாரசாமி அன் சன்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதா, உதயகுமார் (அமெரிக்கா), வரதப்பிரியா, துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசலட்சுமி (கனடா), இராசதுரை ஆகியோரின் சகோதரியும் மெதுஷன், கஜன் (அமெரிக்கா), காருண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (13.10.2002) ஞாயிற்று காலை 7.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் 9 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11A, பொஸ்வல் பிளேஸ், வெள்ளவத்தை,*
*கொழும்பு 06. 501185, 360659* (9350)

தகவல்:
த.குமாரசாமி

## திருமதி நடராஜா பொன்னம்மா

காலையடி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி நடராஜா பொன்னம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (10.10.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அருணாசலம் நடராஜா அவர்களின் அன்பு மனைவியாரும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் தர்மதிலகன், காலஞ்சென்ற செல்வரத்தினம் (குஞ்சம்மா) மற்றும் தங்கரத்தினம், நாகரத்தினம், விஜயரத்தினம், இலங்கநாதன், குணபதி, பாலச்சந்திரன், பவளரத்தினம், பிரேமரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2002) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*காலையடி, பண்டத்தரிப்பு.* (9330)
ந.விஜயரட்ணம் (மகன்)

## செல்வி சுரேகா சிதம்பரநாதன் (சூட்டி)

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுரேகா சிதம்பரநாதன் (10.10.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா சிதம்பரநாதன் (மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி) - சரஸ்வதி (பேபி) சிதம்பரநாதன் (தேர்தல் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2002) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை கொற்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அல்லாரை வடக்கு,*
*கொடிகாமம்.* (9365)

தகவல்:
திரு.திருமதி சிதம்பரநாதன் (பெற்றோர்)

# கௌரவப் பட்டங்கள் பெறும் எண்மர்

**யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளை இடம்பெறும் 22ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மூதறிஞர்கள் எண்மர் கௌரவப் பட்டங்கள் பெறுகின்றனர். அவர்கள் தொடர்பான குறிப்புகள் இங்கு இடம் பெறுகின்றன.**

## பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன்

பல்கலைக்கழக முறையிலிருந்து ஓய்வுபெறும்போது(2001) பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன் தொடர்ச்சியாகவும் பாராட்டத்தக்க வகையிலும் நான்கு தசாப்தங்களாக ஒரு பிரபல்யமான பல்கலைக்கழகப் புலமையாளனாகவும், கல்விசார் நிர்வாகியாகவும், பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களிலே சிறப்பாக பணியாற்றிவந்துள்ளார்.

இவர் தமது தொடக்கக் கல்வியினைப் புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலையிலே கற்று, இடைநிலைக் கல்வியினைப் பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரியிலேயே முடித்துக்கொண்டார். இங்கிருந்து பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழத்திலே சேர்ந்தார். அங்கு காலஞ்சென்ற பேராசிரியர் எச்.ஏ.டி.எஸ்.குணசேகர போன்றவர்களிடம் பொருளியலைச் சிறப்புப் பாடமாகக் கற்று நன்கு சித்தியடைந்தார். பின்னர், 1960களிலே பேராதனையிலுள்ள பல்கலைக்கழகத்திலே பொருளியல் துறையிலோர் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

1960களிலே உயர்கல்விக்கான போதனாமொழி ஆங்கிலத்திலிருந்து சிங்களம்/தமிழுக்கு மாற்றமடையத் தொடங்கிற்று. இஃது உயர்கல்வியிலேற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும். பிற்பட்ட பத்துக்களில் இதன் தாக்கம் மிகப் பெரிதாக ஏற்பட்டது. இத்தகைய காலச் சூழ்நிலையிலேதான் பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்மொழிமூலம் பொருளியலைப் பயின்ற மாணவர்களுக்கு இதனைக் கற்பித்தலே முன்னோடி வழிகாட்டியாக முக்கியமான பங்களிப்பினைச் செய்துவந்தார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் இரு தசாப்தங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைகழகத்திலே தொடர்ந்து பணியாற்றியுள்ளார். இங்கே இவர் இளம் பட்டதாரி மாணவர்களுக்குக் கற்பித்தல், ஆராய்ச்சியை முன்னெடுத்தல், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியவற்றிற்குக் குறிப்பிடத்தக்க பெரும் பங்களிப்புக்களைச் செய்துள்ளார். பொருளியல்துறை, வர்த்தகம், முகாமைத்துவத்துறை ஆகியனவற்றின் தலைவராக விளங்கினார். 1984 - 1991 வரையுள்ள காலப்பகுதியில் இவர் கலைப்பீடாதிபதியாகவும், பல தடவைகள் பதில் துணைவேந்தராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். பேராசிரியர் பாலகிருஷ்ணன் 1997 ஆம் ஆண்டு வவுனியாவிலே புதிதாக நிறுவப்பட்ட வளாகத்தின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார். இவ்வகையிலே வன்னியிலே புதிதாக உருவாக்கப்பட்ட இந்த உயர் கல்வி நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்திக்கான அடித்தளத்தினை நன்கு அமைப்பதில் இவர் முழுமூச்சாகப் பணிபுரிந்து பெரும் பங்களிப்புக்கள் செய்துள்ளார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் பல்கலைக்கழக மானிய குழுவின் ஓர் உறுப்பினராகச் சுமார் மூன்று ஆண்டுகளாகக் கடமையாற்றினார். பல்கலைக்கழக புலமையாளன் என்ற வகையிலும் தனிப்பட்ட புலமையாளன் என்ற வகையிலும் ஏற்பட்டுள்ள, இவருடைய சிறப்பு நிலையில் மேற்குறிப்பிட்ட கௌரவத்தைப் பெறுவதற்கு இவர் நன்கு அருகதையுடையவர்.

நா.நடராஜசுந்தரம்
*பீடாதிபதி - முகாமைக் கற்கையியல் வணிகபீடம்.*

★ ★ ★

## பேராசிரியர் செல்வத்துரை பாலச்சந்திரன்

பேராசிரியர் பாலச்சந்திரன் வேலணையில் 1942ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி பிறந்தார். இவர் தனது இளமைக் காலக் கல்வியை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயத்தில் பெற்றபின் 1963ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு அனுமதி பெற்று அங்கு 1967ஆம் ஆண்டு புவியியலில் சிறப்புத் தேர்ச்சிப் பட்டம் பெற்றார். கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பாலச்சந்திரன் 1968ஆம் ஆண்டு உதவி விரிவுரையாளராக இணைந்து கொண்டார். ஐக்கிய இராட்சியத்தின் பேமிங்ஹாம் பிரித்தானிய சபையால் பிறநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளுவதற்கு பிரித்தானிய சபையால் பிறநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசிலை 1973ஆம் ஆண்டு பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 23 வருட கல்விச் சேவையின் போது 1982ஆம் ஆண்டில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் ஆண்டு 1992 இல் இணைப்பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பாலச்சந்திரன் கற்பித்தற் கடமைக்கு மேலதிகமாக ஆறு வருடங்கள் சிரேஷ்ட மாணவ ஆலோசகராகவும், ஏழு வருடங்கள் புவியியற்றுறைத் தலைவராகவும், ஏறத்தாழ இரு வருடங்கள் கலைப்பீடாதிபதியாகவும் சேவைசெய்தார். இக்காலத்தில் பேராசிரியர் பாலச்சந்திரன் பல்கலைக்கழகத்தின் கல்வி வளர்ச்சிக்கு, குறிப்பாக கலைப்பீடத்தின் கல்வி மேம்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்காற்றினார்.

இந்நாட்டின் உயர் கல்விக்கு பெறுமதிமிக்க சேவை செய்ததுடன் பேராசிரியர் பாலச்சந்திரன் நமது பிரதேச அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட ஆராய்ச்சிகளிலும் ஊக்கத்துடன் ஈடுபட்டார். அவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியதுடன் பல மாணவர்களின் கற்கைகளுக்கு வழிகாட்டியாகவும் இருந்துள்ளார்.

பேராசிரியர் க.கந்தசாமி.

★ ★ ★

## தேசமானிய வைத்திய கலாநிதி சுரேந்திரா இராமச்சந்திரன்

1934 மார்ச் 11ஆம் திகதி பிறந்த இவர் பாடசாலைக் கல்வியை றோயல் கல்லூரியில் பெற்று அப்போதைய இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு மருத்துவ பீடத்தில் 1958 இல் எம்.பி.பி.எஸ். பட்டத்தைப் பெற்றார். வைத்திய கலாநிதி இராமச்சந்திரன் பட்டதாரி மாணவர் நிலையில் முதன்மையான பட்டதாரி ஆனார். அவரின் ஆய்வறிவுசார் கல்விப் பதிவு ஒவ்வொரு பரீட்சையிலும் முதலாம் வகுப்பு கௌரவப் பட்டங்கள், பல்வேறு சிறப்புத் தேர்ச்சிகள், தங்கப் பதக்கங்கள் மூன்றாண்டு காலத்தின் போது இறுதி எம்.பி.பி.எஸ். தேர்வின் மிகச் சிறந்த தேர்ச்சிக்காக அளிக்கப்படும் புலமைப்பரிசில் ஆகியனவற்றை உள்ளடக்கும்.

அவரின் ஆய்வறிவு சாதனைகளையும், மருத்துவத்துறைக்கு அவர் ஆற்றிய பணியையும் கௌரவித்து மூன்று மருத்துவ நிபுணர்களின் வேதியல் கூட்டிணைக்கப்பட்ட அமைப்புக்கள் அவருக்கு தோழமை உறுப்பினர் பதவியை அளித்தன. 1988இல் ஏற்கனவே இலங்கை வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தோழமை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட வைத்திய கலாநிதி இராமச்சந்திரன் 1991 இல் அமெரிக்க வைத்திய நிபுணர் சங்க தோழமை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு, தலைசிறந்த கௌரவத்தைப் பெற்றுக்கொண்டார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலான காலப் பகுதியில் வைத்திய கலாநிதி இராமச்சந்திரன் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டாட்டையும் 1994இல் தேசிய கௌரவ நிரலில் தேசமானிய விருது பெற்றமையும் நான் உங்களுக்கு குறிப்பிட்டுக் கூறாவிட்டால் எனது கடமையிலிருந்து நான் தவறியவனாவேன்.

அவர் 1958 தொடக்கம் 1994 வரை சுகாதார அமைச்சில் பணியாற்றினார். 1994இல் கொழும்பு பிரதான வைத்தியசாலையில் ஆலோசனை வழங்கும் வைத்திய நிபுணராக நியமனம் பெற்று 1997இல் ஓய்வு பெறும் வரை அப்பதவியை அணிசெய்தார். ஆலோசனை வழங்கும் வைத்திய நிபுணராக கொழும்பு பிரதான வைத்தியசாலையில் பணியாற்றியபோது அவரின் சொந்தமுயற்சியினால், டணலசிஸ் அலகையும், மருத்துவ தீவிர கண்காணிப்பு அலகையும் நிறுவினார்.

அவர் எமது மருத்துவ பீடத்திற்கு பிணியாய்வு மருத்துவத்திற்காக இராமச்சந்திரன், தங்கப்பதக்கத்தையும், இலங்கை மருத்துவ சங்க ஆய்வறிவு அமர்வுகளில் சிறுநீரகவியலுக்கான பரிசிலையும் அளித்துள்ளார்.

பேராசிரியர் எம்.சிவசூரிய.

★ ★ ★

## திரு. அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை

1929ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 4ஆம் நாள் பருத்தித்துறையில் பிறந்த சோமசுந்தரம்பிள்ளை, மூன்றாந்தர வகுப்புவரையும் பருத்தித்துறை தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் பள்ளியிலே படித்தார். இளம்பள்ளிச் சான்றிதழ் வகுப்புவரை வேலாயுதம் பள்ளியில்(தற்போது வேலாயுதம் மகா வித்தியாலயம்) கற்றார். முதுபள்ளிச் சான்றிதழ் வகுப்புக் கற்றலை ஹாட்லிக் கல்லூரியிலே மேற்கொண்டார். கேம்பிறிட்ஜ் முதுநிலைத் தேர்வுக்குப் பதிலாக முதுபள்ளிச் சான்றிதழ் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டது. திரு.சோமசுந்தரம்பிள்ளை அத்தேர்வு அறிமுகஞ்செய்யப்பட்ட அதே ஆண்டில் ஓர் ஆண்டுக் கற்கையுடனே அதற்குத் தோற்றினார்.

பல்கலைக்கழகம் செல்வதற்கு வயது போதாத காரணத்தினாலே அவர் திருச்சிராப்பள்ளி புனித ஜோசப் கல்லூரியிலே தன்னுடைய பட்டப் படிப்பினை மேற்கொள்ளவேண்டியதாயிற்று.

சென்னைப் பல்கலைக்கழக இளம் பட்டதாரியாக, திரு.சோமசுந்தரம் பிள்ளை 1948 வைகாசித் திங்கள் தொடக்கம் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் ஆசிரியராகத் தன் தொழில் வாழ்வைத் தொடக்கினார். தொழிற் கல்வியை மேற்கொள்ளுவதற்காக 1954இல் ஹாட்லிக் கல்லூரியை விட்டு நீங்கினார். 1957இல் அவர் ஒரு பட்டயக் கணக்காளரானார். பின்னர் 1959 தொடக்கம் 1967வரை வரையறுக்கப்பட்ட இலங்கை அச்சகத்தின் குழுக் கணக்காளராகவும், 1968 தொடக்கம் இன்றுவரையும் வரி மற்றும் முகாமைத்துவ ஆலோசகராகவும், 1982 தொடக்கம் Merchant Finance Ltd இன் முகாமைத்துவப் பணிப்பாளராகவும், அதே ஆண்டு முதல் வரையறுக்கப்பட்ட ஆலோசனை மற்றும் நிதி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவராகவும் முதன்மை நிறைவேற்றுப் பொறுப்பாளராகவும் பணிசெய்துள்ளார். 1980 முதல் 1982வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரவு விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

திரு.சோமசுந்தரம்பிள்ளை பல சேவை நிறுவனங்களுக்கும் தொழில்சார் கல்விச் சபைகளுக்கும் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் புலமையாளனாகவுள்ள அவர் பருத்தித்துறை அரிமாக் கழகத்தின் பட்டயத் தலைவராகவும், உலக அரிமாக் கழகத்தின் வலயத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். புல சமய, சமூக, நலமேம்பாட்டு மன்றங்களின் பெருந்தலைவராகவும் உறுப்பினராகவும் உள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக இருந்து அவர் ஆற்றிய பணி என்றும் நினைவு கூரத் தக்கதாயுள்ளது. 19 ஆண்டுகளாக அவர் பேரவையின் உறுப்பினராக இருந்துள்ளார். பேரவையில் இந்த உயர்கல்வி நிறுவனத்தின் இயல்பான செயற்பாடுக்கு எப்பொழுதுமே உறுதுணையாக இருந்துள்ளார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்.

★ ★ ★

## வாழ்நாள் பேராசிரியர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம

1935 ஆம் ஆண்டு யூன் மாதம் முதலாம் நாள் கரவெட்டியைச் சேர்ந்த நவிண்டிலில் பிறந்த பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் தமது பாடசாலைக் கல்வியை முதலில் கரவெட்டியிலும் பின்னர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் பெற்றார். 1958ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் விலங்கியலைச் சிறப்புப் பாடமாகக் கற்று பட்டதாரியாகிய பின் இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பில் செய்முறை காட்டுநராகப் பணி புரிந்தார்.

1965ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த ஹவாய் பல்கலைக்கழகத்திற்கு கிழக்கு - மேற்கு மைய புலமைப்பரிசில்(East - West Center Scholarship) பெற்றுச் சென்று விஞ்ஞான முதுமாணிப் (M.Sc.) பட்டம் பெற்றார். முதுமாணிப் பட்டம் பெற்ற பின் இலங்கை திரும்பிய பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனையில் உதவி விரிவுரையாளராக 1967 ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். 1970ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்று பேராதனை திரும்பிய பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள், புதிதாக நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தில் 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் விலங்கியல் பேராசிரியராகவும் விலங்கியல் துறைத் தலைவராகவும் நியமிக்கப்படும்வரை, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றினார். யாழ்ப்பாணத்திலும், தாவரவியல், விலங்கியல் துறைகளை ஒழுங்குபடுத்தி அபிவிருத்திசெய்யும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பேராசிரியர் கணேசலிங்கம் 1995 மார்கழி முதல் 1996 நவம்பர் வரை பதிற்பீடாதிபதியாகவும் அதன்பின் மூன்று வருடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பீடாதிபதியாகவும் பணியாற்றினார். 1995 ஐப்பசியில் நாம் ஆறு மாதகாலம் இடம்பெயர்ந்திருந்தபோது விஞ்ஞானபீட ஆய்வுகூடங்களிலிருந்த கோடிக்கணக்கான ரூபா பெறுமதிமிக்க உபகரணங்களை இழந்தோம். அச்சமயம் பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் விஞ்ஞான பீடத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளார்.

பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் பல்கலைக்கழகச் சேவையில் முப்பத்து நான்கு வருடங்கள் மெச்சத்தக்க பணியாற்றிய பின் 2001ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இரண்டாம் நாள் ஓய்வுபெற்றார். தற்போது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

பேராசிரியர் இ.குமாரவடிவேல்,

★ ★ ★

## சிவஸ்ரீ கணபதீஸ்வர குருக்கள் வைத்தீஸ்வரக் குருக்கள்

1916ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இருபத்தியிரண்டாம் திகதி காரைநகரிலுள்ள ஈழத்து சிதம்பரம் எனப் போற்றப்படும் சிவன் கோயிலின் புகழ் பூத்த சிவாச்சாரியாராக விளங்கிய சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களின் மகனாகப் பிறந்த, சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை காரைநகரில் பெற்றபின் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்று வந்த பண்டித ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் கற்றுத் தமிழ்ப் பண்டிதர் தேர்விலும் பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப்பத்திரத் தேர்விலும் சித்தி பெற்றார்.

கொழும்பில் ஆசிரியராக கடமையாற்றிய பொழுது விவேகானந்த சபையினர் நடத்தும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையை நடத்துவதில் முக்கிய பங்குவகித்த இவர் 1940இல் காரைநகரிலே மணிவாசகர் சபையை உருவாக்கி அதன் மூலம் சைவமும் தமிழும் வளரப் பெரும் பணி ஆற்றினார். ஈழத்திலும் தமிழகத்திலும் உள்ள அறிஞர்களை இச்சபை வருடம்தோறும் மார்கழித் திருவாதிரை தினத்திற்கு அழைத்து அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு அச்சாணியாக விளங்கியவரும் குருக்கள் அவர்களே.

நாவலர் பெருமான் மீது பெருமதிப்புக் கொண்டிருந்த குருக்கள் அவர்கள் சைவசித்தாந்தம், திருமுறைகள் ஆகியவற்றின் பெருமையைப் பரப்புவதிலே பெருங் கவனஞ் செலுத்தினார். நாவலர் பிள்ளைத் தமிழ் என்ற நூலையும், நன்னூற் காண்டிகை உரையும், நாவலர் பெருமானும் என்ற நூலையும் புகழ் பூத்த பண்டிதர்களான மு.கந்தையா, கு.ஒ.ஊ. நடராசா ஆகியோர் மூலம் ஆக்கிவித்துப் பதிப்பித்த பெருமைக்குரியவர் இவர்.

குருக்கள் அவர்களின் பணிகளை போற்றிய பல நிறுவனங்கள் சிவத் தமிழ் வித்தகர், மூதறிஞர் போன்ற பட்டங்களை இவருக்கு வழங்கியுள்ளதோடு, கனடா சைவசித்தாந்த மன்றம் இப்பெரியாரைக் கௌரவிக்கும் வகையில் 2001ஆம் ஆண்டு 'வைத்தீஸ்வர மலர்' ஒன்றினைச் சிறப்பாக வெளியிட்டுள்ளது. இப்பெரியாரின் பல்துறைசார் புலமையும் பணிகளும் இம்மலரில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்

★ ★ ★

## திரு. ஆறுமுகம் சபாரத்தினம்

திரு. ஆ.சபாரத்தினம் ஊர்காவற்றுறையில் நாரந்தனை என்னுமிடத்தில் 30.10.1928 அன்று பிறந்தார்.

தமது தொடக்கக் கல்வியினை நாரந்தனை கணேச வித்தியாலயம், சன்மார்க்க போதனா பாடசாலை ஆகியவற்றிலும் பின்னர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றார். இதனையடுத்து, ஆங்கில ஆசிரியப் பயிற்சியினை மஹரகமவில் உள்ள ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பெற்றார். பின்னர் 1964ஆம் ஆண்டில் பேராதனையிலுள்ள இலங்கை பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம், தமிழ்,வரலாறு ஆகிய பாடங்களுடன் கூடிய கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றார். இவர் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் பல்வேறு பாடசாலைகளில் பணியாற்றி நல்லாசிரியனாகக் கல்வித்துறையில் பரிணமித்தார்.

1989 - 1990 ஆம் காலப்பகுதியில் சுவீடனில் உள்ள உப்சலா பல்கலைக் கழகம் இவரை ஆய்வாளனாக அழைத்திருந்தது. அங்கு சமய வரலாற்றுத் துறையில் உள்ள அறிஞர்களுடன் இணைந்து பணியாற்றியதன் மூலம் யாழ்ப்பாணத்து சமயங்கள் பற்றிய நூற்பட்டியலை குறிப்புரைகளுடன் தயாரிப்பதில் தமது பங்களிப்பை நல்கியவர். மேலும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி மேற்கத்தைய அறிஞர்கள் சைவ சித்தாந்த விழுமியங்களை அறிந்துகொள்ளக்கூடிய வகையில் சுவீடனில் உள்ள ஸ்டொஹோம் பல்கலைக்கழகம், உப்சலா பல்கலைக் கழகம், லூண்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அதிதி விரிவுரைகள் நிகழ்த்திய பெருமையும் இவருக்கு உண்டு.

திரு. சபாரத்தினம் இளம் ஆய்வாளர்களுக்கு உதவும் மனப்பாங்கு உடையவர். அத்துடன், பல்வேறு இலக்கிய சமூக நிறுவனங்களில் தம்மை இணைத்து சமூகப்பணியாற்றி வருபவர். 1980முதல் கரம்பன் இலக்கிய வட்டத்தின் தலைவராகவும் சரஸ்வதி பிருந்தாவனம் நம்பிக்கை நிதியத்தின் அமைப்பாளராகவும் தற்பொழுது பொ.கைலாசபதி நூற்றாண்டு நினைவுக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றி வருபவர்.

பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர்

★ ★ ★

## அமரர் சின்னத்தம்பி சிவபாதசுந்தரம்

அளவெட்டிக் கிராமத்தில் 1916 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதி அவதரித்த சி.சிவபாதசுந்தரம் தனது தொடக்கக் கல்வியை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து தனது ஆரம்பக் கல்வியை மலேசியாவிலுள்ள மக்ஸ்வெல் ஆங்கில பாடசாலையில் கற்றவேளை ஒவ்வோர் ஆண்டும் சிறப்புச் சித்தி பெற்ற, பேறு பெற்ற விக்ரோரியாக் கல்வி நிறுவனத்தில் அனுமதி பெற்றார். அங்கு பயிலும்கால் கேம்பிரிஜ் பல்கலைக்கழக மலேசியா பிரதேச பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெற்று அங்கிருந்து இலங்கை மீண்டு கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியில் கற்று, ஆங்கிலத்தில் சிறப்பு கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

தமது 26ஆவது வயதில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் பதவியைப் பெற்றுக்கொண்டார். 1944 ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு வரை வடமாகாணப் பாடசாலைப் பரிசோதகராகப் பணியாற்றினார். 1945ஆம் ஆண்டில் பரமேஸ்வராக் கல்லூரியின் முழு நிர்வாகப் பொறுப்புக்களையும் ஏற்று உதவி அதிபராகச் செயற்படலானார். அதனைத் தொடர்ந்து அக்கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்று அமரர் சேர் பொன்.இராமநாதனது கல்வி சார்ந்த, பண்பாடு சார்ந்த, சமயம் சார்ந்த இலட்சியங்களை அங்கு நடைமுறைப் படுத்தினார். 1968 ஆம் ஆண்டு அவர் மீயுயர் அதிபர் பதவியைப் பெற்று வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்குச் சென்றார்.

1972ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அவர் யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஆலோசகராகவும் துறைசார்ந்த மதியுரையராகவும் நான்கு ஆண்டுகள் பணி புரிந்தார்.

பேராசிரியர் ச.ஜெயராசா.

★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Houda CD - 50 Motorbike உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றெக்ஸ், (ரெயிலர்), 51, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (9324)

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் பெண் நாயும் கறுப்பு நரை, மண்ணிற பொம்மேரியன் ஆண், பெண் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நடராசா, செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (பலாலி றோட், சந்திப்பிள்ளையார் கோவில் அருகில்)

(9276)

நல்ல நிலையில் உள்ள குளிர் சாதனப் பெட்டி (West point - England) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.நடராஜா, 'கைலயங்கிரி' பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்.

(9275)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு தினங்களில் ஸ்ரான்லி வீதி, அத்தியடி உபதபால் கந்தோரில் இருந்து 200 யாரில் அமைந்துள்ள 517 இலக்க இல்லத்தில் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(9326)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் 1Kg 130/-, சுத்தம் செய்யப்பட்டது 1Kg 200/- தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (9318)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு, ஞான வைரவர் கோயிலுக்கு அண்மையில் சேமன்புலம் வீதியில் 6 பரப்புக் காணி சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.சத்தியகுமாரன் மே/பா றோய், தபாற்கந்தோர் லேன், உரும்பிராய் அல்லது 28, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(9341)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 17.10.2002 வியாழக் கிழமை மாலை விநியோகிக்கப்படும். (முன்கூட்டியே பதிவுசெய்யவும்) தொடர்பு: தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9207)

## கோழி தடுப்பு மருந்துகள்

Gampura, Raniket தடுப்பு மருந்துகள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 8.00 மணிக்கும், CRD சளி மருந்து புதன்கிழமை காலை 8.00 மணிக்கும் வழங்கப்படும் (போத்தல் கொண்டு வரவும்). தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(9208)

## கணித வகுப்புகள்

O/L கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இது வரை சித்தியடையாதவர்களுக்கும் 37வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 அல்லது 40 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்கு கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. சந்திக்கும் நேரம் காலை 6.00 - 9.00 மணி. (9308)

## மணமக்கள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972இல் பிறந்த 5'4 1/2" உயரமும், அழகிய தோற்றமும், உயர் கல்வியும், கணனித்துறையிலும கல்விகற்ற மணமகளுக்கும், 1975 இல் பிறந்த 5'11" உயரமுடைய மணமகனுக்கும் தகுந்த டாக்டர், என்ஜினியர், விஞ்ஞானப் பட்டதாரி மணமக்கள் தேவை. தொடர்பு: ஸ்ரீ இராகவேந்திரா, 159, கோயில் வீதி, நல்லூர்.

(9290)

## பாடசாலைக்கு ஜி.ரி.இசற் உதவி

வலிகாமம் தெற்கு,ஒக்.12

தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் மாணவர்களின் உபயோகத்துக்கென 16 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட உள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் முதலாவது தொகுதி கட்டடத்தை கட்டித்தர ஜி.ரி.இசற் நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதேவேளை, இப்பாடசாலை மாணவர்களுக்கு தேவையான மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கவும் ஜி.ரி.இசற நிறுவனம் முன்வந்துள்ளது. (ஒ-152)

## உதவி வழங்குவதில் கைதடியில் பாரபட்சம்

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் கைதடிப் பகுதியில் விநியோகம் செய்யப்பட்ட வீட்டுப் பாவனைப் பொருள்கள், விவசாய உள்ளீடுகள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சென்றடையவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வசதிபடைத்தவர்களுக்கும், விவசாயிகளல்லாதவர்களுக்குமே இவ்வாறு உபகரணங்களும், விவசாய உள்ளீடுகளும் வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (எ-ரி)

## கலைவாணி சனசமூகநிலையம் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணத்தில் வாந்திபேதி போன்ற தொற்றுநோய்கள் பரவுவதைத தடுக்கும் நடவடிக்கையாக வீட்டுக் கழிவுகளை வீதியில் போடாமல் அவைகளை தனியே சேகரித்து வைத்து யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்புச் சேவையாளர்கள் வரும்போது அவர்களிடம் ஒப்படைக்குமாறு ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையம் தமது பகுதியைச் சேர்ந்த மக்களைக் கோரியுள்ளது.

மேலும் வீட்டுக் கழிவுகள், குப்பை கூழங்களை வீதியில் வீசுவதால் துர்நாற்றம் வீசுவதுடன் வீதிப் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சல்களும் உருவாகின்றன எனவும் வீதிகளில் குப்பைகளைப் போடுவதைத் தவிர்க்குமாறும் இந்நிலையம் மக்களைக் கேட்டுள்ளது. (ஒ-51)

# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விப் படிவங்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்குப் பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மட்டும் கீழ் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள உரிய கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப் பணம், பெ.சே.வரி செலுத்துவதன் பேரில் 2002ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 21ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை வழங்கப்படும்.

பூர்த்தி செய்த கேள்விப் பத்திரங்கள் 2002ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பு பதிவு அஞ்சல் மூலமோ அல்லது கேள்விப் பெட்டியிலிடுவதன் மூலமோ ஒப்படைத்தல் வேண்டும். கேள்விக்கான கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 2002ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனை செய்யப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

காரணம் எவையும் காட்டப்படாது எக்கேள்வியையும் ஏற்க அல்லது நிராகரிக்க கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | பெறுமதி சேர்வரி 20% | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. பிள்ளையார் கோயில் வீதி | 250/= | 50/= | 2000/= |
| 02. ஐயனார் கலட்டி வீதி | 250/= | 50/= | 1000/= |
| 03. கோணந்தீவு 2ஆம் வீதி | 100/= | 20/= | 500/= |
| 04. சாத்திரியார் வீதி | 250/= | 50/= | 2500/= |
| 05. கந்த உடையார் வீதி | 250/= | 50/= | 1750/= |
| 06. நாகலிங்க முதலியார் வீதி | 250/= | 50/= | 1500/= |
| 07. யக்கோவளை வீதி | 250/= | 50/= | 1500/= |
| 08. வெளிச்சவீட்டு வீதி | 250/= | 50/= | 3500/= |
| 09. சந்திசீமா வீதி | 250/= | 50/= | 1500/= |
| 10. பெருவெட்டி வீதி | 250/= | 50/= | 2000/= |
| 11. நீர் தொட்டி அமைத்தல் (2) | 250/= | 50/= | 1000/= |

மேலதிக விவரங்களைப் பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ந.சிவபாலதருமகுலசிங்கம்
*செயலாளர்,*
*நகராட்சி மன்றம், பருத்தித்துறை.*

நா.மணிவண்ணன் ஜே.பி.யு.எம்.
*உப-தலைவர்,*
*நகராட்சி மன்றம், பருத்தித்துறை.*

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. 2002.10.09

(சி-24173)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (12.10.2002) யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டத்தைப் பெறும் எமது ஆசிரிய நண்பன்

**திரு.இ.சந்தானபவன் B.A.(Hons)**

அவர்கள் மேலும் பல உயர் கல்விப் பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் வாழவேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றோம்.

*சுழிபுரம்.* (9339)

ஆசிரிய நண்பர்கள்
S.ஜெயக்குமார், S.ஐங்கரன்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (12.10.2002) சனிக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும்
22ஆவது பட்டமளிப்பு விழாவில்
நுண்கலைத்துறையில் (வீணை)
சிறப்புச் சித்தியடைந்து
"இசைக் கலைமாணி" என்ற பட்டம் பெறும்

**செல்வி மகாதேவன் சுதா**

அவர்களை
பாராட்டி வாழ்த்துவதுடன், அவர்கள் மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ, வண்-கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ நு.விவேகானந்தக் குருக்கள் குடும்பத்தினரும்
சிவஸ்ரீ சி.தயாளக்குருக்கள் (கண்ணன் ஐயா)
குடும்பத்தினரும்.

*12, சீனியர் ஒழுங்கை,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

(9333)

# உளங்கனிந்த வாழ்த்துக்கள்

இன்று யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்
. பட்டம்பெறும்

**செல்வன்**
**மனோகரன் ரதீஸ்குமார்**
**(ரமணன்)**



அவர்கள் மேலும் பல பட்டங்கள்பெற்று உயர்வுகளைப் பெறவேண்டுமென



**செல்வன்**
**உதயகுமார் சர்னுகன்**

(விவேகானந்தா சிறுவர் பாடசாலை,
இணுவில் மஞ்சத்தடி)
அவர்கள் தனது உள்ளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறார்.

*மஞ்சத்தடி, இணுவில்.*

(9327)

# 31ஆவது நாள் நினைவஞ்சலியும் இரங்கற் திருப்பலி அழைப்பும்

பிறப்பு
06
-
03
-
1956



இறப்பு
14
-
09
-
2002

## அமரர் தேவதாஸ் இந்திரன்

அன்போடு பேசி ஆதரவோடு இன்முகங்காட்டி
அரவணைத்த அன்பு இதயம் எமை விட்டுப்பிரிந்ததே!
இன்று உமை இதயத்தில் நினைந்து நாங்கள்
ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (12.10.2002) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு றக்கா வீதி, புனித திரேசாள் ஆலயத்தில் நிகழுகின்ற ஆன்ம இளைப்பாற்றுக்கான இரங்கற் திருப்பலியில் பங்குகொள்ள வருமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*2/2, மருதடி லேன்,*
*யாழ்ப்பாணம்.* (9329)

- அன்புத் தாய்,
சகோதரன், பெறாமக்கள்.

# CONVOCATION GREETINGS



## Mr.THAVARAJAH UMESH

*BACHELOR OF BUSINESS ADMINISTRATION*
on 12.10.2002 grand Convocation Ceremony is Conducted by the University of Jaffna On the Verge of time we wish **Mr.T.UMESH** to Succeed in his all attempts and have a brightful future in his life.

*Greeters:* Grandpa, Granny, Father, Mother, Uncles, Aunts, Brothers, Sisters, Cousins, Nephew and Niece.

**Manipay Road, Annaicottai.**

Message form
**Mr & Mrs Mahalingam.**

(9325)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த மாணவி

**செல்வி கெங்காதரன் ஸ்ரீசனா**

அவர்களை மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க தாவடி அம்பலவாண வேதவிநாயகரை வேண்டுகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
சித்தப்பா - (சிறிலக்சுமி தேநீரகம், இணுவில்),
சித்தி - கெஜலக்சுமி, தம்பி யதீசன்,
ஜனார்த்தனன்.

*பிள்ளையார் கோயிலடி,*
*மானிப்பாய் வீதி, தாவடி.*

(9336)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (12.10.2002)சனிக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் எமது நிறுவன ஆசிரியர்

**திரு து.நிரூஷன்** அவர்கள்
B.A.(சிறப்பு)

பட்டத்தைப் பெறுவதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.

**புதிய பாரதி கல்வி நிலையம்,**
**உடுவில்.**

(9344)

## ஆதனம் பற்றிய அறிவித்தல்

மாதகல் கிழக்கு, காஞ்சோண்டி வீதி, 2ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஆதனமான "பள்ளனடைப்பும் கொண்டச்சி புளியடி" நில.பர.பதினெட்டு விஸ்தீரணமுடைய ஆதனம் தற்போது இராஜகாரியார் வீதி, மானிப்பாயில் வதியும் கந்தையா துரைசிங்கம் ஆகிய எனக்குச் சொந்தமும் உரிமையுமாகும் எனவும், குறித்த ஆதனம் எனது ஆட்சியிலேயே உள்ளது என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். இவ் ஆதனம் காலஞ்சென்ற எனது தந்தை மாதர் கந்தையாவுக்கும், பெரியதந்தையார் மாதர் செல்லத்துரைக்கும சொந்தமாக இருந்து அவர்கள் இறக்க என்னை வந்தடைந்த உரிமையுமாகும். தற்போது ஒரு சிலர் எனக்கு தெரியாமல் இவ்வாதனத்தை மோசடியாக விற்றுப் பணம்பெற முயற்சிப்பதாக அறியவந்துள்ளபடியால் வாங்க முற்படுவோர் நலன் கருதி இந்த அறிவித்தலை வழங்குகிறேன்.

**இராஜகாரியார் வீதி,**
**மானிப்பாய்.**

(9352)

உரிமைக்காரன்
**க.துரைசிங்கம்.**


## மிருதங்க வகுப்புகள்

*தென்மராட்சி - நுண்கலை மாணவர்களின் நலன்கருதி*
யாழ்ப்பாண பிரபல மிருதங்க வித்துவான்

**திரு.எஸ்.துரைராஜா ஆசிரியர்**

அவர்களால் எதிர்வரும்(15.10.2002) செவ்வாய்க்கிழமை "விஜயதசமி" தினத்தன்று மிருதங்க வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

*தொடர்புகளுக்கு:*

**A.R.S.பிறின்டேர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி.
(குறிப்பிட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவதால் முந்துங்கள்)

(C/24176)


## இந்தியப் படகுகளை எதிர்த்துப் போராட மீனவர் முஸ்தீபு!

வடமராட்சி,ஒக்.12

வடமராட்சி கடல்பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடித்து இலங்கை மீனவர்களின் தொழில் உபகரணங்களை அபகரித்துவரும் இந்திய இழுவைப் படகு மீனவர்களுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வடமராட்சிப் பகுதி மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இழுவைப் படகுகளில் வரும் இந்திய மீனவர்கள் வடமராட்சி கடல் பிரதேசத்துக்குள் ஊடுருவி மீன்பிடிப்பதுடன், உள்ளூர் மீனவர்களின் மீன பிடி வலைகள் போன்ற தொழில் உபகரணங்களை இழுவைப் படகுகளால் அறுத்து நாசம் செய்து வருகின்றனர்.

இதனால் இதுவரை வடமராட்சி வடக்கைச் சேர்ந்த மீனவர்கள் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களை இழந்துள்ளனர்.

இது தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். அரசாங்க அதிபர், பிரதமர், ஜனாதிபதி, இந்தியத்தூதுவர் ஆகியோருக்கு முறையிட்டும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனை அடுத்தே இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை எதிர்த்துத் போராட்டம் நடத்தப் போவதாக மீனவர்கள் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-173)

## மின்சாரம் தாக்கி சிறுவன் பலி!

யாழ்ப்பாணம்,ஒக்.12

திருட்டுத்தனமாக மின்சார இணைப்பு ஏற்படுத்தியபோது வயரை மிதித்த சிறுவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தான்.

தாவடி தெற்கில் - இச்சம்பவம் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சிவனேசன் டக்ஷன் என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்தவனாவான்.

இச்சிறுவனுடைய தந்தையார் வீட்டுப் பாவனையின் பொருட்டு திருட்டுத்தனமாக மின்சார இணைப்பை ஏற்படுத்தியிருந்ததாகவும் -

மின்சார வயரில் இருந்து வெட்டப்பட்ட பகுதியை இவர் கவனிக்காமல் நிலத்தில் விட்டிருந்ததால் மேற்படி சிறுவன் வயர் வெட்டுப்பட்டிருந்த இடத்தில் கையைப் பிடிக்கவே மின்சாரம் தாக்கி இறந்ததாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

மரணமடைந்த சிறுவனின் உடல் மரண விசாரணையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-5)

## அபிவிருத்திக் கருத்தரங்கு

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைவர் க.கிருஸ்ணன் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-ரி)

## தயாராக்கல் நடவடிக்கைகள்

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஆகியன இணைந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் பல சமூக தயாராக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதன்கீழ் உடுவில் பிரதேசத்தில் ஆறு கொத்தணிகள் அமைக்கப்பட்டு வீடமைப்பு நீர்விநியோகம், பாடசாலை அபிவிருத்திகள் நடைபெற்றுவருகின்றன. (ஒ-152)


### ஜோ - எகட்டனின் ஜெசித்தாரா

வழங்கும்
* தாந்தோரி புரியாணி - சிக்கன்
* குங்குமப்பூ புரியாணி - சிக்கன்

சுடச்சுட உணவுப் பெட்டிகளில்
**விலை 125/- மட்டுமே.**
வழமையான உணவுப் பொதிகள் நண்பகல் 12மணிமுதல் 3மணிவரை.
* மனைக்கு வெளியே ஒரு மனை

**ஜெசித்தாரா**

19/3, கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(9355)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று (12.10.2002) சனிக்கிழமை நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் M.Ed. பட்டம் பெறுகின்ற எமது அன்புக்குரிய ஆசிரியை

**திருமதி பிரபாவதி இராஜசேகரன்** அவர்களை
உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
**யா/ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி.**

(C/24171)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (12-10-2002) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற 22ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டத்தைப் பெறுகின்ற எமது அன்புக்குரிய

**நிரஜா சரவணபவக்குருக்கள்**
*(சிறப்புக்கலை. இந்துநாகரிகம்)*

அவர்களைப் பாராட்டுவதுடன், அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

*'நிராவியடி',*
*யாழ்ப்பாணம்.*

(9364)

சிவஸ்ரீ பரமானந்தக் குருக்கள்
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை
5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2002

| | |
|---|---|
| யோ. கபில்ராஜ் | 151 |
| சு.சுதர்சன் | 138 |
| வி.யுகசிங்கம் | 130 |
| ம.நீலவாணன் | 129 |
| செ.நிசாந்தி | 126 |
| ஜெ.துஷ்யந்தன் | 123 |

மேற்படி பாடசாலை மாணவர்கள் சித்தியடைந்தமையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர்களுக்குக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பெற்றோரும்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும்.**

(C/24172)


## தேவை

வாகனச் சாரதி ஆண்கள்(வயது 35-45)
சமையல் உதவியாளர்கள் பெண்கள்(வயது 25-45)
அலுவலக உதவியாளர்கள் பெண்கள்(வயது 20-25)

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு அனுபவம், கல்வித்தராதரம் உடையவர்கள், கல்விச்சான்றிதழ்களுடனும் அண்மையில் பெற்ற கிராம அலுவலரின் ஒழுக்கச் சான்றிதழுடனும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில்வரவும்.

**"ஜெசித்தாரா" உணவகம்**

19/3, கண்டுக்குளி மகளிர் கல்லூரிமுன் ஒழுங்கை,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

★ நேரத்திலும் பார்க்க கடமை உணர்வுக்கு முன்னுரிமை.

(9354)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய ஆசிரியை

**செல்வி சுஜந்தி தவராசா**

இன்று(12.10.2002) சனிக்கிழமை பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டம் பெறுவதையிட்டு அவரைப் பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்.
கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

(9353)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (12.10.2002) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப் பட்டத்தைப் பெறும் எமது நல்லாசானும் அதிபருமாகிய

**திரு.தம்பிராஜா சாம்சன் ஜோர்த்திஸ்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பழைய மாணவராகிய நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நவீல்ட் பாடசாலை
கைதடி. பழைய மாணவர் சங்கம்.

(9363)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (12.10.2002) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எமது கல்வி நிறுவன ஆசிரியர்களான

வணிகமாணிப் பட்டம் பெறுகின்ற
**S.சுஜாதரன்** B.Com.(M.M.Spl.) H.N.Dip.in Acc.

கலைமாணிப் பட்டம் பெறுகின்ற
**S.ஜெகன்** B.A.(Hons) Geo.Spl.

*ஆகியோரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

**எஸ்ரார் கல்வி நிலையம்,**
சுன்னாகம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(9343)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அன்புக்குரிய ஆசிரியர்

**திரு.பா.தனபாலன் அவர்கள்,**

(உப பீடாதிபதி - கல்வியும் தரமேம்பாடும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

கல்வியியலில் முதுதத்துவமாணிப்பட்டம் (M.Phil in Education) பெற்றதையிட்டு மனதாரப் பாராட்டுவதோடு மேலும் பல சிறப்புக்கள் பெற்று வளமோடு வாழ வாழ்த்துகின்றோம்.

*யா/அராலி சரஸ்வதி ம.வி. அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.* (9377)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பா.அபி.சங்கம்.

# யா/கோப்பாய் மகா வித்தியாலயம் கோப்பாய்

# பரிசில் நாள் - 2002

*காலம்* : நாளை (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை
*நேரம்* : காலை 9.00 மணி
*இடம்* : பாடசாலையின் பிரதான மண்டபம்
*தலைவர்* : திரு.அ.அகிலதாஸ் (அதிபர்)

முதன்மை விருந்தினர்:
**திரு.மா.சின்னத்தம்பி**
(முதுநிலை விரிவுரையாளர் - கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்:
**திரு.இ.சிவஞானசுந்தரம்**
(உதவிக்கல்விப் பணிப்பாளர் - கோப்பாய் கல்விக் கோட்டம்)
**திரு.செ.தயானந்தன்**
(உரிமையாளர், தயா நகைப்பூங்கா, யாழ்ப்பாணம்)

பரிசில் வழங்கல்:
**திருமதி சசிலேகா சின்னத்தம்பி**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

யா/கோப்பாய் மகாவித்தியாலயம் கோப்பாய்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(C-24180)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

இன்று நடைபெறுகின்ற யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஒரேமேடையில் பட்டம்பெறும் தம்பதிகளாகிய

**திரு.திருமதி சுரேஸ் அவர்களை**

மேலும் பல்வேறு சிறப்புகளும் சௌபாக்கியங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(9376) பல்கலைக்கழக நண்பர்கள்.

# நடனவகுப்பு ஆரம்பம்

எதிர்வரும் 15.10.2002 விஜயதசமி தினத்தன்று நடனவகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

ஆசிரியர்: திரு.K.கிருஷ்ணரூபினி
இடம்: கண்ணா வீடியோ சென்ரர், உடுவில்.
நேரம்: மாலை 3.30 மணிக்கு
சேரவிரும்புவோர் முன்கூட்டியே தொடர்புகொள்ளவும். (9368)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பட்டப் பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற எமது கல்லூரி ஆசிரியா **உயர்திரு.காசிப்பிள்ளை சாந்திநாதன்** அவர்களையும்

கலைப்பட்டதாரிப் பரீட்சையில் சித்தியடைந்த **செல்வி சாலினி சவுந்தரநாயகம்** அவர்களையும் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.* (9372)

நலன்புரிச் சங்கம்.

# உளமார வாழ்த்துகின்றோம்

பண்பும் அடக்கமும் தன்னகத்தே கொண்ட பெருமதிப்பிற்குரிய எமது ஆசிரியர்

**திரு.பா.தனபாலன் அவர்களை**

(உப பீடாதிபதி. யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)

முதுதத்துவமாணி M.phil in Education பட்டம் பெற்றதையிட்டு உளமார வாழ்த்துவதோடு மேலும் கல்விச் சேவை சிறக்க. வளமோடு வாழ வாழ்த்துகின்றோம்

**திரு.வி.அம்பலவாணர்** குடும்பத்தினர் (ஓய்வுபெற்ற உப அதிபர்).

*அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.* (9375)

## யாழ்.பல்கலையில் நினைவுப் பேருரைகள்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து எதிர்வரும் 14ஆம், 15ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் கைலாசபதி கலையரங்கில் நினைவுப் பேருரைகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் திருமதி சித்திலேகா மௌனகுரு "தமிழ் இலக்கியத்தில் ஔவைமரவு" என்ற தலைப்பில் நிகழ்த்துவார்.

15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3மணிக்கு பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையில் "ஈழத்தின் தமிழ்க் கூத்தும் கூத்தியல் ஆயவும்" என்ற தலைப்பில் கிழக்கிலங்கை பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் கலாநிதி எஸ்.மௌன குருவும் -

18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3மணிக்கு சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரையில் "நடைமுறையும் நோக்கும்" என்ற தலைப்பில் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விகனேஸ்வரனும் உரையாற்றுவர்.(ஓ-5)

## தாயகம்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டவர்தான் மாலதி. அவரைத் தொடர்ந்து 3 ஆயிரத்து 766 பெண்கள் மாவீரர்களாகி விட்டார்கள். இன்று ஆயிரம் ஆயிரம் பெண்கள் கடலிலும் தரையிலும் பல வெற்றிகளைப் பெற்றுச் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகில் இன்று பல போராட்ட அமைப்புக்களில் பெண்கள் இருக்கின்றார்கள். ஆனால், தாமாகவே படை நடத்தி தாமாகவே தனித்து பல வெற்றிச் சமர்களைப் புரிந்த பெண்கள் தமிழீழத்தில் தான் இருக்கின்றார்கள் .

மாலதி படையணி என்றும் சோதியா படையணி என்றும் திலகா படையணி என்றும் குட்டிசிறி பீரங்கிப் படையணி என்றும சிறுத்தைப் படையணி என்றும் பல படையணிகளாக எமது பெண்கள் வளர்ச்சியடைந்தார்கள்.

தண்ணீருக்கு அடியில் தனது உடலுடன் வெடிகுண்டைச் சுமந்து சென்று எதிரியின் கப்பலுடன் மோதி வெடித்துச் சாதனை நிகழ்த்தி அங்கயற்கண்ணியின் வழியில் பல கடற்கரும்புலிகள் கடற்புலிகள் என பெண்புலிகளை வளர்த்தெடுத்தார் எமது தலைவர்.

15 வருடகாலத்தில் பெண்போராளிகள் ஈட்டிய சாதனை கள் உலகமே வியக்கத்தக்கவை. லெப். கேணல் சுதந்திரா, லெப்.கேணல் செல்வி போன்ற தளபதிகள் இன்று எம்மமிடம் இல்லை. ஆனால், அவர்கள் படை நடத்திப் பெற்ற வெற்றிகள் எம்மிடம உண்டு.

பெண் விடுதலைக்காகக் குரல் எழும்பும் எமது உறவுகளே அந்த விடுதலைக்காக போராடும் பெண் புலிகளுக்கு பக்கபலமாக உங்கள் ஆதரவைக் கொடுங்கள். எமது தேசியத் தலைவரின் காலத்தில் நீங்கள் அந்த விடுதலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

போர்புரிவதிலும் படை நடத்துவதிலும் மட்டும் எமது பெண் புலிகள் நின்றுவிடவில்லை பெண் சமத்துவம், ஒடுக்கப்பட்ட பெண்களுக்கான வேலைத்திட்டம் போன்ற பாரிய பொறுப்புக்களையும் அவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

சில தினங்கள் முன் தென் தமிழீழத்தில் நடந்த படு கொலைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த நிலை நாளை தமிழீழத்தின் ஏனை பகுதிகளில் நடைபெறாது என்பதற்கு என்ன உத்தரவாதம்.

இந்தச் சமாதான சூழலில் இவ்வாறான படை அணிகளின் நிகழ்வுகள் எதற்கு என்று சிலர் சிந்திக்கலாம். எமது சொந்த மண்ணில் சிங்கள இராணுவம் கால் வைத்திருக்கும் வரை இந்தப் படையணிகளின் தேவையும் உண்டு.

இந்த கிளிநொச்சி நகரையும் ஆனையிறவுத் தளத்தையும் வெற்றி கொண்டு மீட்ட அந்தப் போரிலே, மகளிர் படையணிக ளின் பங்களிப்பு மகத்தானதாக இருந்தது. எமது தலைவர் அடிக்கடி கூறுவார் இந்த போரை நடத்துவதற்கு காலம் என்னை நிர்ப்பந்தித்தது என்று. உண்மையில் காலம் தலைவரை மட்டும் நிர்ப்பந்திக்கவில்லை அனைத்துத் தமிழ் மக்களையும் நிர்ப்பந்தித்தது.

ஆனால், அந்த நிர்ப்பந்தத்துக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்று நினைத்தவர் தலைவர்தான். தற்போது ஸ்ரீலங்கா அரசு எம்முடன் அமைதியான முறையில் பேச முன் வந்திருப்பதை நாம் வரவேற்கின்றோம் - என்றார். (ம-4-8-175)

# நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ, கண் பரிசோதனை முகாம்

We Serve

இடம்:- யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி, கல்வியங்காடு.
நாள்/நேரம்:- 13.10.2002 ஞாயிறு காலை 9.00 மணி
மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வோா:
1)லயன் Dr G.பிரதீப்குமார் MBBS
2)லயன் Dr K.லோகநாதன் MBBS
} யாழ்.போதனா வைத்தியசாலை
மற்றும் மருத்துவபீட மாணவர்கள்.

**கண் பரிசோதனை:-**
யாழ்.பிரபல எஸ்.எம் பெனார்ண்டோ ஸ்தாபனத்தினர் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
நீரிழிவு, இரத்த அழுத்தம், கண் பரிசோதனை, பொது மருத்துவம், வாய்ப்புண் தொடர்பான பரிசோதனைகளும், மேலும் வேறு பாரதூரமான நோய்களை இனங்கண்டு மேலதிக சிகிச்சைக்கு சிபார்சு செய்யப்படும்.

**விழிப்புணர்வு:-**
நீரிழிவு, இரத்த அழுத்தம், தற்போதைய வாந்திபேதி, தொற்றுநோய் பாதுகாப்பு சம்பந்தமான மருத்துவர்களால் ஆலோசனை வழங்கப்படும்.

**அனைவரும் வருகைதந்து சுகவாழ்வு பெறவும்.**

எஸ்.சொக்கலிங்கம்
நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர்

இந்நிகழ்விற்கு அனுசரணை வழங்குவோர்:
**செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினரும்.**

(C-24190)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை

பட்டப்பின் கல்வி டிப்ளோமா சிறப்புச் சித்திபெறும்
**திருமதி க.இராஜமனோகரன்** (B.A.Dip. in Ed.)

கலைமாணிப்பட்டம் பெறும்
**செல்வி த.ஜெயகௌரி** (B.A.)

வலிகாமம் கல்வி வலய மட்டத்தில் ஆசிரியர் தினநிகழ்வில் நல்லாசிரியர் விருதுபெற்ற
**திரு.த.வாமதேவன்**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2002 இல் சித்தி பெற்ற மாணவர்கள்
செல்வன் ம.சேயன் - 133
செல்வி சிறி.தெய்விகா - 127
செல்வி சு.சுஜாத்தா - 119

ஆகியோரை மனதார வாழ்த்துகிறோம

*யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை.* (9380)

பாடசாலைச் சமூகம்.

# நல்லாசான் 'சபா' மாஸ்ரர் பெருமை பெறும் நன்னாளில் நாமும் வாழ்த்துகின்றோம் சேர்ந்து



## ஆறுமுகம் சபாரத்தினம் M.A.

குடத்தின் விளக்காய் வாழ்ந்த எம் குருவை
குவலயத்தில் கௌரவிப்பதால் பெரு மகிழ்வுறும்
யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் ஞானத்தால் உணர்ந்த
அவர் அருகதையின் மகத்துவத்தை ஊர்காவற்றுறை புனித
அந்தோனியார் மாணவர்கள் போற்றுவர் என்றும் நெஞ்சில்!

*மேலைக் கோண்டாவில்.* (9381) மேலைக் கரம்பனூரான் கஜ்ரீ

# Lions Club International 306 B

## Leo Region iv

நாளை (13.10.2002)ஞாயிறு சென்.யோன்ஸ் கல்லூரியில் நடைபெறவிருந்த லியோ கழகங்களுக்கான கூட்டம் எதிர்பாராத விதமாக A-9 பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமையால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இங்ஙனம்
(C/24187) *Leo Distric Chairman* ***Lion. C.Balakirishnan.***

# ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் (வ.து)

*12.10.2002ஆம் திகதிய கிளைக்குழு தேர்தல் பின்போடல்*

1.10.2002, 7.10.2002ஆந் திகதிய பத்திரிகைகளிலும், அங்கத்தவர்களுக்கு நேரடியாக தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமையவும் 12.10.2002ஆந் திகதி நடைபெறவிருந்த கிளைக்குழுத் தேர்தல்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளன. கிளைக்குழுத் தேர்தல் நடைபெறும் திகதி பின்னர் பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

தி.சுந்தரலிங்கம் *தலைவர்.*

(C/24187)

ரி.எம்.டொறின் *செயலாளர்.*

## வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு

# இடைக்கால நிர்வாகம் வழங்கப்படும் போது முஸ்லிம் தனிஅலகு பிரச்சினைக்கும் தீர்வு

## ஏக காலத்தில் அறிவிக்கப்படும் என்று பிரதமர் உறுதி

"கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கோரிக்கையான தமக்கென்ற தனிஅலகு விவகாரம் தொடர்பாக இப்போது எதையும் பேசமுடியாது. ஆனால், வடக்கு - கிழக்கு மாகாண தமிழர்களுக்கான இடைக்கால நிர்வாகசபை ஆரம்பிக்கப்படும் போதே அங்கு வாழும் முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கு சமமான அனைத்துச் சலுகைகளும் ஊர்ஜிதப்படுத்தப்படும்."

இப்படிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி அளித்துள்ளார்.

அதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அடுத்த நிதிஆண்டில் கூடுதலான நிதி ஒதுக்கப்படும் எனவும் அவர் உத்தரவாதம் அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தற்போது நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் எம்.பிக்கள், நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை கைவிடுவார்கள் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஜம்இயத்துல் உலமாக்கள், அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் பிரதமரைச் சந்தித்து பேச்சு நடத்திய பின்னரே இவ்வாறு நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இப்பேச்சுக்கள் நேற்று நண்பகல் நாடாளுமன்றத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றன. அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் கிழக்கு மாகாண ஜம்இயத்துல் உலமாக்கள் சபையின் தலைவர் எஸ்.எச்.ஆதம் பாவா தலைமையிலான உலமாக்கள் இந்தப் பேச்சில் கலந்து கொண்டனர்.

சுமார் 45நிமிடங்கள் நடைபெற்ற பேச்சுக்கள் உணர்வு பூர்வமானதாக அமைந்தன என்றும் பிரதமர் மீது நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும் உலமாக்கள் சபையின் தலைவர் எஸ்.எச். ஆதம்பாவா கூறினார்.

பிரதமரைச் சந்தித்த பின் இப்பிரதிநிதிகள் அமைச்சர் ரவூப் ஷக்கீமின் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் விளக்கமளித்தனர். ஆனால், ரவூப் ஹக்கீம் அங்க பிரசன்னமாகியிருக்கவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள், அடிப்படை உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்கு அரசு உத்தரவாதமளிக்கும் சகல ஏற்பாடுகளையும் அரசு செய்யும்.

அதேவேளை தமிழர்களுக்கான இடைக்கால நிர்வாக முறை ஆரம்பிகப் படும் போது முஸ்லிம்களுக்கும் அதேஅளவு சலுகைகள் வழங்கப்படும். இது தொடர்பாக சமகாலத்தில் அறிவிக்கப்படும் என்றும் பிரதமர் உறுதியளித்தார் - என்று கூறப்பட்டது.

முஸ்லிம்களுக்கான தனி அலகு பற்றிக் கேட்டபோது - சமாதானப் பேச்சின் போது ஏனைய அமைப்புக்களுடனும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்து பேசிய பின்னரே அது பற்றி முடிவு செய்யப்படும் என பிரதமர் உறுதியளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. பிரதமரின் வார்த்தைகளில் தங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள்.

தற்பொழுது நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்து வரும் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனிமேல் பகிஷ்கரிப்பை கைவிடுவார்களா? - என்று கேள்வி எழுப்பப்பட்டது.

"நிச்சயமாக நாம் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசுவோம் அவர்கள் எமது பேச்சைக் கேட்பார்கள் . பகிஷ்கரிப்பை கைவிடுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு" - என ஆதம்பாவா கூறினார். (ம)

# பிரதமர் ரணில் உறுதி வழங்கும் வரை மு.கா.எம்.பிக்களின் பகிஷ்கரிப்பு தொடரும்

## நிர்வாக அலகு கோரிக்கை நியாயம் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு,ஒக்.12

வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு சுதந்திரமான நிர்வாக அலகு ஒன்றை வழங்குவது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்பதை உறுதியாகத் தெரிவிக்கும் வரை முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களின் நாடாளுமன்றப் பகிஸ்கரிப்புத் தொடரும் என்று மு.கா. தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கின்றார்.

அந்த எம்.பிக்களின் கோரிக்கை குறித்து பிரதமருடன் தான் பேச்சு நடத்தியதாகவும் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படும் தீர்வு குறித்து பிரமதரிடமிருந்து உறுதியான பதில் இத வரை கிடைக்கவில்லை என்று அவர் கூறியிரக்கிறார். நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று முன்தினம் தனது உத்தியோகபூர்வ அறையில் பத்திரிகையாளருடன் நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அதிகாரப் பகிர்வையே மு.கா. எம்.பிக்கள் கோருகின்றனர் எனவும் அவர்களின் கோரிக்கை நியாயமானது என்பதை தான் ஏற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்ட அமைச்சர் ஹக்கீம், சமாதானப் பேச்சுக்களில் தான் கலந்து கொள்வது தகுதியானதல்ல என்றால் அதிலிருந்து விலகி வேறு ஒருவருக்கு வாய்ப்பளிக்க தான தயார் எனவும் சொன்னார்.

புலிகள் இயக்கத்துக்கு வழங்கப்படும் இடைக்கால நிர்வாகத்தில் தமக்குப் பாதுகாப்பு இல்லையென்ற கருத்து முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. எனவும் அமைச்சர் ஹக்கீம் சொன்னார். (ம)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

### 22ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா - 2002

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 22ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் ஏற்கனவே அறிவித்தபடி இன்று (12.10.2002) சனிக்கிழமை நடைபெறுவதற்குப் பதிலாக மறுநாள் 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை 12ஆம் திகதிய ஒழுங்கின் பிரகாரம் நடைபெறுமென அறியத்தருகின்றேன்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C-24191)

# முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளை அரசு முழுமையாக அங்கீகரிக்கிறது

## பிரதமரின் அலுவலகம் நேற்று அறிக்கை

கொழும்பு,ஒக்.12

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள், பாதுகாப்பு, கௌரவம், செமநலன்கள் போன்றவற்றை அரசு முழுமையாக அங்கீகரிப்பதாக பிரதமர் உறுதியளித்துள்ளார்.

இனப்பிரிசினைக்கான தீர்வு முயற்சிகளில் அதிகாரங்கள் கைமாறுகின்ற இறுதித்தீர்வு எட்டப்படுகின்ற போது சகல சமூகத்தையும் சேர்ந்தோரின் பாதுகாப்பு, கௌரவம் என்பன உறுதிசெய்யப்படும்.

- இவ்வாறு பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் வாழவும், சொத்துகளுக்கு உரிமை கோரவும் முடியும். அதற்கு இடையூறு விளைவிக்கப்படமாட்டாது. எனவே, முஸ்லிம் மக்கள் தமது செயற்பாடுகளை எவ்வித தடையுமின்றி மேற்கொள்ள - செயற்றிறன் வாய்ந்த - சட்ட அரசமைப்பு ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசு ஏற்படுத்தும் எந்தவொரு உடன்பாடு காரணமாகவும் முஸ்லிம்களின் தனிப்பட்ட பாதுகாப்பு, சமூக, அரசியல், கலாசாரஉரிமைகள் சீகுலைக்கப்படமாட்டாது.

முஸ்லிம் மக்களுக்கு வடக்கு-கிழக்கில் பிரத்தியேகமான பிராந்திய அலகு ஒன்றை நிறுவவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது. இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களை மீண்டும் தனித்தனி மாகாணங்களாக மாற்றுவது பற்றியும் பல கட்சிகள் குரல் கொடுத்து வருகின்றன.

முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கை குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற வகையில் அரசமைப்பு ரீதியான மாற்றுத் திட்டங்களை அரசு முன்வைக்க வேண்டும். (ம)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி காசிநாதன்

(மாருதி வான் உரிமையாளர்)

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமான சின்னத்தம்பி காசிநாதன் நேற்று (11.10.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (தியாகராசா, அதிபர்) - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக்கணவரும் சுரேகா (சுவீடன்), சுவர்ணா, சுகுணா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அகிலனின் (சுவீடன்) மாமனாரும் தங்கரெத்தினம், அம்பலவாணர் (பதுளை), சரவணமுத்து (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், கந்தசாமி ஆகியோரின் சகோதரரும் மற்றும் பத்மலீலா (சுவிஸ்), பத்மராணி (பிரான்ஸ்), சந்திரா (கிராம அலுவலர் - புங்குடுதீவு), மனோகரன் (கனடா), பத்மஞானம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சர்வலோகநாதன் (சுவிஸ்), பஞ்சலிங்கம் (பிரான்ஸ்), பிறேமகுமாரி, யோகச்செல்வி, யோகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும், ஆரதியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*15. ஆஸ்கிரிய மாவத்தை*
*களுபோவலை, தெகிவளை.*
*T.P.No:- 072892567* (9385)

தகவல்:
கு.சந்திரா
(கிராம அலுவலர், புங்குடுதீவு)

### திருமதி தம்பு பொன்னம்மா

கல்விங்காட்டைப் பிறப்பிடமாகவும், கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பு பொன்னம்மா நேற்று (11.10.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தம்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் ஆனந்தநடராசா (காசாளர், நல்லூர் ப.நோ.கூ.ச.), சண்முகராசா (ஜேர்மனி), நிகிலதேவி (லண்டன்), நிவேதிதாதேவி (பிரான்ஸ்), ஈஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற லலிதாதேவி மற்றும் பேரின்பநாயகம் (லண்டன்), பத்மினி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), தனேஸ்வரி (ஜேர்மனி), தேவகரன் (பிரான்ஸ்), பாஸ்கரன் ஆகியோரின் மாமியும் கணேசமூர்த்தி, சாந்தி, ஜெயகௌரி, நிரோசியா, திலீபன், ஜஸ்மினா, ஜனனி, லக்ஷனா, சயந்தன், மாதங்கன், மாலவன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிற்பகல் 1.00 மணியளவில் கலைமணி வீதி கட்டைப்பிராயில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைமணி வீதி.*
*கட்டைப்பிராய், யாழ்ப்பாணம்.* (9386)

தகவல்:
த.ஆனந்தராசா. (மகன்)

# கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அலகு வழங்குவதை பொ.ஐ.மு.ஆதரிக்கின்றது

## அமுனுகம கூறுகிறார்; அரசு சிறுபான்மை என்கிறார்

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுமானால் முஸ்லிம்களுக்குத் தனியான அலகு ஏற்படுத்தப்படுவதை பொ.ஐ.முன்னணி ஆதரிக்கின்றது என்று முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சரத் அமுனுகம எம்.பி.கூறினார்.

நேற்று முற்பகல் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இதைத் தெரிவித்த அவர், பொ.ஐ.முன்னணியால் முன்னர் தயாரிக்கப்பட்ட தீர்வுப் பொதியில் முஸ்லிம் மக்களுக்கான தீர்வு முன்வைக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

சரத் அமுனுகம மேலும் கூறியதாவது:-

முஸ்லிம் காங்கிரஸினதும் தேசிய ஐக்கிய முன்னணியினதும் கோரிக்கையை பொ.ஐ.முன்னணி ஏற்றுக் கொள்கிறது. பொ.ஐ.முன்னணி 2000 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த தீர்வுத் திட்டத்தை ஐ.தே.க. ஆதரித்திருந்தால் கிழக்கு மாகாணத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்காது.

அத்தீர்வுத்திட்டத்தில் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க தென்கிழக்கு மாகாண சபை யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த யோசனைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமரர் எம்.எச்.எம். அஷ்ரப் தனது இணக்கத்தை தெரிவித்திருந்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் மின்சாரசபை சீர்திருத்தச் சட்டமூலம் மீது நடைபெற்ற வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக 108 வாக்குகளே கிடைத்தன. இதன் மூலம் அரசு சிறுபான்மையாகிவிட்டது தெளிவானதாகும் அந்த வாக்குகளில் தமிழ கூட்டமைப்பு எம்.பி.களின் வாக்குகளும் அடங்குகின்றன. (ம)


## உடன் தேவை

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி விலாஸ்க்கு அனுபவமுள்ள Bill Clerk (சிட்டை எழுதுநர்) உடன் தேவை.

தொடர்பு:-
சரஸ்வதி விலாஸ்
இல.195 (57).
கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
(9384)


# மூன்று சடலங்களும் அடையாளம் காணப்பட்டன

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற சம்பவங்களில் உயிரிழந்த மூன்று தமிழர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கிறிஸ்ரி மயூரன், கோணமுத்து கோணலிங்கம், கிரி ஆகியோரே அந்த மூவருமாவார்.

காயப்பட்ட முப்பத்தைந்து பேரில் 27பேரின் விவரம் வருமாறு:-

பிரசாத்(வயது16), ராஜ்குமார் (வயது26), ரமேஸ்கண்ணா(வயது24), மதிவேந்தன்(வயது34), தனேஷ்குமார் (வயது27), ஆதித்தன்(வயது16), கபூர (வயது32), பிரபாகரன்(18), வசந்தகுமார்(வயது26), பிரபாகரன்(வயது25), பிங்கிராஜா(வயது25), சுரேஷ்குமார் (வயது24), நாதன்(வயது24), கௌரிராஜ்(வயது14), வினேஷ்ராஜ் (வயது 25), கந்தன்(வயது20)சதீஸ்(23), நாகேந்திரா(வயது18), ஜேன்சன் (வயது38), சுப பிரமணியம்(வயது 48), தம்பையா(வயது54), விஜயன் (வயது25), பிரதீப்(வயது19), றோய் ஜோன்சன்(வயது25), அன்ரனிதாஸ் (வயது20), வேலு ஜெயலிங்கம் (வயது20), சதீஸ்(வயது25)

(ம)



திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற சம்பவங்களில் உயிரிழந்தவர்களையும் (இடது, மேலிருந்து கீழாக மூன்று படங்கள்) காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் படங்களில் காணலாம்.

## பிரதமரின் உத்தரவை அடுத்து

# அதிரடிப் படையினர் முகாம்கள் இராணுவத்தினரின் பொறுப்பில்!

கொழும்பு,ஒக்.12

அம்பாறை மாவட்டத்தில் அதிரடிப்படையினர் தங்கியுள்ள முகாம்களில் இருந்து அவர்கள் வாபஸ் பெறப்பட்டு இராணுவத்தினரின் பொறுப்பில் அந்த முகாம்கள் ஒப்படைக்கப்படவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான பணிப்புரையை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கியுள்ளார் என இந்து கலாசார அமைச்சர் தியாகேஸ்வரன் தெரிவித்தார்.

காஞ்சிரங்குடாவில் உயிரிழந்த பொதுமக்களின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய அமைச்சர் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.

மக்கள் தமது அவலங்களை அமைச்சரிடம் தெரிவித்ததுடன் முகாம்களில் இருந்து அதிரடிப் படையினர் வாபஸ்பெறப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

அதிரடிப்படையினர் தமக்கு இழைக்கும் தொல்லைகள் குறித்தும் அவர்கள் எடுத்துக்கூறினர்.

நேற்றிரவு கொழும்பு திரும்பியவுடன் தான் பிரதமருக்கு இது தொடர்பாக எடுத்து விளக்கியதாகவும் - அதையடுத்து பிரதமர் மேற்கண்ட பணிப்புரையை விடுத்துள்ளார் என்றும் அமைச்சர் மேலும் சொனனார்.

இதேவேளை - அம்பாறையில் உள்ள நிலைமை தொடர்பாக அம்பாறை விமான நிலையத்தில் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன்ட் புருகோவிட் மற்றும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுடன் மாநாடு ஒனறையும் அமைச்சர் நடத்தினார்.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த திருக்கோவில், பொத்துவில், அக்கறைப்பற்று ஆகிய இடங்களில் கண்காணிப்புக் குழு அலுவலகங்களைத் திறக்க வேண்டும் என்று அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

அதற்கு முன்னர் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமுக்கு அமைச்சர் சென்று அங்குள்ள படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார். (ம-3)

### விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு,ஒக்.12

ஜே.வி.பி.பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச எம்பியை எதிர்வரும் 28ஆம் திகதி அஜராகுமாறு லஞ்ச புகார்கள் விசாரணை ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

முறையற்ற விதத்தில் சொத்துக்கள் சேர்த்தார் எனக் கூறப்படுவது தொடர்பான ஒரு முறைப்பாடு குறித்து விசாரணை செய்யவே ஆணைக்குழு அவரை அழைத்திருக்கிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன் விமல் வீரவன்ச எம்பி தொடர்பான ஒரு முறைப்பாடு இந்த ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. (ம)

### பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய ஹர்த்தால் காரணமாக யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு வைபவம், யாழ்.கல்வி வலயத்தின் செயலமர்வு உட்பட பல முக்கிய நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளன.

வர்த்தக நிறுவனங்கள், பொது, அரச நிறுவனங்கள் ஆகியவற்றில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டும் -

சோக கீதங்களை ஒலிபரப்பியும் உயிரிழந்த உடன்பிறப்புக்களுக்கு அஞ்சலி செலுத்துமாறும் ஒன்றியம் கோரியுள்ளது.

இந்த ஹர்த்தாலுக்கு சகல சேவைகளையும் சேர்ந்த அமைப்புக்கள் தமது ஆதரவை வெளியிட்டுள்ளன.

வாகனப்போக்குவரத்துக்களை தடைசெய்யும் நோக்கில் வீதித் தடைகளைப் போடவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ம-3-139)

*(ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்கும் அறிக்கைகள் 2ஆம் பக்கத்தில்)*

### யாழ்.இந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தாக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தலையில் காயம் அடைந்த அதிபர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு உடன் அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்ற பின் வீடு திரும்பினார். (ம-3-9-12)

### பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடாதிபதிகள் நேற்றிரவு கூடி ஆராய்ந்தனர்.

இதன் பின்னர் ஏற்கனவே தயாரித்த நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நாளை ஞாயிற்றுக்கிழமை பட்டமளிப்பு விழாவை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு ஆடம்பரமற்ற முறையிலேயே பட்டமளிப்பு விழா நாளை இடம்பெறும் என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ம-3)

## திருமலையில் ஹர்த்தாலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக் காணப்பட்டன.

வீதிகள், சந்திகளில் ஆங்காங்கே ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. இதனால் நகரின் பல பகுதிகளிலும் புகை மண்டலம் காணப்பட்டது. நட்டநடு வீதிகளில் மரக்குற்றிகள், இரும்புக் கேடர்கள், உடைந்த தளபாடங்கள், ட்ரம்கள் போடப்பட்டு வீதிகள் தடை செய்யப்பட்டிருந்தன.

சில இடங்களில் வீதிகளுக்குக் குறுக்காக கற்கள், கண்ணாடித் துண்டுகள், உடைந்த போத்தல் சில்லுகள் என்பனவும் வாரி இறைக்கப்பட்டிருந்தன.

வீதிகளில் டயர் போட்டு எரித்து, போக்குவரத்தைத் தடுக்க முற்பட்ட தமிழ் இளைஞர்களுடன் பெரும்பான்மை இனத்தவர்கள் ஆங்காங்கே முரண்பட்டு மோத முற்பட்டபோதே தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ரயர் போட்டு எரிக்க முற்பட்ட தமிழ் இளைஞர்களை பொலீஸார் தடுத்தனர். சில இடங்களில் இளைஞர்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டது.

கடந்த 4ஆம் திகதி திருமலையில் பெரும்பான்மை இனத்தவர்கள் ஒரு ஹர்த்தால் நடத்தியிருந்தனர். புலிகளின் காவலில் உள்ள இராணுவத்தினர் அறுவரை விடுவிக்கக் கோரி அது நடத்தப்பட்டது.

அந்த ஹர்த்தாலுக்குப் போட்டியாக முழு அளவில் வெற்றியளிக்கும் ஒன்றாக நேற்றைய ஹர்த்தால் அமைந்து விடும் என்ற நிலை ஏற்பட்டதே பெரும்பான்மை இனத்தவரைச் சீற்றம் கொள்ள வைத்ததாகக் கூறப்படுகின்றது. தமிழ் இளைஞர்களுடன் பல இடங்களில் அவர்கள் வாக்குவாதப்பட்டனர்.

"நீங்கள் ஹர்த்தால் நடத்தி, ரயர்களை வீதிகளில் போட்டு எரித்த போது நாம் தடுத்தோமா? உங்களைக் குழப்பினோமா?" - என்று கேட்டு தமிழ் இளைஞர்கள் ஆங்காங்கே தமது ஹர்த்தால் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நகருக்கு அப்பால் திருக்கடலூரில் ஊர்காவல் படையினருடன் வந்த சிலர் தமிழ் இளைஞர்கள் மீது கிரனேட் வீசினர். இதில் நான்கு தமிழர்கள் காயமடைந்தனர்.

அன்புவழிபுரம், லிங்கநகர்ப் பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் மீது கிரனேட் வீசி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் மூவர் உயிரிழந்தனர்; 12 பேர் காயமடைந்தனர்.

உப்புவெளி - கிருஷ்ணபுரி, செல்வநாயகபுரம், சிறிமாபுரம், காந்திநகர், மட்கோ உட்பட நகரை அண்டிய பல பகுதிகளில் ஆங்காங்கே இடம்பெற்ற இதுபோன்ற சம்பவங்களில் மேலும் 19பேர் காயமுற்றனர். உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஒருவரும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

புறநகர்ப் பகுதியில் காயமடைந்தவர்களை அவசர சிகிச்சைக்காக திருகோணமலை நகர வைத்தியசாலைக்கு எடுத்து வந்த சமயம், அவர்களை வழிமறித்து மட்கோவிலில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் காயமுற்றோரை வீதி வழியாக வைத்தியசாலைக்கு எடுத்து வர முடியாமல்போயிற்று.

காயப்பட்டோரை மூன்றாம் கட்டை அகதி முகாமுக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து 10ஆம் நம்பர் பகுதிக்கு இடமாற்றி பின்னர் கடல் வழியாகப் படகில் திருமலை வைத்தியசாலைக்கு எடுத்து வரவேண்டியதாயிற்று.

காலை 10 மணிக்கு முன்னர் பல இடங்களிலும் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து திருகோணமலையும் பட்டணமும் சூழலும் அரச அதிபர் பிரிவில் இன்று காலை 6.00மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஊரடங்கு காரணமாக அமைதி நிலை ஏற்பட்டது. எனினும் பதற்றம் தொடர்ந்து நீடிக்கின்றது. (ம-12)

### உறவினர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாழனன்று மாலை அவரவர் வீடுகளுக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டன. பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலம் நள்ளிரவு 12 மணியளவிலேயே போய்ச் சேர்ந்தது.

தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம், தம்பட்டை, ஆலையடி வேம்பு, கோளாவில் உள்ளிட்ட பல தமிழ்க் கிராமங்களூடாக இப்பிரேத ஊர்வலம் சோகமயமான சூழ்நிலையில் இடம் பெற்றது.

பிரேதப் பெட்டி முதல் சகல ஏற்பாடுகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் செய்திருந்தனர். பிரேத ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான பொது மக்களும், விடுதலைப் புலி உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ம)

### ஒத்தாச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது கண்மூடித்தனமான முறையில் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று சரஸ்வதி பூஜையில் கலந்து கொண்ட பின்னர் கோவிலிலிருந்து வந்த பெண்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட பொலீஸார் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸாரே தாக்குதலில் ஈடுபட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பிரதேசத்தில் ஹர்த்தாலால் போக்குவரத்து பாதிப்புற்றுள்ளது. பதற்றமும் நிலவுகின்றது. இதனால் நேற்றுமுன்னிரவுச் சம்பவத்தில் காயப்பட்ட மக்கள் வைத்தியசாலைக்குச் செல்லமுடியாத நிலையிலிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)


சிங்களம்
புதிய பிரிவுகள்
By Mr. A.S மல்வான
✡ ஆரம்பம் : 14.10.2002
✡ பிரிவு 1: 4.00 மணி (ப.நே)
✡ பிரிவு 2: 5.00 மணி (ப.நே)
திங்கள், புதன், வெள்ளி
நியூட்டன்
உயர்கல்வி நிறுவனம்
ஆரியகுளம் சந்தி, யாழ்நகர்.
(9382)

IBMS
ஆரம்பம்
DBA
(Ms Office+SLCDL)
13-10-2002 3.00PM - 5.00PM
701,K.K.S. ROAD, JAFFNA

அரசடி வீதி, கந்தர்மடம்
இணைந்த கணிதம்
A/L 2004
வரிசைமாற்றம் சேர்மானம்
Sat., Sun. 5.45 - 6.45p.m.
(புதிய நேரம்)
ஆரம்பம்: 13.10.2002
BY.செந்தில்நாதன் B.Sc
(9300)

புதிய கணனி வகுப்புகள்
Dip. in Ms Office
ஆரம்பம்: 12.10.2002
மாலை 5 மணி
UNIVAC
College of Computer Information Technology
SITHANKERNY.
(9250)

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. :- 021-2222588(home) 077-174512(hand)
E.mail :- thangan672002@yahoo. com.
கடந்த 6 வருடங்களாக ஆங்கிலம் கற்பிக்கும் கலையின் காரணமாக முல்லை வாழ் மக்களின் மனங்களை வென்ற எமது கல்விச்சாலை தற்போது ஒருமாத காலத்தில் யாழ் நகர் வாழ் மக்களது மனங்களையும்.....?
அநேகரது வேண்டுகோளுக்கிணங்க புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான 10 மாதகால விசேட கற்கை நெறியில் 2001இல் சித்தியெய்தியோரும் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் கட்டணத்தை இரு தடவைகளில் செலுத்தவும் அனுமதிக்கப்படும் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த நாம் மிகவும் மகிழ்வூட்டப்படுகிறோம்.
Sat. and Sun. 9 a.m.
பல்கலை உட்பட எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இலக்கணம் கற்பிக்கப்படும். இதைப் பூர்த்திசெய்து அதற்கான பரீட்சையில் சித்தியடைவோர் மட்டுமே எமது ஏனைய கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்படுவர்.

| Grammar 1000/= மட்டுமே | | ஏனைய பாடநெறிகள் |
|---|---|---|
| Basic Grammar | - 07 hours | ★ Text Books |
| Tenses | - 25 hours | ★ Telling Stories |
| Auxiliary Verbs | -12 hours | ★ Writing Letters |
| Clauses | -10 hours | ★ Writing Essays |
| Conjunction | -10 hours | ★ Cursive Writing |
| Direct & Indirect | -08 hours | ★ Spoken |
| | | ★ Past Papers |

தகவல்:
K.T.Rajah (S.S)
Come and See or Send and See
(9161)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெறுவது.